# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 20 ஞாயிற்றுக்கிழமை (04-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:222


## வாணவேடிக்கை இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை4

தமிழீழ இளையோர் தேசிய விளையாட்டு விழா யாழ. துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று கோலா கலமாக ஆரம்பமாகியது. பல்லாயிரக் கணக்கான விளையாட்டு ரசிகர்கள் நேற்றைய போட்டிகளைக் கண்டு களித்தனர். போட்டிகள் தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

நேற்றைய முதல் நாள் போட்டிக ளின் முடிவிலும் இன்றைய போட்டி களின் இறுதியிலும் கண்கவர் வாண வேடிக்கை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடாகி இருந்தது. எனினும் நேற்று முதல் நாள் நிகழ்ச்சிகளில் இறுதியில் வாண வேடிக்கை நிகழ்ச்சி நடைபெறவில்லை. இதனால் பார்வையாளர்கள் ஏமாற்ற மடைந்தனர்.

தவிர்க்க முடியாத காரணங்களால் நேற்று வாணவேடிக்கையை நிகழ்தத முடியவில்லை என்று போட்டி ஏற்பாட் டாளர்கள் தெரிவித்தனர்.

இன்று மாலை இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின் இறுதியில் பரிசளிப்பு வைபவத்தின் பின்னர் கண்கவர் வாண வேடிக்கை இடம்பெறும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## அம்பாறை இராணுவ முகாம்களில் சிவில் உடையில் வெளிநாட்டினர்?

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஸ்ரீலங்கா படை முகாம்களில் வெளி நாட்டு அதிகாரிகள் சிவில் உடையில் படையினருக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

நம்பிக்கையான வட்டாரங்களை மேற்கோள் காட்டி கிழக்கில் வெளி யாகும் தமிழ்ப் பத்திரிகை ஒன்று இந்தத் தகவலை நேற்று வெளியிட்டி ருக்கின்றது.

அமெரிக்கப் புலனாய்வு அதிகாரி களே சிவில் உடையில் படைமுகாம் களில் தங்கி இருந்து வதிவிடப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறி யிருப்பதாக அப்பத்திரிகை தெரிவித் துள்ளது.

இதேவேளை -

கிழக்கில் படைமுகாம்களைக் கடந்து செல்லும் பொதுமக்களை படை யினர் மறைந்திருந்து வீடியோவில் படம் எடுக்கின்றனர் என்றும் -

படையினரின் இந்நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற் படுத்தியிருப்பதாகவும் அந்தப் பத்தி ரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டிருக்கிறது.

(ஐ)

### தமிழீழக் கொடியேற்ற அனுமதி மறுப்பு:

# நிலாவெளியில் படையினரோடு பொதுமக்கள் நேற்று முறுகல்

## எழுச்சிச் சங்கமம் நிகழ்வின்போது

திருகோணமலை,ஜூலை4

**திருகோணமலை மாவட்டம் நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற தேசிய எழுச்சிச் சங்கமம் நிகழ்ச்சியின்போது ஏற்றப்பட்ட தமிழீழத் தேசியக் கொடியை இறக்குமாறு படையி னர் வற்புறுத்தினர். இதனால், அங்கு படையின ருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது; பதற்றமும் உருவாகியது.**

நண்டநேரம் நீடித்த வாக்குவாதத் தின் பின்னர் படையினர் அங்கிருந்து வெளியேறினர். பின்னர் நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நிலாவெளி தமிழ் மகா வித்தியா லயத்தில் தேசிய எழுச்சிச் சங்கமம் நிகழ்ச்சி நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மாவீரர் ஒருவரின் பெற்றோர் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றியதை அடுத்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்

(20ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழத் தேசிய இளையோர் விளையாட்டு விழாவின் முதல் நாள் போட்டிகளில் ஒரு காட்சி. *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

விரிவான செய்திகள், படங்கள் 2ஆம், 3ஆம் பக்கங்களில்.

## புளியங்குளத்தில் சுமையுந்துப் பிரிவு இயங்காது

யாழ்ப்பாணம்,ஜூலை4

கரும்புலிகள் தினத்தை ஒட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் மறுநாள் காலை 6 மணி வரை புளியங்குளத்தில் உள்ள ஆயப்பகுதியின் சுமையுந்துப்பிரிவு இயங்கமாட்டாது என ஆயப்பகுதி அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண வணிகர் கழகம் இத் தகவலை சகல வர்த்தகர்களுக்கும் அறிவித்துள்ளது. (ஐ-3)

## ஐஸ்கிறீம் வியாபாரி தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஜூலை4

நயினாதீவு உற்சவத்தை ஒட்டி ஆலயப் பகுதியில் ஐஸ்கிறீம் வியா பாரத்தில் ஈடுபட்டிருந்த கடை ஒன் றின் உரிமையாளர் நேற்றிரவு 8.30 மணியளவில் கடற்படையினரால் தாக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காடு விபத்தில் காயமடைந்தவர் மரணம்

### மோட்டார் சைக்கிள் ஓட்டி கைது

யாழ்ப்பாணம்,ஜூலை4

கல்வியங்காடு பகுதியில் பருத் தித்துறை வீதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற மோட்டார் சைக் கிள் - சைக்கிள் விபத்தில் படுகாய மடைந்த ஒருவர் நேற்றுக் காலை மரணமானார்.

பருத்தித்துறை வீதியால் யாழ்ப் பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் அந்த வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வரை விலத்தி முன்னே செல்ல முயன்ற சமயம் சைக்கிளில் சென்ற வர் கீழே வீழ்ந்து படுகாயமடைந்தார் என்று கூறப்படுகிறது.

திருநெல்வேலியைச் சேர்ந்த செல் வரத்தினம் சிவமோகன்(வயது 37) என்பவரே படுகாயமடைந்த நிலை யில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். இவர் நேற்று அதிகாலை அங்கு மரணமானார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு விபத்திலும் பளை வாசி உயிரிழப்பு!

கிளிநொச்சி,ஜூலை4

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் நால் வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியள வில் ஆனையிறவு வீதியில் லொறி யொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக் கிளில் பயணம் செய்த பளை, வண் ணான்கேணியைச் சேர்ந்த கே.மனோ கரன் (வயது 28) என்பவரே விபத்து இடம்பெற்ற இடத்திலேயே பலியானார்.

இவருடன் சென்ற இராமன்தோட் டம், அல்வாயைச் சேர்ந்த நவரத்தினம் (வயது43) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை -

புநகரி - கிராஞ்சியில் இடம்பெற்ற மற்றொரு மோட்டார் சைக்கிள் விபத் தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ந. தவக்குமார்(வயது 24) என்பவரும் -

கிளிநொச்சி திருநகரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த மதிபரன்(வயது 21) என்பவரும் -

(20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து வந்த பேராசிரியருக்கு பல்கலை. மாணவர்கள் கடும் எதிர்ப்பு!

### வளாகப் பகுதியில் நேற்றுக் கண்டனப் பதாகைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை4

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ஒருவர் நேற்று யாழ். பல் கலைக்கழகத்துக்குச் சென்றபோது மாணவர்கள் அவருக்குத் தங்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு உறுப்பினரான பேராசிரியர் சாமுவேல் ரட்ணஜீவன் றொபேர்ட் கூல் என்பவருக்கே மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரி யர் அழகையா துரைராஜா ஞாபகார்த்த நினைவுப் பேருரை கைலாசபதி கலை யரங்கில் நேற்று இடம்பெற்றது.


இந்நிகழ்வில் பல்கலைக்கழகங் களின் மானிய ஆணைக்குழு உறுப் பினரான பேராசிரியர் சாமுவேல் ரட்ண ஜீவன் றொபேர்ட் கூலும் கலந்து கொண்டார்.

இவர் கொழும்பில் இருந்துகொண்டு யாழ். பல்கலைக்கழகத்தின் மனித உரிமைக்கான ஆசிரியர் குழு என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் போராட் டத்தையும் தமிழ்த் தேசியத்தையும் கொச்சைப்படுத்தும் வகையில் கருத் துக்களை வெளியிட்டுவருகிறார் - என்று மாணவர்கள் குற்றஞ்சாட்டினர்.

பல்கலைக்கழகத்தின் உள்ளே யும் வெளியேயும் பதாகைகளைக் கட்டித் தொங்கவிட்டு மாணவர்கள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மாணவர்களால் தொங்கவிடப் பட்ட பதாகைகளில் எழுதப்பட்டிருந்த வாசகங்களில் சில வருமாறு:-

★ மாமனிதர் நினைவுப் பேரு ரையில் துரோகியை அனுமதியோம்!




★ கூல்! கொழும்பில் எம் தேசத்தை விற்பவனே. உடனே வெளி யேறு!

★ கூல் நீ ஒரு தேசத்துரோகி. உனக்கு இங்கு இடமில்லை.

★ கூல், மானமிழந்து வாழ்ப வனே. உன்னை மன்னிக்கமாட்டோம்.

★ கூல் தமிழர் மானத்தை விற் பவனே. எம் மண்ணிற்கு ஏன் வந் தாய்?

இதேவேளை -

மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக் கையில் ஈடுபட்டபோதும் துரைராஜா வின் நினைவுப் பேருரை நிகழ்ச்சி அமைதியாக நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

நினைவுப் பேருரையை மொரட் டுவப் பல்கலைக்கழகத் துணைவேந் தரும் அறிவு விருத்தி தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சின் செயலாளருமான பேரா சிரியர் தயானந்த எஸ்.விஜயசேகரா நிகழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய மற்றும், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி, பேராசிரியர் ப.கோபலகிருஷ்ண ஐயர் உட்பட பீடாதிபதிகள், பேராசிரியர் கள், துறைத் தலைவர்கள், மாணவர் கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஐ-5-12)

## புதிய நீதிமன்ற வளாகத்துக்கு பதினான்காம் திகதி அடிக்கல்

### பிரதம நீதியரசர் வருகின்றார்

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.நீதிமன்ற வளாகக் கட்டடத் துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெற விருக்கின்றது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா இந்நிகழ்வில் கலந்துகொண்டு அடிக்கல்லை நடுவார்.

இந்நிகழ்வில் உலக வங்கியின் உயர் அதிகாரிகளும் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

நிகழ்வை அடுத்து விசேட கூட் டம் ஒன்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

உலக வங்கி வழங்கும் 10 கோடி ரூபா நிதியில் பாரம்பரிய கலை அம் சங்கள் பொருந்தியதாக இந்த நீதி மன்ற வளாகம் அமைக்கப்படவிருக் கின்றது. இந்த வளாகத்தை அமைப் பதற்காக முன்னர் நீதிமன்றம் அமைந் திருந்த பகுதியில் காணப்பட்ட கட் டட இடிபாடுகள் அகற்றப்பட்டுள்ளன.

(ஐ-3-51)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# முதல் நாள் இறுதிப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகள்

யாழ்ப்பாணம்,ஜுலை4

கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படும் இளையோருக்கான தடகள விளையாட்டு விழாவில் நேற்று நடைபெற்ற முதல் நாள் நிகழ்வுகளின் இறுதிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகளின் பெயர் விவரம் வருமாறு:-

## 14 வயதுப் பிரிவு

### ஆண்கள்

**குண்டெறிதல்:**
முதலாமிடம் மு.முகமட் நலீம் (திருமலை), இரண்டாமிடம் வி.தர்சன் (கிளிநொச்சி), ஸ்ரீ.வசநதன் (கிளிநொச்சி).

**உயரம் பாய்தல்:**
முதலாமிடம் வி.விமலஸ்ரீ (அம்பாறை), இரண்டாமிடம் ச.கிரிசாந் (வவுனியா), மூன்றாமிடம் ஜெனிந்திரகாந் (முல்லைத்தீவு).

**நீளம்பாய்தல்:**
பீ.இர்பான் (அம்பாறை), இரண்டாமிடம் வை. அன்வர் (மட்டக்களப்பு), மூன்றாமிடம் எஸ்.சந்திரகுமார் (யாழ்ப்பாணம்).

**200 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் பி.இர்பான் (அம்பாறை), இரண்டாமிடம் மு.முகமட் நலீம் (திருமலை), மூன்றாம் இடம் வி.விமலஸ்ரீ (அம்பாறை).

**ஈட்டி எறிதல்:**
முதலாமிடம் இ.வசந்தன் (முல்லைத்தீவு), இரண்டாமிடம் வி.தர்சன் (கிளிநொச்சி), மூன்றாமிடம் ஸ்ரீ.வசந்தன் (கிளிநொச்சி).

### பெண்கள்

**தட்டெறிதல்:**
முதலாமிடம் லோ.சலுஜா (அம்பாறை), இரணடாமிடம் ச.அனுதனா (வவுனியா).

**குண்டெறிதல்:**
முதலாமிடம் லோ.சலுஜா (அம்பாறை), இரண்டாமிடம் கு.கஜேந்தினி (வவுனியா), மூன்றாமிடம் ச.அனுதனா (வவுனியா).

**200 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் கு.உஷாந்தினி (மன்னார்), இரண்டாமிடம் பி.நித்தியா (கிளிநொச்சி), மூன்றாமிடம் த.மதுரா (யாழ்ப்பாணம்).

**உயரம் பாய்தல்:**
முதலாமிடம் ஜெ.அபிகேசி (திருமலை), இரண்டாமிடம் றொ.துயிலகா (வவுனியா), மூன்றாமிடம் சு.கோகிலவதனி (அம்பாறை).

**நீளம் பாய்தல்:**
முதலாமிடம் இ.பத்மசாந்தினி (கிளிநொச்சி), இரண்டாமிடம் கு.உசாநந்தினி (மன்னார்), மூன்றாமிடம் றொ.துயிலகா (வவுனியா).

**400 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் ஏ.ரணித்தா (முல்லைத்தீவு), இரண்டாமிடம் பஸ்ரீதேவி (மன்னார்), மூன்றாமிடம ந.மேசி (யாழ்ப்பாணம்).

**200 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் இ.வாசுகி (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் எஸ்.வேசினி (அம்பாறை), மூன்றாமிடம் எஸ்.கலைவாணி (வவுனியா).

**உயரம் பாய்தல்:**
முதலாமிடம் பி.கஜிதா (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் செ.கீர்த்திகா (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் க.யோகதர்சினி (வவுனியா).

## 16 வயதுப் பிரிவு

### ஆண்கள்.

**தட்டெறிதல்:**
முதலாமிடம் மு.முகம்மது நிஸ்வி (திருமலை), இரண்டாமிடம் ம.திலீபன் (மன்னார்), மூன்றாமிடம் கொ.நிர்மல் றொட்றிக்கோ (மன்னார்).

**400 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் உ.சுரேஸ் (முல்லைத்தீவு), இரண்டாமிடம் பா.டயான (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் ஏ.ஆர்.ஜாபிர் அகமட் (மட்டக்களப்பு).

**200 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் ம.நேதாஜி (வவுனியா), இரண்டாமிடம் உ.சுரேஸ் (முல்லைத்தீவு), மூன்றாமிடம் இ.நயமுல்லா (திருமலை).

### பெண்கள்

**தட்டெறிதல்:**
முதலாமிடம் சீ.தாரணி (கிளிநொச்சி), இரண்டாமிடம் த.கீர்த்திகா (வவுனியா), மூன்றாமிடம் த.அனுஜா (வவுனியா).

**குண்டெறிதல்:**
முதலாமிடம் சீ.தாரணி (கிளிநொச்சி), இரண்டாமிடம் த.அனுஷா (வவுனியா), மூன்றாமிடம் ஆர்.சுரேஸினி (அம்பாறை).

## 18 வயதுப் பிரிவு

### ஆண்கள்

**1500 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் ப.ருஷாந்தன் (மன்னார்), இரண்டாமிடம் சொ.கிரிஷாந்தன் (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் எஸ்.சுதர்சன் (மன்னார்).

**200 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் கு.முகமது ஹாறின் (திருமலை), இரண்டாமிடம் எம்.எல்.தீபன் (மட்டக்களப்பு), மூன்றாமிடம் இ.எழில்வளன் (மட்டக்களப்பு).

**உயரம் பாய்தல்:**
முதலாமிடம் ந.சஞ்செயன் (முல்லைத்தீவு), இரண்டாமிடம் என்.எ.நிப்ராஸ் (அம்பாறை), மூன்றாமிடம் கே.தவசீலன் (மட்டக்களப்பு).

**முப்பாய்ச்சல்:**
முதலாமிடம் என்.ஏ.நிபராஜ் (அம்பாறை), இரண்டாமிடம் ந.கயேந்திரன் (யாழ்ப்பாண்), மூன்றாமிடம் கு.திலீபன் (மன்னார்).

**ஈட்டி எறிதல்:**
முதலாமிடம் எஸ்.எம்.தமீம் (அம்பாறை), இரண்டாமிடம் எவ்.எலக்ஷன் (மட்டக்களப்பு), மூன்றாமிடம் ஜே.றஜீவ் செபஸ்ரியன் (மன்னார்).

**குண்டு எறிதல்:**
முதலாமிடம் க.அன்றியோ சாம்சன் (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் றா.கிஷாந்ரங்கா (திருமலை), மூன்றாமிடம் த.பரணிதரன் (யாழ்ப்பாணம்).

**400 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் கு.முகமது ஹரீஸ் (திருமலை), இரண்டாமிடம் இ.எழில்வளவன் (மட்டக்களப்பு), மூன்றாமிடம் மா.சுதர்சன் (திருமலை).

### பெண்கள்

**500 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் நா.சோபனா (முல்லைத்தீவு), இரண்டாமிடம் சி.சிவரஞ்சினி (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் சு.கெனற் (மன்னார்).

**ஈட்டி எறிதல்:**
முதலாமிடம் க.சேதுப்பிரியா (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் ந.சுபாஜினி (மன்னார்), மூன்றாமிடம் ச.செல்வகுமாரி (கிளிநொச்சி).

**முப்பாய்ச்சல்:**
முதலாமிடம் கு.சசிகலா (மன்னார்).

**400 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் பு.சிவதர்சினி (மன்னார்), இரண்டாமிடம் சி.யாழினி (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் செ.மொரின் ஜனா (வவுனியா).

### பெண்கள்

**200 மீற்றர் ஓட்டம்:**
முதலாமிடம் கலஸ்ரா றொசானி (திருமலை), இரண்டாமிடம் இ.துவாரகா (கிளிநொச்சி), மூன்றாமிடம் ஆ.பிரியா (அம்பாறை).

**தட்டெறிதல்:**
முதலாமிடம் க.சேதுப்பிரியா (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் அ.பகீனா (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் ரா.காயத்திரி (மன்னார்). (எ-5-13-86-190)

# இளையோர் விளையாட்டு விழா கோலாகலமாக ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம்,ஜுலை4

கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழீழ இளையோருக்கான முதலாவது தேசிய தடகள விளையாட்டு விழா நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். பொது விளையாட்டு அரங்கில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

தமிழீழ விளையாட்டுத் துறையின் இணைப்பாளர் இன்பன் தலைமையில் இடம்பெற்ற இந நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம பரிதி ஏற்றிவைத்தார்.

முன்னதாக, முதலாவது தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழா என்ற வாசகம் பொறிக்கப்பட்ட கொடியினை இப்போட்டிகளில் பங்குபற்றிய பெண் போட்டியாளர்கள் தாங்கிவர கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்பைத் தொடர்ந்து அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் வீர, வீராங்கனைகள் அணிவகுத்துச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரி மாணவர்களின் 'பாண்ட்' அணிவகுப்புக்கு பின்னால் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்ட வீர வீராங்கனைகள் அணிவகுத்துச் சென்றனா.

மரியாதை அணிவகுப்பினை பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர். கி.பாப்பா, யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுபபாளர் கலைவிழி, யாழ். மாவட்ட நாடாளுமனற உறுப்பினா செ.கஜேந்திரன். வடக்குக் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளர் கே.டபிள்யூ. விமலராஜன், மருதங்கேணி உதவி அரச அதிபர் எஸ்.வேலாயுதபிள்ளை, யாழ். மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.செல்வரத்தினம் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

மாவீரர் மேஜர் இன்பனின் தாய், தந்தையர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், உதவிப்பணிப்பாளர் விமலராஜன் மற்றும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுபபாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஒலிம்பிக் தீபத்தை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சி.பாப்பாவினால் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற கனிஷட போட்டியில் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சஞ்சீவ், குண்டெறிதலில் மூன்றாம் இடத்தைப் பெற்ற தாரணி ஆகியோரிடம்

**தொகுப்பு: வசந்தன்**

கையளிக்கப்பட்டு தீபம் ஏற்றிவைக்கப்பட்டது.

விளையாட்டு வீரர்கள் சார்பிலான சத்தியப்பிரமாணத்தை திருகோணமலை மாவட்டத்தைச்சேர்ந்த ரசிவ்ராமும் விளையாட்டுத் தொழிலநுட்ப உத்தியோகத்தர்களுக்கான சத்தியப்பிரமாணத்தை யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத் துறை விரிவுரையாளர் டானியல் மதியழகனும் செய்தனர்.

விளையாட்டுப் போட்டியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்ப உரையினை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா நிகழ்த்தினார். (எ-5,86,190)

# சர்வதேசப் போட்டிகளில் தாயக வீரர்கள் பங்குகொள்ளும் நாள் வெகுதூரத்திலில்லை

## இளையோர் விளையாட்டு விழாவில் பாப்பா உரை

யாழ்ப்பாணம்,ஜுலை4

சர்வதேசப் போட்டிகளில் எமது தாயக வீர, வீராங்கனைகள் பங்கு பற்றக் கூடிய நாள் வெகு தூரத்திலில்லை.

- இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா.

கரும்புலிகள் நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது இளையோருக்கான தேசிய தடகள விளையாட்டுவிழா நேற்று யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கும்போதே பாப்பா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது தாயக வீரர்கள் சர்வதேச மட்டத்தில் என்றோ ஒருநாள் தமது திறமைகளை வெளிக்காட்டி புகழும் பேரும் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. கரும்புலிகளின் தியாகத்தையும் அர்ப்பணிப்புக்களையும் நெஞ்சில் நிறுத்தி தேசியத்திற்காக நாம அனைவரும் பாடுபட வேண்டும்.

இன்று இளையோருக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள் கரும்புலி நாளையொட்டி இடம்பெறுகின்றது.

எமது தேசம் விளையாட்டுத்துறையிலும் தனித்துவம் பெறவேண்டியது அத்தியாவசியமானதாகும்.

எம் மக்கள் உடல், உள ரீதியாக வலுப்பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகவே பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும் நாம் நடத்துகின்றோம்.

கரும்புலிகளின் தியாகமும் அர்ப்பணிப்புகளும் இந்தத் தேசத்தில் உலாவருகின்றது. எம் மக்களுக்கு எதிரான அனைத்துத் தடைகளையும் உடைத்தெறியவேண்டும்.

இந்தவகையில், விளையாட்டுக்குத் தடையாக உள்ள சவால்கள் அனைத்தையும் உடைத்தெறிய வேண்டியதும் அவசியமாகும்.

எமது மக்கள் என்றும் சந்தோஷமாக வாழவேண்டும். எம் இனத்தினுடைய சந்தோஷத்திற்கு ஏதாவது தடைகள் வருமாக இருந்தால் அதனை எந்த வடிவத்திலும் உடைத்தெறிவதில் எமது தலைவர் திடமாக இருக்கின்றார்.

இன்று எம்முன் பட்டொளி வீசிப் பறக்கும் புலிக்கொடி 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவரர்களின் இரத்தத்தாலும் உயிர்த்தியாகத்தாலுமே பறந்துகொண்டு இருக்கின்றது.

இந்த வகையில் அவர்களின் தியாகத்தை நாம் அனைவரும் நெஞ்சில் நிறுத்தி தேசியத்தின் முக்கியத்துவத்திற்காக உழைக்கவேணடும் என்றார். (4-5-86)

# இசைநாடக விழாவில் இன்று

யாழ்ப்பாணம்,ஜுலை4

திருமறைக் கலாமன்றம் நடத்தும இசைநாடக விழாவின இறுதிநாளான இன்றைய தினமும் கருத்தரங்கு, இசை நாடக அளிக்கை என இரண்டு அமர்வுகளாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பகல் நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் ஆரம்பமாகின்றன.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளர் கலாநிதி க.கலாமணி தலைமையில் கருத்தமர்வுகள் நடைபெறும்.

'அரங்கியல் பார்வையில் இசை நாடகம்' என்ற தலைப்பில் பா.அகிலனும், 'ஈழத்துப் பாரம்பரிய கலைவடிவமாக இசைநாடகம் - ஓர் உசாவல்' என்ற தலைப்பில் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கமும், 'இசைநாடகம் எதிர்கொள்ளும் சவால்கள்' என்ற தலைப்பில் க.சிவகுமாரும் கருத்துரை வழங்குவார்கள்.

மதிய இடைவேளையைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு ஆசிரியர் நா.விமலநாதன் தலைமையில் பிற்பகல் அமர்வுகள் இடம்பெறும்.

'ஈழத்தில் கர்நாடக இசைப் பாரம்பரியமும் இசை நாடகமும்' என்ற தலைப்பில் த.றொபேட் கருத்துரை வழங்குவார். தொடர்ந்து கலைஞர்களுடனான கலந்துரையாடல் இடம் பெறும.

இரவு நிகழ்வுகள் மாலை 7 மணிக்கு மன்ற அரங்கில் ஆரம்பமாகின்றன. என்.எஸ்.ஜெயசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி க.சொக்கலிங்கம் கலந்துகொள்கிறார்.

தொடர்ந்து 'அரிச்சந்திரா' இசை நாடகம் இடம்பெறும். இந்த இசை நாடகத்தின் அயோத்திய காண்டம், காசி காண்டம் ஆகிய பகுதிகளை யாழ். இசை நாடக முன்னணிக் கலைஞர்களும் மயான காண்டத்தினை தைரியநாதன் குழுவினரும் அளிக்கை செய்யவுள்ளனர். (9)

# நெடுந்தீவில் இன்று மகாஞான ஒடுக்கம்

நெடுந்தீவு,ஜுலை4

நெடுந்தீவுப் பிரதேச கத்தோலிக்க மக்களிடையில் ஒற்றுமை, நட்புறவு, மனமாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் மகாஞான ஒடுக்க நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

வவுனியாவில் அமைந்துள்ள அமைதியகத்தைச் சேர்ந்த அமலமரித் தியாகிகள் சபைக் குருக்கள்மார் இந்த ஞான ஒடுக்க வழிபாடுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

ஞான ஒடுக்க வழிபாடுகளின் இறுதி நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு நெடுந்தீவு தியோகு கலையரங்கில் நடைபெறும் யாழ் ஆயர் அதிவண. தோமஸ சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறும் இந்த வழிபாடுகளில் யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள்மார் பலரும் கலந்து கொள்வர்.

இன்று மாலை கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (எ-ரி)

# கரும்புலிகள் தினத்தையொட்டிய பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜுலை4

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடத்தப்பட்ட கவிதை மற்றும் சிறுகதைப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட் கிழமை முற்பகல் 11 மணிக்கு மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் பேரவைத் தலைவர் பயகீர்தரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, அரசியற்துறை மகளிர் பொறுபபாளர் செல்வி கலைவிழி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், அகவணக்கம், ஈகச் சுடரேற்றல், மலர்மாலையணிவித்தல் மற்றும் சிறப்புரைகள் என்பனவும் நிகழ்வில் இடம்பெறவுள்ளன. (10)


# சைவசித்தாந்த வகுப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜுலை4

அனைத்துலக சைவக்குருமார் பேரவையினால் நடத்தப்படும் சமஸ்கிருத, இலக்கண, சோதிட, சைவசித்தாந்த வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இந்த ஆரம்ப நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக சைவக்குருமார் ஒன்றிய அதிபதி சிவஸ்ரீ க.நமசிவாயக் குருக்களும் கலந்துகொள்வார்.(எ-5)

# தமிழீழ விளையாட்டு விழாவின் பதிவுகள்


















































# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
11 - 03 - 1944



மறைவு
26 - 06 - 2002

அமரர்

## வல்லிபுரம் தியாகராசா

அவர்கள்

(ஸ்தாபகர், ஐடியல் கிறீம்ஹவுஸ்)

திதி: அபரபக்க துதியை

மின்னாமல் முழங்காமல் பெய்த மழையோ
மின்சாரம் ஒழுக்கூறி வீழ்ந்த நிலையோ
எண்ணாமல் யாமிருக்க இடிதான் வீழ்ந்து
இரு சுக்காய்த் தலை வெடித்துப் போன நிலையோ?

இரண்டுநாள் படுக்கையிலே துடித்துக் கிடந்து
ஏதும் ஒரு வார்த்தை தான் பேசிடாமல்
இயமனுனை இருகையால் ஏந்திக் கொண்டு
எம் இதயம் இன்றைக்கும் பற்றி எரிய

ஈராண்டு கழிந்தாலும் எண்ணி எண்ணி
எம் கண்ணால் நீர்வடிந்து சிந்துதையா

12/5, சந்தன மாதா கோயில் வீதி,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மகள்,
மகன்மார், மருமகன், பேரர்கள்,
சகோதரர்கள்.

(33777) (24)

# உதயன்

## பயங்கரவாதப் பட்டியலில் முதனிலை அமெரிக்காவுக்கே!

சர்வதேசப் பொலீஸ்காரனாகத் தன்னை வரித்துக் கொண்டு -

தங்களின் நியாயமான அபிலாஷைகளுக்காகவும், இருப்புக்கான வாழ்வியல் உரிமைகளுக்காகவும் போராடி வரும இனமக்களை 'பயங்கரவாதிகள்' என்று பட்டம் சூட்டி, தீவிர வாதிகள் என சித்திரித்துக் கொண்டு -

உலகையே தனது வல்லாதிக்கத்தால் அடிமைப்படுத்த முயலும் அமெரிக்காவின் சுதந்திரதினம் இன்றாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில்-

மனித உரிமைகளினதும், சுதந்திரத்தினதும் காவலனாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் அமெரிக்கா, சுதந்திரததுக் காகவும் நியாயமான உரிமைகளுக்காகவும் இரத்தம் சிந்திப் போராடிக்கொண்டிருக்கும் நமது ஈழத்தமிழினம் குறித்து என்ன கருத்துக்கொண்டிருக்கின்றது என்பதை நோக்குவது சாலப் பொருத்தமானதாகும்.

பாரம்பரியமாகவும், காலங்காலமாகவும், பூர்வீகமாகவும் தாம் வாழ்ந்த தாயகப் பூமிக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் ஈழத்தமிழர்கள். இந்தத் தாயகப் பூமியுடனான அவர்களின் பிணைப்பும், ஒட்டுதலும் சில தலைமுறைத் தொடர்புடையதல்ல. அது பல்லாயிரம் ஆண்டுகளாக வழி வழியாக வந்தது. இந்த மண்ணின் சரிதமும் அவர்களின் சந்ததிப் பிணைப்பும் பிரிக்க முடியாதவை. தமது மொழியும், இனமும், தாயகமும், கபளீகரம் செய்யப்படுவதிலிருந்து அவற்றைக் காப்பாற்றவும், தமது இனத்தின் தனித்துவத்தைப் பேணவுமே அவர்கள் தமது உயிரையும் ஈகம்செய்து ஆயுதம் ஏந்திப் போராடுகின்றார்கள்.

இந்தத் தாயகத்துக்கும் - புவியியல் ரீதியான வாழ்வியல் பிரதேசத்துக்கும் - உயிர்வாழ்க்கைக்கும் உள்ள அந்த அர்த்தம் பொதிந்த இணைப்பை - பிணைப்பை - ஒட்டுறவை - ஈழத் தமிழர்கள் புரிந்துகொண்டமாதிரி - உணர்ந்து கொணடது போல - அமெரிக்கர்கள் அனுபவத்தில் உணர்நது, புரிந்து கொண்டிருக்கமாட்டார்கள் என்பது உண்மையே.

ஏனெனில், அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தைச் சற்றுப் பின்னோக்கிப் புரட்டிப்பார்ப்பவர்களுக்கு, அவர்கள் இன்று தமது மண, தமது தாயகம், தமது தேசம் என்று பிற்றும் அந்த நாடடுக்கும் அவர்களது முன்னோர்களான பழைய சந்ததிக்கும் உள்ள தொடர்பு ஆகக்கூடியது ஐந்து நூற்றாண்டுகள் தாம் என்பது புலனாகும்.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த பின்னர், பல்வேறு திசைகளிலிருந்தும் - பல்வேறு நாடுகளிலிருந்தும் - தேசாந்திரம் தேடிவந்து, அந்த மண்ணில் குடியேறிய பல்வேறு இன, மத மக்கள் கூட்டத்தினரே அந்த மண்ணை இன்று தமது தாய்நாடு என்று ஏற்றிப்போற்றிக்கொண்டு 'சுதந்திரம்', 'தாயகம்' பற்றியெல்லாம் புதிய இலக்கணங்கள் கூறிக்கொண்டிருக்கின் றார்கள்.

மண்ணுக்கும், அந்த மண்ணைக் காலங்காலமாகத் தம் தாயகமாகக் கொண்டமைந்த மக்கள் கூட்டத்திற்கும் இடையில் இருக்கக்கூடிய உயிர்ப்பிணைப்பு, வந்தேறு குடிகளின் வழிவழியாக வருபவர்களுக்கு எங்கே புரியப்போகின்றது.

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்காகப் போராடுபவர்கள் புலிகள். தமிழ் மக்கள் தமது ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதை ஜனநாயக முறையிலான தேர்தலின் மூலமும் கூட சர்வதேச உலகுக்கு நிரூபிததிருக்கின்றார்கள்.

ஆனாலும், ஈழத்தமிழர்களின் அதிகாரபூர்வ - சட்ட ரீதியான - தார்மீக வழியிலான - பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதிகள்' பட்டம் சூட்டியுள்ள அமொக்கா, அந்தப் பட்டியலிலிருந்து அவர்களை நீக்கமுடியாது என்றும் அறிவித்திருக்கின்றது.

அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா அண்மையில் அமெரிக்க காங்கிரஸ்குழு முன்னிலையில் இவ்விவகாரம் குறித்து விளக்கம் அளித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதச் செயல்களைக் கைவிடுவதை சொல்லிலும், செயலிலும் உறுதிப்படுத்தும் வரை அவர்களைத் தமது பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலிலிருந்து நீக்கமுடியாது என்ற அமெரிக்காவின் அடம்பிடிப்பை அவர் பிரதிபலித்தார்.

புலிகளைப் பொறுத்தரை அவர்கள் முள்ளை முள்ளால் எடுக்கின்றார்கள் என்பதை இப்பத்தியில் ஏற்கனவே சில தினங்களுக்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தோம். அவர்களுக்கு வேறுவழியில்லை. அடக்குமுறையிலிருந்து, அரச பயங்கரவாதத்திலிருந்து தமது இனத்தைக் காப்பதற்கும், மீட்பதற்கும், தாயகத்தில் நிலைகொண்டிருப்பதற்கும் அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை.

ஆனால், 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம்' என்பது போல புலிகளைப்பார்த்து தங்களைத் தூயவர்களாகக் கருதிக்கொள்ளும் அமெரிக்கர்கள் 'பயங்கரவாதிகள்' என்கின்றனர்.

சர்வதேச ரீதியில் - உலகளாவிய ரீதியில் - பயங்கரவாதத்தை பலஸ்தீனத்திலும், ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் கட்டவிழ்த்துவிட்டு வேடிக்கைபார்க்கும் அமெரிக்கா, நம்மவரைப் பார்த்து 'பயங்கரவாதி' என்று எள்ளி நகையாடுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

ஈராக், அபு-கிறைப் சிறையில் அமெரிக்க இராணுவம் நடந்து கொண்டவிதம் ஒன்றே அதன் 'பயங்கரவாதச்' சாதனைக்கு சான்றிதழாகப் போதுமானது.

கியூபாவின் ஓரத்தில் குவாண்டனாமோ குடாவில் பல நாடுகளையும் சேர்ந்த 595பேரை "பயங்கரக் குற்றவாளிகள்" என்று பொய்ப்பிரசார மூலாம் பூசிக்கொண்டு தடுத்து வைத்திருக்கும் அமெரிக்கா, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள்கூட - அவர்களுக்குரிய சர்வதேச சட்ட நியதி களுக்கு அமைவாக - அந்தக் கைதிகளின் தடுப்புக் காவல் நிலையத்துக்கு விஜயஞ்செய்து அவர்களை நேரில் சந்திக்கும் கடப்பாட்டை நிறைவேற்றவிடாமல் - அந்தக் கைதிகளை நெருங்க விடாமல் தடுத்து - 'பயங்கரவாதம' புரிந்து வருகின்றது.

இவ்வாறு ஒருபுறம் சர்வதேச மட்டத்தில் பல்வேறு குழப்பங்களுக்கும், அழிவுகளுக்கும், நியாயபூர்வமற்ற ஆககிரமிப்புகளுக்கும் காரணமான பயங்கரவாதத்தைப் புரிந்துகொண்டு -

மறுபுறத்தில் விடுதலைப் புலிகள், பலஸ்தீன விடுதலைப் போராளிகள் போன்றவர்களை 'பயங்கரவாதிகள்' என்று அமெரிக்கா பட்டம் சூட்டுவது நகைப்புக்கிடமானது.

ஒரு வாகனத்தில் அதிகம் பேர் செல்வதால்

## யாழ்.கொழும்பு பயணத்தில் அவதியுறும் நோயாளர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.போதனாவைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சையின் பொருட்டு கொழும்புக்கு அனுப்பப்படும் நோயாளர்கள கொழும்பு சென்றடைவதற்குள் நோய் அதிகரிக்கும் அபாய நிலையினைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக நோயாளரால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து அவசர சிகிச்சைகளுக்குரிய எதுவித வசதியுமற்ற பஸ்களிலும், சிறிய அம்புலன்ஸ் வாகனங்களிலும் அதிக நோயாளர்கள ஒன்றாக ஏற்றிக கொழும்புக்கு அனுபபப் படுகின்றனர். இதனால் அவர்களின் உடல் நலக்கேடு மேலும அதிகரிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

சாதாரணமாக ஓர் அம்புலன்ஸ் வாகனத்தில் ஒன்று அல்லது இரண்டு நோயாளர்களை மாத்திரமே வசதியாகப் பயணிப்பதற்கு வசதியமைக்கப்பட்டுள்ளது.

ஆனால், யாழ்.போதனாவைத்தியசாலையிலிருந்து ஒரு அமபுலன்ஸ் வாகனத்தில் சில உதவியாளர் உட்பட 15 முதல் 25 வரையிலான நோயாளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

நெடுந்தூரப் பயணிகள் பஸ்ஸில் கூட வாகனத்தில் இருக்கும் இருக்கைகளுக்கு அளவாகவே ஆள்களை ஏற்றுவது வழக்கம். ஆனால், அனேகமாக இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட நோயாளர்களே வாகனத்தில் ஏற்றி அனுப்பப்படுகின்றனர். இதனால், நோயினால் அவதியுறுவது மாத்திரமன்றி நெருக்கடியாலும் நோயாளர்கள் அவதியுற நேரிடுகின்றது.

தொடரும் இந்த அவல நிலை என்றைக்கு சரியான செயற்பாட்டுக்குத் திரும்பும் என்று நோயாளர்கள் ஏங்குகின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் இதில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ)



யாழ்.வைத்தியசாலையிலிருந்து 10 நோயாளர்கள், ஆறு பராமரிப்பாளர்கள், ஒரு மருத்துவர், இரு பரிசாரகர்கள் ஒரு அம்புலன்ஸ் வாகனத்தில் கொழும்புக்குப் புறப்படுகின்றனர்.

## பெண்ணாக மாற விரும்பிய இளைஞர் அதற்காகச் சத்திரசிகிச்சை செய்தார்!

யாழ்ப்பாணம்,ஜூலை4

தன்னைப் பெண்ணாக மாற்றுவதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் பெருமளவு பணத்தைச் செலவழித்து கொழும்பிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையொன்றில் அறுவைச்சிகிச்சை மேற்கொண்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இந்த இளைஞனின் உடலுறுப்புக்கள் சில நீக்கப்பட்டதுடன் பெண் தன்மைக்குரிய 'ஹோர்மோன்'களைத் தூண்டுவதற்கான சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பிளாஸ்ரிக் சிகிச்சை மூலம் அவர் பெண்ணாக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்: சுமார் 25 இலட்சம் ரூபா செலவில் இவருக்குச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

லண்டனைச் சேர்ந்த நபரொருவருடன் மேற்படி இளைஞன் நீண்டகாலம் நட்பு வைத்திருந்ததாகவும், அந்த நட்புக் காதலாக மாறியதுடன் அவரைத் திருமணம் செய்ய விரும்பியதாகவும் அதற்காகவே இவர் பெண்ணாக மாறவிரும்பியதாகவும் தெரியவருகின்றது.

சத்திரசிகிச்சை முடிவடைந்ததையடுத்து அவர் விரைவில் லண்டன் பயணமாகவுள்ளதாகவும், அறுவைச் சிகிச்சையையடுத்து குறித்த இளைஞர் மகிழ்ச்சியுடன் காணப்படுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (10-ரி)

## கிருபானந்தவாரியாரின் உருவச்சிலை சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதிஷ்டை



யாழ்ப்பாணம்ஜூலை4

திருமுருக கிருபானந்த வாரியாரின் திருவுருவச் சிலை இன்று தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கின்றது.

ஐம்பொன்னாலான இந்தச் சிலை 21 கிலோ கிராம் எடையுடையது. கரம்பனைச் சேர்ந்தவரும், தற்போது லண்டனில் வசித்துவருபவருமான நா.சிவானந்தஜோதி இந்தச் சிலைக்கான நிதியினை வழங்கியுள்ளார்.

இந்தியாவில் வடிகப்பட்டு லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இந்தச் சிலை அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இன்று முற்பகல் 11மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் விசேட பூசை நிகழ்களுடன் இந்தச் சிலை பிரதிஷ்டை செய்யப்படவிருக்கின்றது. இதனையொட்டி அங்கு அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் உட்பட சமயப் பிரமுகர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொள்கின்றனர்.

உலக நாடுகள் பலவற்றிலும் சமயப் பிரசங்கம் செய்த கிருபானந்தவாரியார், இந்தியாவில் உள்ள ஆதரவற்ற சைவச் சிறார்களைப் பராமரிப்பதற்கென சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் ஒவ்வொன்றிற்கும் நிதியுதவி வழங்கிவந்தார். சமயத் தொண்டையும், சமூகத்தொண்டையும் ஒருங்கே செய்து வந்த இவருக்கு இந்தியாவில் மட்டுமல்ல, ஈழத்திலும் சைவர்கள் மத்தியில் நன்மதிப்பும், பக்தியும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (4)

### நாளை

ஆனி 21
திங்கட்கிழமை
(05.07.2004)
திதி : திருதியை
பகல் 10.52 வரை.
நட்சத்திரம்:திருவோணம்
பகல் 7.16 வரை.
சுபநேரம். 11.58 - 1.28
ராகுகாலம்: 7.28 - 8.58
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நம்பிக்கை உண்டானால் வெற்றி நிச்சயம்.

## லண்டன் இந்து இளைஞர் பேரவையின் இசைத்தட்டு, ஒலிநாடா வெளியீடு

### நல்லூரில் புதனன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை4

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் லண்டன் ஈலிங் கனகதுர்க்கையம்மன் ஆலய இந்து இளைஞர் பேரவையினால் உருவாக்கப்பட்ட 'வாசலில் ஒளிவீச்சு' என்ற பக்திப்பாடல், இசைத்தட்டு மற்றும் ஒலிநாடா ஆகியவற்றின் வெளியீட்டு விழா எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவுக்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை வகிப்பார். வரவேற்புரையினை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனும், ஆசியுரையை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் நிகழ்த்தவுள்ளனர்.

### புதுவையின் பாடல்கள்

யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் நா.சணமுகலிங்கன சிறப்புரையாற்றுவார். மதிப்பீட்டுரைகளை கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியர் சபா.ஜெயராசா ஆகியோரும் வெளியீட்டுரையை பொ.ஐங்கரநேசனும் நிகழ்த்துவர்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் இதனை வெளியிட்டுவைப்பார். முதற்பிரதியை வல்லிபுரம் இராசையா பெற்றுக்கொள்வார்.

இதில் இடம்பெற்றுள்ள பாடல்களை கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதியுள்ளார். தென்னிந்தியாவின் பிரபல பாடகர்களான, எஸ்.பி.பாலசுப்பிரமணியம், நித்யஸ்ரீ மகாதேவன், சுவர்ணலதா உன்னிகிருஷ்ணன், சுஜாதா, ஹரிணி ஆகியோர் பாடியுள்ளனர். இலக்கியன் இசையமைத்துள்ளார். (4)



கனடா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் டெறிக்லீ அஞ்சல் தலையை வெளியிட்டு வைக்க திருமதி மைத்திரேயி ஜனார்த்தனம் அதனைப் பெற்றுக்கொள்வதைப்படத்தில் காணலாம். 'தமிழன் வழிகாட்டி' அதிபர் ஏ்சந்தி செல்லையாவும் படத்தில் உள்ளார். படத்தின் உள்ளே அஞ்சல் தலை.

## சாவகச்சேரி முன்னாள் எம்.பிக்கு கனடாவில் அஞ்சல்தலை வெளியீடு

ரொறன்ரோ,ஜூலை4

சாவகச்சேரித் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின வீ.என்.நவரத்தினத்துக்கு கனடிய அஞ்சல் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆதவன் பப்ளிகேசன்ஸின் தமிழன் வழிகாட்டி ஸ்தாபனம் கனடாவில் அஞ்சல் தலையை (முத்திரை) வெளியிட்டுக் கௌரவித்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.என்.நவரத்தினத்தின் 75 ஆவது பிறந்த தின நினைவுதின நிகழ்வுகள் தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கனடாவின் ஸ்காபரோ நகரில் உள்ள ஈஸ்ரவுன் மண்டபத்தில் இளைப்பாறிய அதிபர் அ.பொ.செல்லையாவின் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் வைத்தே அஞ்சல்தலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதேவேளை - தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தின் வீ.என்.நவரத்தினம் ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டத்திற்கென அமரர் நவரத்தினம் குடும்பத்தினர் 10 லட்சம் ரூபாவினை தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த வீ.எஸ்.துரைராஜாவிடம் இந்த வைபவத்தில் வைத்து வழங்கினர்.

மேற்படி நிறுவனத்தின் பெயரில் ஏற்கனவே வைப்பிலுள்ள ரூபா 5 லட்சத்துடன் இந்த அன்பளிப்புத் தொகை வைப்பிலிடப்படடு அடுத்த ஜனவரி முதல் புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என்றும் -

இதன்மூலம், தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஏழைக்குடும்பங்களின் சிறார்கள் பயன்பெறமுடியும் எனவும் சமூக சேவையாளர் வீ.எஸ்.து[illegible] தெரி[illegible]. (ஏ)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஜேர்மன் செப்பெட் அல்ஷேசன் மூன்று மாதங்கள் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கிளின்ரன், களபூமி, காரைநகர். T.P.: 0602 212978 (33731)

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28 ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட 'நாச்சிமா சோலைக்காடு' அல்லது 'சோலை' என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். K.சிவராஜா 'ராஜவாசா' 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இலக்கம் 021-222-3408, 2574199. (33735)

பூச்சி நீக்கிய கறுப்பு நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 73, கொழும்புதுறை வீதி, யாழ்ப்பாணம். (33754)

External TV Tuner Unit for Computer 50, 5ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம். (33750)

லவ் பேர்ட்ஸ் பல நிறங்களில் (கூட்டுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 628/3, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (33770)

ஓவ்செட் பிரிண்டிங் மெசின்கள் Germany, America, Japan இறக்குமதிகளான Hamads Davidson Ryoby புதியதும் பாவனையில் உள்ளதும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தயான் T.P. 0714030035. (33710)

இறைச்சித்தேவைக்கும் இனப்பெருக்கத்திற்கும் உரிய கடாய் ஆடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (33697)

தரமான Prima Broiler, அதிவிசேட பேட்டுக்குஞ்சுகள் 5.7.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm (வட்டுக்கோட்டை)இலும் பெற்றுக்கொள்ளலாம் முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (33483)

தரமான நம்பர் - 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறீமா இன சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 07-07-04 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி T.P. No. 3529, 2867. (33760)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட 36 வயதுடைய இந்து சமய Software Engineerக்கு சிறப்புப் பட்டம்பெற்ற (Degree) மணமகள தேவை.) தொடர்பு: 61-3-95511179, 61-3-95451828 (அவுஸ்) அல்லது தபால தொடர்பிற்கு மட்டும் ச.சுதாகரன் 347/5, கோயில் வீதி, நல்லூர். (33743)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த 1973இல் பிறந்த 6′ உயரம், புநர்பூசம் நட்சத்திரம், 40 கிரகபாவம் சங்கியை கொண்ட சிவில் எஞ்சினியர் மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: ஆனந்தி திருமணசேவை, இல.01 பழம்றோட், கந்தாமடம், யாழ்ப்பாணம். (நேரிலும் தபாலிலும் தொடர்புகொள்ளலாம்). (33769)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 28 வயது, சதய நட்சத்திரமும் சொந்தமாகத் தொழில் புரியும் மணமகனுக்குப் பொருத்தமான மணமகளைத் தாயார் தேடுகின்றார். தொடர்பு: சித்திரா இல்லம் (ஐயாத்துரை கடைக்கருகில்), பாடசாலையடி நாவற்குழி T.P.0776160687 (33766)

## மணமகன் தேவை

தெல்லிப்பழை இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 41 வயதுடைய International School இல் ஆசிரியையும் கொழும்பில் வீடும் சீதனமுள்ள மணமகளுக்கு அதே குடும்பத்தில் கொழும்பு அல்லது யாழ்ப்பாணத்தில் தொழில் புரியும் மணமகன் தேவை. ஜாதகக் குறிப்பு, குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: எஸ்.சிதம்பரநாதன், புங்கடி, கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு, பருத்தித்துறை. (33737)

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், ஆசிரியர்கள், அரச தனியார் பதவி U.K PR உடைய விவாகரத்தான வீட்டுப்பணியில் உள்ள இந்து கிறிஸ்தவ மணமகளின் ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம் ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர் T.P. 07765 28641 021 222 7844. (33763)

## கார் விற்பனைக்கு

13 தொடரிலக்கம் கொண்ட Lancer கார் (GLX Box Model) முற்றிலும் குளிரூட்டப்பட்டது) உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 021 226 3575**

(சி-35978)

## வாகன விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Liteace Van விற்பனைக்குண்டு. தொடர்பு: டாக்டர் K.லோகநாதன், 191, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P. 5058. (33726)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் 1½ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.இல. 2312, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (சி-35933)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்ப அழகான பெண்ணுக்கு 37-45வயதிற்கு இடைபட்ட உத்தியோக ஆசிரிய, சுயதொழில் மணமகன் தேவை. நல்ல வீடும் காணிகளும் பணமுமாக சிறந்த சீதமுண்டு. இங்கிலாந்துப் பிரஜையான முகாமைத்துவ இங்கிலாந்து பட்டதாரியான நல்லநிலையிலுள்ள தம்பியார் மாற்றுச் சம்பந்தத்திற்கு இடமுண்டு. தொடர்பு: விள.இல.2319, மே/பா உதயன். (33695)

1956ஆம் ஆண்டு பிறந்த, அவிட்ட நட்சத்திர பட்டதாரி ஆசிரிய மணமகனுக்கும், 1961ஆம் ஆண்டு பிறந்த திருவாதிரை நட்சத்திர பட்டதாரி ஆசிரிய மணமகளுக்கும் மாற்றுச் சம்பந்தமாகவோ, தனிச் சம்பந்தமாகவோ மணமக்கள் சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். வி.இல2320. மே/பா உதயன். (சி-35991)

## வீடு, வளவு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி சந்தைக்கு அருகில் 9 பரப்புக் காணியும் வீடும் அதற்கு அண்மையில் கிணற்றுடன் 10 பரப்புக் காணியும், 22 பரப்பு வயற்காணியும் விற்பனைக்குண்டு. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

ந.புவிராஜசேகரம்
மே/பா அ.பஞ்சலிங்கம்
கோப்பாய் வீதி, உரும்பிராய் (33765)

## தவறிவிட்டது

பெறுமதிமிக்க தங்க ஆபரணமொன்று 29.06.2004 செவ்வாய்ககிழமை இளவாலையிலிருந்து கந்தரோடை வயலூடாக உடுவிலுக்கு வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொலைபேசிஇல: 0777- 250848 உடன தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (33728)




## உடனடி வேலை வாய்ப்பு

01) தொலைபேசி இயக்குநர் (பெண்கள் மட்டும்)
02) விற்பனையாளர்.

*(மின்சாரப் பொருள்களில் அனுபவம் உள்ளவர்)*

05.07.2004 வரைக்கும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை முழு விவரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

**New Tone Electrical,**
No.: 442, 440, Hospital Rd,
Jaffna.

(சி-35946) (16-19-21) T.P.: 2222037

## 13ஆம் ஆண்டு நினைவு கூருகிறோம்

மலர்வு 25 • 02 • 1935



உதிர்வு 30 • 06 • 1991

**அமரர் வேலாயுதபிள்ளை செல்வரத்தினம்**

*(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)*

*திதி : 04-07-2004*

அப்பா நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஆண்டுகள் பதின்மூன்று போனாலும்
இன்னும் நாங்கள் உங்கள்
இனிய நினைவுகளுடனே வாழ்கின்றோம்.

புகையிரத நிலையப் பக்கம்
எழுதுமட்டுவாள். (33661)

மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 17ஆம் வருட அன்பின் நினைவு

அன்னை மடியில் 1920 - 07 - 15



ஆண்டவன் அடியில் 1987 - 07 - 12

**அமரர் செ.திருநாவுக்கரசு**

(சமாதான நீதிவான், முன்னாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னாள் உடுப்பிட்டி கிராமசபைத் தலைவர்)

**திதி: 2004-07-04**

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு
இன்றுடன் ஆண்டுகள் பதினேழு சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாச விளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தந்தையின் .

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

உங்கள் -
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.* (33759)

## மரண அறிவித்தல்

**செல்வன் ஈஸ்வரலிங்கம் ராகவன்** (M.Sc-Eng.)



ஏழாலை தெற்கு, விழுசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு லண்டனில் வசித்தவரும் ஈஸ்வரலிங்கம் - செல்வதி தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன் ராகவன் 26.06.2004 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் ஜனகன் (பொறியியலாளர் - கனடா), பகீரதி (பட்டதாரி ஆசிரியை), லவகுசன் (கணக்காளர்) ஆகியோரின் பேரன்புக்குரிய சகோதரரும், கவிதாவின் மைத்துனரும், ஸ்ருதியின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் பொரளை ஜெயரட்ண மண்டபத்தில் ஆரம்பமாகி, பின்னர் 5 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்

*தொடர்புகளுக்கு:-*
*த.ஈஸ்வரலிங்கம்*
*35, கௌடான ரோட், தெகிவளை,*
*T.P.:011 4202163* (சி-35976) (37-11-16-36)

தகவல்:
தமிழ்ப் பொதுப்பணி மன்றம்
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

# சமாதான முன்னெடுப்பின் ஓர் அங்கமாக தொழில் பயிற்சி அபிவிருத்தி செய்யப்படும்



**கடமையின் நிமித்தம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள அறிவுவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் தயானந்த எஸ். விஜயசேகரா தமது அமைச்சின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.**

"சமாதான முன்னெடுப்புக்களின் ஓர் அங்கமாக தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சிகளை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

"யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் சமாதானம் உருவானபின் வெறுமனே இருக்க இடமளிக்கக்கூடாது. அவர்கள் தமது வாழ்க்கையை மேம்படுத்த தொழில் நுட்ப ரீதியான பயிற்சி அவசியமாகின்றது".

- இப்படிக் கூறுகின்றார் அறிவு விருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் தயானந்த எஸ்.விஜயசேகரா.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள அவர் உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியில் இக்கருத்தை வெளியிட்டார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா நினைவுரையை நிகழ்த்துவதற்காகவும் -

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் துணைவேந்தர்களின் குழுக்கூட்டத்தில பங்குபற்றுவதற்காகவும் -

யாழ்தொழில் நுட்பக் கல்லூரியைத தரம் உயர்த்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவும் - அவர் இங்கு வந்துள்ளார்.

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் கடந்த 4½வருடங்களாகத் துணைவேந்தராகப் பணியாற்றிவரும் அவர், புதிய அரசில் அறிவுவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில் நுட்பக் கல்வி அமைச்சர் பியசேன கமகேயின் செயலாளராகவும் பதவியேற்றுள்ளார்.

வடக்கு - கிழக்கில் தொழில்நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் கொண்டுள்ள அவர், உதயனுக்கு அளித்த விசேட செவ்வியில் தெரிவித்ததாவது:-

சமாதான முன்னெடுப்புக்களில் ஓர் அங்கமாக வடக்கு - கிழக்கில் தொழில் நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம். கல்வி அபிவிருத்தி ஊடாகச் சமாதானத்தை எட்ட முடியும்.

அந்த வகையில், நிரந்தர சமாதானம் உருவாக இக்கல்வித்துறையிலும் அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்குடன் வடக்கு - கிழக்கில் தொழில் பயிற்சி மற்றும் தொழில் நுட்பக் கல்வியை வளர்க்கத் திட்டம் வகுத்துள்ளோம்.

இந்தத் திட்டத்தின் முதல்கட்டமாக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இக்கல்லூரியைத் தரம் உயர்த்தவேண்டிய உதவிகளை வழங்க கொரிய அரசு முன்வந்துள்ளது.

கடந்த மாதம் 8 ஆம் திகதி கொழும்பில் உள்ள கொரிய நாட்டுத் தூதருடன் கலந்துரையாடினேன். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியைத் தரம் உயர்த்த அவர் உதவ முன் வந்தார்.

இத்திட்டத்துக்கு 2.38 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க அவர் இணங்கினார். இந்த நிதியைப் பெறுவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறவேண்டியிருந்தது.

## சகலருக்கும் தொழிற்கல்வி அதுவே எமது நோக்கம்

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இத்திட்ட வரைவை அமைச்சரவைக்குக் கடந்த 30 ஆம் திகதி சமர்ப்பித்தேன். அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியிருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரிக்குக் கட்டட வசதிகள், உபகரண வசதிகள் வழங்குவது குறித்து ஆராய இங்கு வந்துள்ளேன். இங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவைகளை இனங்கண்டு, உடன் அவற்றை நடைமுறைப்படுத்த விருக்கின்றோம்.

குடாநாட்டில் எதிர்காலத்தில் பெரும் கட்டடப்பணிகள் இடம்பெறவிருக்கின்றன. நிரந்த சமாதானம் ஏற்



*மாமனிதர் பேராசிரியர் அ. துரைராஜா நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழத்தில் பேராசிரியர் விஜயசேகரா நேற்று (03-07-2004) நிகழ்த்தியவேளை எடுக்கப்பட்ட படம். (படம்:வசந்தன்)*

படும்வரை பார்த்துக்கொண்டிருக்காமல் இப்போதே தயாராக வேண்டும். இந்தக் கட்டடங்களை நிர்மாணிக்க எவ்வளவோ மேசன், தச்சுவேலை செய்வோர் உட்பட பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் தேவைப்படுவர். அவர்களை உருவாக்கும் பணிகளை இப்போதே ஆரம்பிக்கவேண்டும். அதற்கு வசதியாகத் தொழில் நுட்பக் கல்லூரியை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது.

நிரந்தர சமாதானச் சூழல் ஏற்பட்டபின் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்புக்களைச் சேர்ந்தவர்களையும் சும்மாவிட முடியாது. அவர்களை இந்தப் பாரிய புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். அதற்கு வசதியாக அவர்களுக்கு இப்போதே தொழில்பயிற்சிகள் வழங்கவேண்டும். இந்தப் பயிற்சிகள் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் தமது வாழ்க்கையை வளமாக்கிக்கொள்வதுடன், புதிய தொழில்நிலையங்களையும் ஆரம்பிக்க வழி ஏற்படும்.

இத்தொழிற் பயிற்சிகளை அவர்கள் பெறுவதன்மூலம் வெளிநாடுகளுக்கும் சென்று வேலைவாய்ப்பைப் பெறமுடியும். அதன்மூலம், அவர்கள் சம்பளம் மூலம் புதிய முதலீடுகளை இங்கு செய்ய வாய்ப்புக் கிட்டும்.

இந்த நாட்டில் சமாதானம் வர வேண்டும். அதன்மூலம், மக்களின் வறுமையைப் போக்கலாம். அத்துடன், உயர்தொழில்நுட்ப அறிவுடைய சமூகம் ஒன்றை உருவாக்கலாம். இந்த நோக்கம் தனிய ஒரு பகுதிக்கு என்று இல்லாமல் வடக்கு - கிழக்கு உள்ளிட்ட சகலருக்குமாக அமையவேண்டும் - என்றார் அவர்.

வன்னிப்பெருநிலப்பரப்பில் தொழில், பயிற்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமா என்று கேட்டதற்கு -

"கொழும்பு திரும்பும்போது கிளிநொச்சியில் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் சாத்தியங்கள் குறித்து ஆராய்வேன். இது தொடர்பாக ஏற்கனவே தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளேன்.

தொழிற்பயிற்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஐநா. அபிவிருத்தித் திட்டம், சுவிஸ் அரசு உட்பட பல தரப்புக்கள் உதவ முன்வந்துள்ளன. அந்த அமைப்புக்கள் மூலமாகக் கிடைக்கும் உதவிகளை அந்த மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிகளுக்கு வழங்கவிருக்கின்றோம்.

அரசியல் நோக்கம் கொண்டதாக எனது பணி அமையாது. சகலரும் தொழில்நுட்பத்துறையில் அறிவை விருத்திசெய்யக்கூடிய ஏது நிலையை உருவாக்குவதே எனது நோக்கம். அந்தவகையில், எனது பணிகள் அமையும்" - என்றார்.

மொறட்டுவப் பல்கலைக்கழகம் தொடர்பாகக் கேட்டபோது -

"தெற்கில் எந்தவித பிரச்சினைகளும் இல்லாமல், ஒருநாள் கூட மூடாமல், செயற்படும் ஒரே பல்கலைக்கழகமாக மொறட்டுவப் பல்கலைக்கழகம் செயற்படுகின்றது. அங்கு கல்வி பயின்று வெளியேறிய மாணவர்கள் எவருக்கும் வேலை கிடைக்கவில்லை என்ற நிலை இல்லை. பட்டம் பெற்றவுடன் அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டுகின்றது.

மாணவர் போராட்டமோ, மாணவர்கள் அதிருப்தியோ இன்றி அரசியல்சார்பற்ற முறையில் பல்கலைக்கழகம் செயற்படுகின்றது. அங்கு பயிலும் சிங்கள - தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் அன்னியோன்னியமாக சகோதரர்கள் போல் செயற்படுகின்றனர்.

குறிப்பாக, கடந்த காலத்தில் அங்குபயின்ற 35 தமிழ் மாணவர்கள் விசாரணைக்காக அரச படையினரால் கைதுசெய்யப்பட்டனர். மறுநாள் 35 புலிகள் கைது என்று செய்திகள் வெளிவந்தன. அப்படியான சூழலில் சக மாணவர்கள் இன, மொழி வேறுபாடின்றி அந்தக் கைதுக்கு எதிராகக் குரல்கொடுத்தனர். மறுநாள் 34 மாணவர்களும் விடுதலையாகினர். பின சில நாள்களில் மற்றவரும் விடுதலை செய்யப்பட்டார்.

அங்கு கல்விபயின்ற மாணவர்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பு வெளிப்பட்டதைக் காணமுடிந்தது. இன, மத, மொழிவேறுபாடின்றி செயற்படவேண்டும் என்பதற்கு அவர்கள் உதாரணமாக விளங்கினர் - என்றார். ✪

**செவ்வி: சுந்திரவேள்**

---

2006ஆம் ஆண்டில்

# பெற்றோலிய வளங்களை அகழ்வுசெய்ய மின்சக்தி, எரிபொருள் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,ஜூலை4

யாழ்ப்பாணம் முதல் மன்னார் வரையான கடற்படுக்கைகளில் காணப்படுவதாக அறியப்பட்டுள்ள பெற்றோலிய வளங்கள் 2006ஆம் ஆண்டுமுதல் அகழ்வு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குச் சிறந்த வழியாக இது அமையும் என இனங்கண்டு பெற்றோலிய அகழ்வு நடவடிக்கைகளுக்கான தனியானதொரு செயலகத்தை மின்சக்தி எரிபொருள் அமைச்சு விரைவில் ஸ்தாபிக்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாகக் கொழும்பில் மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் இடம்பெற்ற, இலங்கையின் பெற்றோலிய வளம் தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் மேற்படி அமைச்சின் பெற்றோலிய வளங்களுக்கான பணிப்பாளர் நாயகம் டைட்டஸ் ஜெயவர்த்தன தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்படுக்கைகளில் பெற்றோலிய வளம் இருப்பது மிகத் தாமதமாகக் கண்டறியப்பட்டமையும், 1970களில் மன்னார் குடாவில் ரஷ்யாவுடன் இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஏழு பரீட்சார்த்தக் கிணறுகள் அமைக்கப்பட்ட போதும் அம்முயற்சி தோல்வியடைந்தமையும் மிகவும் துரதிர்ஷ்டமான விடயங்களாகும் - என்றார்.

சுமார் 100முதல் 150 கோடி அமெரிக்க டொலர்கள் இப்பெற்றோலிய ஆய்வுக்கான கிணறு ஒன்றை அமைப்பதற்குச் செலவாகுவதால் இப்பணியை இலகுவில் மேற்கொள்ளமுடியாதுள்ளது. இருந்த போதும், காலநிலை சீரின்மை காரணமாகக் கைவிடப்பட்டிருந்த ஆய்வுப்பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(10-ரி)

## காரைநகரில் கரும்புலிகள் தின நிகழ்வுகள்

காரைநகர்,ஜூலை4

கரும்புலிகள் நாள் நிகழ்வுகளை காரைநகர் பிரதேசத்தில் சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு காரைநகர் கதிர்காம சுவாமி கோவில் முன்றிலில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு முன்னதாக காரைநகர் கிழக்கு மற்றும் மேற்கு வீதிகளில் இருந்து இரு பேரணிகள் கரும்புலிகளின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியுடன் கதிர்காமசுவாமி கோவில் முன்றிலை வந்தடையும்.

தொடர்ந்து தேசியக்கொடி ஏற்றப்பட்டு தமிழீழப் புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞர்களால் கரும்புலிப் பாடல்கள் இசைக்கப்படும். கரும்புலிகளின் நினைவுரைகளைத் தொடர்ந்து இசை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.

(8-73)

# 10 ஆயிரம் மரக்கன்றுகளை வழங்க வனவளத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை4

குடாநாட்டில் அடுத்த வருடம் பத்தாயிரம் மரக்கன்றுகள் வனவளத் திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்தினால் விநியோகிக்கப்படவுள்ளன.

வனவளத்திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலக அதிகாரி எம்.பிரபாகரன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

தேக்கு, மலைவேம்பு, புளி, பலா போன்ற கலப்பான மரக்கன்றுகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படும் என்றும் -

பிரதேச செயலகம், கிராம சேவகர் பிரிவுகள், பாடசாலைகள், ஆலயங்கள் என்ற பிரிவு ரீதியாக இவற்றை வழங்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்தமாதம் இவற்றுக்கான நாற்று மேடைகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை - கடந்த வருடம் இத்திட்டத்தின்கீழ் ஆறாயிரம் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# வடக்கு - கிழக்கு வைத்தியசாலைகளுக்கு 243 உள்ளக மருத்துவப் பட்டதாரிகள்

### விரைவில் நியமனம் என்கின்றார் சுகாதர அமைச்சர்

கொழும்பு,ஜூலை4

வடக்கு-கிழக்கிலுள்ள அரச வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியா பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் சுமார் 243 மருத்துவப் பட்டதாரிகள் உள்ளகப் பயிற்சியை மேற்கொள்வதற்காக நியமிக்கப்படவுள்ளனா என சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்கு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சுகாதாரக் கல்வி பணியகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வு ஒன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் உள்ள அரச வைத்தியசாலைகளில் பட்டதாரி மருத்துவர்களுக்குப் பாரிய பற்றாக்குறை நிலவிவருகின்றது. இதனால் அப்பகுதி மக்களுக்குச சுகாதார சேவை முறையாக வழங்க முடியாதுள்ளது.

இதனைச் சீர்செய்யும் முகமாகவே 243 மருத்துவப் பட்டதாரிகள் அப்பகுதி வைத்தியசாலைகளில் சேவையாற்ற நியமிக்கப்படவுள்ளனர் - என்றார்.

(எ-ரி)

## வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு நிதி அன்பளிப்பு

வடமராட்சி,ஜூலை4

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கென அமெரிக்காவில் வசிக்கும் வல்வெட்டித்துறை வாசிகள் இருவர் 75 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களான எஸ்.சிவலிங்கம் என்பவர் 50 ஆயிரம் ரூபாவையும், எஸ்பரமகுரு என்பவர் 25ஆயிரம் ரூபாவையும் இதற்கென வழங்கியுள்ளனர்.

இந்நிதியை வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத்தலைவரும், வைத்தியப் பொறுப்பதிகாரியுமான டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் பெற்றுக்கொண்டுள்ளார். (8-173)

## மருதங்கேணிக் கோட்ட பாடசாலைகளில் உணவூட்டல் திட்டம்

வடமராட்சிகிழக்கு,ஜூலை4

கல்வி அமைச்சும், உலக உணவுத் திட்டமும் இணைந்து மருதங்கேணி கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்விக்கான உணவூட்டல் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்மூலம், மருதங்கேணிக் கோட்டத்திலுள்ள 17 பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை கல்வி கற்கும் 2594 மாணவர்கள் பயனடையவுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் காலை இடைவேளையின் போது மாணவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கான செயலமர்வு அண்மையில் மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இச் செயலமர்வில் கல்வித் திணைக்கள அதிகாரிகள், உலக உணவுத்திட்ட உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள், உதவி அரச அதிபர், கிராம சேவை அலுவலர்கள், பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-182)

# தமிழீழ விளையாட்டுத்துறை நடத்தும்

SPORTS COUNCIL OF TAMILEELAM

SCT

# 1வது தமிழீழ இளையோர் தேசிய தட களப் போட்டி

தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குகொள்ளும்-

நீண்ட கால இடைவெளியின் பின்னர் கண்கவர் வாணவிளையாட்டுக்களுடன் ஆரம்ப, இறுதி நாள் நிகழ்வு-

## வீரர்களின் எதிர்கால வளர்ச்சி கருதி

## அனுசரணை வழங்குபவர்கள்

Dialog GSM
MTN Networks (Pvt) Ltd.
டயலொக்

BANK OF CEYLON
இலங்கை வங்கி

SEYLAN
BANK LIMITED
The bank with a heart

PEOPLE'S BANK
மக்கள் வங்கி

Suntel
Your telecom partner for life
சன்ரெல்


யூனியன் காப்புறுதி

CEYLINCO
செலிங்கோ

COMMERCIAL BANK

விளையாட்டு
ஆர்வலர்கள்
அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்.

# மக்களின் ஆயர்: அதிவணை தோமஸ் சவுந்தரநாயகம்



யாழ். ஆயர்தினம் நேற்றாகும். அதனை யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க மக்கள் நாளை திங்கட்கிழமை கொண்டாடுகின்றார்கள். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

நாளை காலை 9.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை விசேட திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

**யாழ்.** ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜூலை மாதம் 3 ஆம் நாள் தமது ஆயர் தினவிழாவை குருக்கள், துறவியர் இறைமக்களோடு இணைந்து கொண்டாடும அரிய சந்தர்ப்பத்தில் முதலில் உளம்கனிந்த இறையருள் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது பொருத்தமானது.

**மதிப்புக்குரிய ஆயர்!**

யாழ். மறை மாவட்டம் ஒரு நீண்டகால பாரம்பரியம் கொண்டதும, தமிழ் கூறும் மக்களுக்கு மட்டுமல்ல நாடுமுழுவதற்கும் உரிய பல மறைத தலைவர்களை உருவாக்கிய சிறப்பு வாய்ந்த திருச்சபையாகவும் விளங்குகின்றது. இத்தகைய பின்புலத்தில் யாழ். மறைமாவட்ட ஆயராக கடந்த 12 ஆண்டுகள் விளங்குவது யாழ். ஆயருக்குப் பெருமைசேர்க்கும் சிறப்பான ஒரு நிலையாகும்.

யாழ்.ஆயர் அவர்களது ஆளுமையில் மிளிரும் உயர்வான கிறிஸ்தவ மதிப்பீடுகள் அவரால் வழிநடத்தப்படும் அனைத்து இறை மக்களுக்கும் உதாரணமாக இருப்பது வெள்ளிடைமலை. சொல்லிலும் பார்க்க செயலில் செய்தியைத் தேடும் மக்கள் ஆயரின் வாழ்வில் ஒரு தலைவருக்குரிய அடையாளங்களைக் கண்டுகொள்வதற்கு இவ்வாறு ஆற்றும் பணிகளே சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கின்றது. குருக்கள், துறவியர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் ஆயரில் எளிமை, தூய்மை, அர்ப்பணம், இறைபற்று, ஏழையர் மீது சிறப்பான அன்பு என ஏராளமான பண்புகள் இவரது ஆளுமையில் இயலபாகவே கலந்திருப்பது இவரை மதப்புக்குரியவராகத் தோன்ற வைக்கின்றது.

எம் மண்ணில் இடம்பெற்றுவரும் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் மத்தியில் இத்தகைய தலைமைத்துவப் பணியைத் தளராத உளளத்தோடும், தூரநோக்கோடும் துணிகரமான ஈடுபாட்டோடும் புரிந்து வருவது எவரும் மறுக்கமுடியாத ஒரு வரலாற்று உண்மையாகும். இலங்கையின் வடபுலத்தில், ஏன் தமிழ்கூறும் ஈழமககளின் தேவைகளை உணர்ந்து காலத்திற்குக் காலம் அவற்றை முன்னுரிமைப்படுத்தி மக்களின் உயர்வுக் காகக குரல்கொடுத்து சுபீட்சநிலைகளை உருவாக்கி இருப்பது ஆயரது திறமை என்பது யாவரும் போற்றுதற்குரியது.

**மனிதநேய சேவையாளர்**

யாழ். திருச்சபை என தமிழ் சமுதாயத்திலிருந்து கத்தோலிக்கமக்களை முழுமையாகப் பிரிததுவைக்க முடியாது. திருச்சபையின் நோக்கில் இன்றைய மக்களின் மகிழ்வும், நம்பிக்கையும், ஏக்கமும், கவலையும் கிறிஸ்துவைப் பின்பற்றுவோர்க்கும் முற்றிலும் உரியனவே என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது. இவ்வாறே யாழ்.திருச்சபைக்கும் வடபுலத்தில் வாழும் மக்களுக்குமிடையில் பிரிக்கமுடியாத நெருக்கம் ஒன்று உண்டு. இந்தக் கண்ணோட்டத்தில் கடந்த பல வருடங்களாக ஆயருடைய தலைமைத்துவம் இன, மத, மொழி வேறுபாடின்றி நடுநிலையாளராகவும், நம்பிக்கைக்குரிய இருப்பிடமாகவும் பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார். இடப்பெயர்வுகள், அழிவுகள், சொல்லொணாத் துயரங்கள் மத்தியிலும் தமது மறை மாவட்டத்திலுள்ள அமைப்புக்கள், நிறுவனங்கள், குருக்கள், துறவியர்களை ஊக்கப்படுத்தி இணங்கவைத்து அளப்பெரும் மனிதநேய சேவைபுரிந்து மக்களின் புகலிடமாகவும், அணைக்கும் கரங்களாகவும், வழிகாட்டும் தலைவனாகவும், எதையும் தாங்கும் இதயமாகவும் விளங்குதல் 'தோன்றிற் புகழுடன் தோன்றுக' எனும் வள்ளுவர் கூற்றுக்கு ஈடாகிறது. இவ்வாறு சமயம் வேறு, மனிதவாழ்வு வேறு எனப பிரித்துக்காட்டாது முழு மனித விடுதலைக்காக உழைப்பதே, சேவை என்று புறப்படும் ஒவ்வொரு பணியாளரதும் இலட்சியமாகும். தெய்வத்தின் முன்னிலையில் அனைவரும் சமம். இங்கு சாதி, மத, இன வேறுபாடு எதுவும் கிடையாது. இத்தகைய திருச்சபையின் புதிய முகத்தை ஆயர் அவர்களது வாழ்வும் பணியும் உலகிற்கு எடுத்து காட்டுகின்றது.

**மறைப்பணியில் சாதுரியமான சிற்பி!**

ஆயர்களது மறைப்பணியை நோக்குமிடத்து ஆயர்பதவி இவருக்குப் புதியது அல்ல. காரணம் யாழ். மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாக ஏற்கனவே மறை மாவட்டத்தின் பங்குத்தளங்களிலும், மறைப்பணிகளிலும் சிறப்பானமுறையில் சேவைபுரிந்து அனுபவம்பெற்றவர். அடுத்து, புதிதாக உருவாக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டத்தில் ஏறக்குறைய பதினொரு ஆண்டுகள் ஆயர்சேவை புரிந்து மறை மாவட்டதின் கட்டமைப்புக்கும் துரித வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பாற்றியவர். அதனால், கடந்த ஆண்டுகளில் யாழ. மறைமாவட்டத்தில் குருக்கள், துறவியர்களது உருவாக்கம் வளர்ச்சி என்பவற்றில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு தூர்ந்துபோன பங்குத்தளங்களை மீண்டும் கட்டியெழுப்புவதிலும், புதிய பணித்தளங்களை உருவாக்கி மேம்படுத்துவதிலும் கருத்துடன் செயலாற்றி வருகிறார். காலத்தின் தேவைகளை உணர்ந்து சிறப்புப் பணிகளிற்கு முன்னுரிமை அளித்து அவற்றிற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து சேவையாற்றியுள்ளார். மாற்றங்களைப படிப்படியாக உருவாக்கி பன்முக ரீதியில் மறைமாவட்டத்தைப் படிப்படியாகக் கட்டியெழுப்பிய சாதுரியமான சிற்பி எனலாம்.

**தலைசிறந்த மறை உரைஞர்**

யாழ். ஆயர் ஒரு தலைசிறந்த மறை உரைஞர் ஆவார். இவர் தமது விவிலிய, மறைக்கல்வி, ஆன்மீகத் துறைகளில் பெற்ற தேர்ச்சியையும், நீண்டகால மறைப்பணி அனுபவத்தையும் ஆழ்ந்த தியான, சிந்தனைகளையும் ஒன்றுதிரட்டி மக்கள்புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலும் அவர்களது உள்ளங்களை தொடக்கூடிய வகையிலும் குறுங்கதைகளைக் கூறி மறை உரை வழங்குவது மக்கள் எல்லோருக்கும் பிடித்தமான செயலாகும். நாளும் பொழுதும் பிடியும் இறைவழிபாடுகளும் அடிக்கடி ஏறும் மேடைகளிலும் பங்குகொள்ளும் பொதுவழிபாடுகளிலும் ஆயர் கூறும் உரைகேட்போர் உள்ளங்களிற்கு உற்சாகமும், நினைவை விட்டு நீங்காத உரைகளாக அமைந்து விடுவது பலருடைய அனுபவமாகும்.

**மக்களின் ஆயர்!**

ஆயருடைய நாளாந்த நேர அட்டவணையல் அவரைச் சந்திக்கவரும் அரசியற்தலைவர்களும் மறை பணியாளர்களும், நிர்வாகிகளும், அருள் பணி பொதுநிலையினரும் காலையிலிருந்து மாலை ஈறாக ஏற்படுத்தும் சந்திப்புக்கள் ஆயரின் பொறுமையை எந்தவிதத்திலும் சோதிப்பதில்லை. காரணம் அவற்றினால் மக்கள் பெறக்கூடிய நன்மைகள் பெரிதெனக் கருதும் மனப்பானமை வளர்ந்து வரும் யாழ். மறை மாவட்டத்தின் மறை பணிகள் அதிகம். அவை பெரும் பணிக் களங்களாகவோ அன்றி சிறிய பணிக்களங்களாகவோ இருப்பின் பாரபட்சம் எதுவுமின்றி உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி தேவை எங்கு உணடோ, நியாயம் எங்கு உணடோ அங்கெல்லாம் தமது பிரசன்னம் வழங்கி நிகழ்வுகளில் பங்குகொண்டு அனுசரணை வழங்கும் ஒரு நல்ல ஆயராவார். 'மந்தைகளின் குரலுக்கு செவிமடுக்கும் ஆயர்' என்பதற்கிணங்க அவர்களை புரிந்து அவர்களது உணர்வுகளை உணர்ந்து மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்துகொள்ளும் மக்களின் ஆயர் என்று சொன்னால் அது மிகையாகாது.

இவ்வாறு யாழ். ஆயரது ஆளுமையையும் அவர் ஆற்றும் பணிகளையும் வியந்து பாராட்டும் பல்லாயிரககணக்கான மக்களின் எதிரொலியாக இக்கட்டுரை அமைகின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தமது பிறந்தநாளை 13ஆம் திகதியும் 30 ஆம் திகதி ஆயரின் பணியின் 23 ஆம் ஆண்டையும் நிறைவு செய்யும் ஆயர் அவர்கள் தமது ஆயர் தினத்தின்போது இறைவனுக்கு உளம் மகிழ்ந்து நன்றிகூறும் நல்ல நாளில் குருக்கள், துறவிகள், இறைமக்கள் யாம் இணைந்து இறையாசீர் கூறி தொடரும் காலங்களில் அவர்களது பணி சிறக்கவும் வாழ்வில் அருள் நிறைந்து விளங்கவும் இதயபூர்வ வாழ்தது்க்களைக் கூறிக்கொள்கிறேன். ★

**அருள்திரு ஜீவேந்திரா போல் அ.ம.தி.**
யாழ். மாகாண தலைவர்,
அமலமரித் தியாகிகள் சபை

## புளத்சிங்கள தோட்டத்தில்

# தொழிலாளர் தாக்கப்பட்ட வழக்கில் மூவர் அடையாளம் காணப்பட்டனர்

கொழும்பு,ஜூலை4

புளத்சிங்கள தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களைத் தாக்கிக் காயப் படுத்தியவர்கள் என்று சந்தேகிக்கப் படும் மூன்று நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மத்துகம நீதிமன்றத்தில் இடம் பெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர்கள் ஏழு பேரில் மூவர் அடையாளம் காணப்பட்டனர்.

ஏழு சந்தேகநபர்களும் ஆயிரத்து ஐந்நூறு ரூபா, காசுப்பிணையிலும், 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப் பட்டனர். மாதந்தோறும் பொலீஸ் நிலையத்தில் ஆஜராகும்படி நீதிபதி அவர்களுக்குக் கடுமையான எச்சரிக்கையும் விடுத்தார்.

புளத் சிங்கள தோட்டத்திலுள்ள தமிழ்த் தொழிலாளர்களையும் அவர்களின் வசிப்பிடங்களையும் 500 பேர் கொண்ட காடையர் கும்புல் தாக்கியதாகவும் 186 வீடுகளை அடித்து நொறுக்கி 2 கோடி 50 லட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்படுத்தியதாகவும் புளத்சிங்கள பொலீஸார் குற்றஞ் சாட்டியுள்ளனர். இத்தாக்குதலால் 12 தொழிலாளர்கள் காயமுற்றிருந் தனர்.

களுத்துறை மாவட்ட இ.தொ.பிரதம அமைப்பாளரும், புளத்சிங்கள பிரதேசசபை உறுப்பினருமான பொன். இராமலிங்கமும் காயமடைந்தவர்களில் ஒருவர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களின் பெயர் விவரம் வருமாறு:

ஏ.கருணாரட்ண, பி.உபாலி,டபிள்யு ஏ.ரனில், எம்.டி.நுவான் தரங்க, வி.டி மகிந்த, டபிள்யு ஏ.என்.சாந்தா மற்றும் கே.சலசிங்க.

பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் சட்டத்தரணி கே.வி.தவராசா, தயான் சி.செபநாயகத்தின் அனுசரணையுடன ஆஜராகியிருந்தார். சம்பவதினம் இரவு ஐந்துமணி நேரத்தில் 186 வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டதாக சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

பொலீஸாரின் முன்னிலையிலும் கூட தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார். காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது காடையர்கும்பல் அங்கும் திரண்டு சென்றுள்ளது. சிகிச்சையளித்த மருத்துவரையும் தள்ளிவிழுத்தியிருக்கிறது. பொலீஸாரின் முன்னிலையில் இது நடைபெற்றுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

100 முறைப்பாடுகளுக்கு மேல் உள்ளன. ஆனால், இதுவரை ஏழு பேர்தான் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மிகமுக்கிய பிரதான எதிரிகள் இன்னமும் கைதுசெய்யப்படாமல் இருந்து வருகின்றனர். இவர்களைப் பொலீஸார் கைதுசெய்யவேண்டும். விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திஸ்ஸ விஜயசிங்க, இது ஒரு துரதிர்ஷ்டமான சம்பவம் என்றார். இந்தக் கூட்டத்தில் அரச தரப்பில் ஆஜராகியிருந்த பொலீஸ் அதிகாரிகள் இந்த வழக்கில் இரு தரப்பும் இணக்கப்பாட்டுக்கு வரலாம் என்ற யோசனையை முன்வைத்தனர்.

இதைச் சட்டத்தரணி ஆட்சேபத்து இந்தச் சம்பவங்கள் குற்றவியல் சட்டங்களுக்கு உட்பட்டவைகள். இதில இணக்கப்பாட்டுக்கு இடமேயில்லை என்றார்.

குற்றம் இழைத்தவர்கள் யாராக இருந்தாலும் சட்டப்படி தணடிக்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இதன்பேரில் விசாரணை ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது. (ப)

### கசிப்பு விற்ற நபர் கைது

தென்மராட்சி,ஜூலை4

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபரைக் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி பொலீஸார் மடக்கிப்பிடித்தனர்.

பொதுமக்கள் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக் றோகித தலைமையிலான பொலீஸ் குழுவினர் சரசாலை தெற்கில் கசிப்புவிற்பனை செய்த நபரைக் கைதுசெய்தனர்.

செல்லமுத்து செல்வராசா என்ற சம்பந்தப்பட்ட நபர் அன்றையதினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார் இந்த நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (எ-9-117)



மாதகல், சகாயபுரம் சகாயமாதா ஆலயத்தில் வண.பிதா றொசான், வண.பிதா றொபின்சன், வண.பிதா மங்களராஜா ஆகியோர் திருப்பலி ஒப்புக்கொடுப்பதைப் படத்தில் காணலாம்.
*(படம்: மாதகல் செய்தியாளர்)*

# குடாநாட்டு மக்களின் சேமிப்புகள் தென்னிலங்கைக்கே பயன்படுகின்றன

## இது மிகவும் வேதனைக்குரியது என்கிறார் இலங்கை வங்கி முகாமையாளர்

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ். குடாநாட்டு மக்களினால் வங்கிகளில் சேமிக்கப்படும் பெருமளவு பணம் தென்னிலங்கைத் தொழில் முயற்சிகளுக்கும் அபிவிருத்திக்குமே பயன்படுத்தப்படுகின்றது. இது மிகவும் வேதனைக்குரியது.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையின் முகாமையாளர் ந.சிவரட்ணம்.

மேற்படி வங்கியில் இடம்பெற்ற 18+ இளைஞர் சேமிப்புப் பரிசில் வழங்கும் நிகழ்வில் பங்குகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று வங்கிகள் தமது பணிகளில் பல போட்டிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளன.

எல்லாப் போட்டிகளுக்கும் முகங்கொடுத்தே நாம் எமது பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இன்று குழந்தைகள் பிறந்தவுடன் வங்கிகளில் சேமிப்புத்திட்டத்தினைத் தொடங்கி அதன் மூலம் எதிர்காலத்தில் அந்தக் குழந்தை ஒரு முழுமனிதனாக உருவாவதற்கு வழி வகுக்க வேண்டும்.

இந்தவகையில் இந்த 18+ இளைஞர் சேமிப்புத் திட்டமும் இளைஞர், யுவதிகளுக்குப் பயன்தரும் வகையில் அமைந்துள்ளது.

இலங்கையில் சேமிப்புப் பழக்கம கூடுதலாகக் கொண்ட மக்கள் கூட்டத்தை யாழ்ப்பாணம் கொண்டுள்ளது. எனினும், குடாநாட்டு வங்கிகளில் சேமிக்கப்படும் பெருமளவு பணம் யாழ்.குடாநாட்டுக்குப் பயன் படாமல் தென்னிலங்கை அபிவிருத்தி உட்பட பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுவது வேதனைக்குரியது - என்றார்.

வங்கியின் நிறைவேற்று உத்தியோகத்தர் ரி.தர்மஜெயசூரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பரிசுக்குரியவர்கள் எனத்தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பேரில் இருவருக்கு கையடக்கத் தொலைபேசியும், மிகுதி ஐவருக்கு இலங்கை வங்கியின் 18+ சின்னம் பொறிக்கப்பட்ட ரீசேட்டும் வழங்கப்பட்டன. (-4-12)

### லொறியால் வீழ்ந்து இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை4

லொறியில் ஏற்றிய மூடைகளை கயிற்றால் கட்டிக்கொண்டிருந்த வேளை தவறிக் கீழேவிழுந்து ஒருவர் படுகாயமடைந்தார்.

புளியங்குளம் சோதனைச் சாவடியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தச் சம்பவத்தில தாவடியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் காந்தருபன் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-9-15)






**நம் நாட்டின் ஆரோக்கியமுள்ள துடுக்கான குழந்தைகள்**

**பேபி ஷெரமி தரும் சுவ சிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி 2 மூலம் பெறுமதி வாய்ந்த வீடு ஒன்றையும் வேறு பல பாரிய பரிசுகளையும் வெல்லும் அரிய வாய்ப்பு...**

விண்ணப்பங்கள்
15 ஜூலை 2004
அல்லது அதற்கு முன்னர்
எம்மை வந்தடைய
வேண்டும்

செய்ய வேண்டியவை இவைதான்

உங்கள் குழந்தையின்

- அண்மைக்கால அழகிய படம்
- நோய்த்தடுப்பு மருந்தூட்டல் பதிவேடு / சுகாதாரப் பருவப் பதிவேட்டின் போட்டோப் பிரதி
- பிறப்புச் சான்றிதழின் போட்டோப் பிரதி
- என்பனவற்றுடன் போட்டிக்கான நுழைவுக் கூப்பனை நிரப்பி

**"பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி 2", த.பெ 1870, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பவும்.**

- பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டம் 2 இல், 15 ஜனவரி 2003 - 15 ஜனவரி 2004 என்ற கால எல்லைக்குள் பிறந்த குழந்தைகள் மட்டுமே பங்குபற்றலாம்.

## பரிசுகளின் விபரம்

**முதல் பரிசு - 2.2 மில்லியன் பெறுமதியான ஜா-எலயில் உள்ள புத்தம் புதிய வீடு**

**2-5 வரையான வெற்றியாளர்களுக்குச் செலான் சேமிப்புச் சான்றிதழ்கள்**

2வது பரிசு ரூ.500,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழ்

3வது பரிசு ரூ. 300,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழ்

4வதுபரிசு ரூ. 250,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழ்

5வது பரிசு ரூ. 200,000 க்கான செலான் சேமிப்புச் சான்றிதழ்

(விநியோக நாளிலிருந்து 18 வருடங்களின் பின்பே சான்றிதழ்களைப் பயன்படுத்தலாம்.)

**இறுதிப் போட்டிக்குத் தேர்வாகும் குழந்தைகளுக்குத் தங்கப் பவுண்கள் 60**

## போட்டியின் விபரம்

- குழந்தைகளின் ஆரோக்கியம், மருத்துவ மதிப்பீடு, தோற்றம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து ஒரு மருத்துவர்கள் குழு தேர்வுகளை மேற்கொள்ளும்
- நாடு முழுவதிலுமிருந்து பெறப்பட்ட நுழைவுகளில் இருந்து, ஒவ்வொரு அரை இறுதிச் சுற்றுக்கும் 50 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- அரை இறுதிப் போட்டிகள் 2004 ஓகஸ்ட் முதல் ஒக்டோபர் வரை கொழும்பு, காலி, கண்டி, பதுளை, அனுராதபுரம், புத்தளம், வவுனியா, திருகோணமலை, அம்பாறை, குருநாகல், திஸ்ஸமஹாராமை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் இடம்பெறும்.
- 2004 ஒக்டோபரில் நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள ஒவ்வொரு அரை இறுதிப் போட்டியில் இருந்தும் 5 குழந்தைகள் என மொத்தம் 60 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## போட்டி ஒழுங்கு விதிகள் -

- போட்டியில் கலந்து கொள்ள பேபி ஷெரமி உற்பத்திகள் எதையும் வாங்க வேண்டிய அவசியம் இல்லை.
- தயவு செய்து அசல் தஸ்தாவேஜுகளை அனுப்ப வேண்டாம். அவற்றையோ அல்லது போட்டோவையோ நாம் மீள உங்களுக்கு அனுப்ப மாட்டோம்.
- அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் குழந்தைகளுக்கு மட்டுமே பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படும்.
- ஹேமாஸ் கூட்டு நிறுவனங்கள், கிராண்ட் மெக்கன் எரிக்ஸன், மாஸ்டர் அட்வடைசிங், ஒப்டிமம் Q ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களின் குழந்தைகள் தவிர நம் நாட்டின் அனைத்துக் குழந்தைகளும் கலந்து கொள்ளலாம்.
- நுழைவுகள் 2004 ஜூலை 15 அல்லது அதற்கு முன்னர் எம்மை வந்தடைய வேண்டும். அதன் பின்னர் வருபவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி 2 சம்பந்தமாக எத்தகைய முறையீடுகளோ / சட்ட விண்ணப்பங்களோ ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிறைவற்) லிமிட், கிராண்ட் மெக்கன் எரிக்ஸன், மாஸ்டர் அட்வடைசிங் மற்றும் ஒப்டிமம் Q என்பனவற்றால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

### பேபி ஷெரமி சுவ சிங்கிதி அதிர்ஷ்டப் போட்டி 2 - நுழைவுக் கூப்பன்

குழந்தையின் முழுப் பெயர் : ..............................

தாய் / தந்தை / பாதுகாவலரின் பெயர் : ..............................

அடையாள அட்டை இலக்கம் : ..............................

முகவரி : ..............................

தொ.பேசி (இல்லம்) .................... (அலுவலகம்) ....................

குழந்தையின் பிறந்த

திகதி: .................... நிறை (கிலோ) ....................

நெற்றியினூடாகத் தலையின் சுற்றளவு (செ.மீ) ..........

தாய்ப்பாலூட்டிய காலம் (மாதங்கள்) ..........

உங்களுக்கு அண்மையிலுள்ள பிராந்தியத்தைக் குறிப்பிடவும்.

☐ கொழும்பு ☐ அனுராதபுரம் ☐ காலி ☐ பதுளை ☐ கண்டி ☐ புத்தளம் ☐ வவுனியா ☐ திருகோணமலை ☐ அம்பாறை ☐ குருநாகல் ☐ திஸ்ஸமஹாராம ☐ இரத்தினபுரி

போட்டியின் விபரங்களையும் ஒழுங்கு விதிகளையும் நான் வாசித்துத் தெளிவாக விளங்கிக் கொண்டேன். அத்துடன் பராயமடையாதவரின் பெற்றோர் / பாதுகாவலராக உள்ளதால் போட்டியின் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன்.

பெற்றோர் / பாதுகாவரின் கையொப்பம் ..............................

*இந்தப் போட்டி ஒரு சீட்டிழுப்பல்ல.

Grant McCann

**Baby Cheramy**

பாசத்தின் இதம் தரும்

FUJIFILM

# 'பொடா' பாதிப்புகளை கண்டும் காணாமல் வாளாவிருந்த வாஜ்பாய்...!

**12** நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி வரலாறு காணாத விதத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிவாகைசூடிச் சரித்திரம் படைத்துள்ளது. இந்த வெற்றிக்கான காரணங்களையும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பரிதாபத் தோல்விக்கான காரணங்களையும் தேர்தல் நடைபெற்றவேளையில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த 'உதயன்' சிறப்புப்பிரதிநிதி "கஜனி" அலசி ஆராய்கிறார்.

## தமிழகத் தேர்தல் வெற்றி: உள்ளிருந்து வரும் பார்வை

இந்தியாவின் சனத்தொகையானது ஐரோப்பாக் கண்டத்திலுள்ள அனைத்து நாடுகளின் சனத்தொகைக்குச் சமமானதாகும். மேலும் உலகிலுள்ள மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாவாகும். எனவே, இந்திய நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அகில உலகமும் மிக ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இந்திய மக்கள் மதவாதத்திற்கு இடமளிப்பார்களா? இந்திய மக்கள் இத்தாலி நாட்டவரான சோனியாவைப் பிரதமராகத் தெரிவார்களா? அல்லது மண்ணின் மைந்தரான வாஜ்பாயை தொடர்ந்து பிரதமர் ஆசனத்தில் உட்கார வைப்பார்களா போன்ற கேள்விகளுக்குத் தேர்தல் முடிவுகள் விடையளிக்கும் என உலகமே எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அதே நேரம் இந்திய மக்கள் அனைவரும் தமிழ்நாட்டின் முடிவுகள் குறித்து ஆர்வம் காட்டினர்.

வேட்டிய கட்டிய தமிழன் இந்தியாவின் தலைவிதியைத் தீர்மானிப்பானா? அல்லது சேலை கட்டிய தமிழிச்சி இந்தியாவின் தலைவிதியைத் தீர்மானிப்பாளா? என்பதே இந்திய மக்களின் ஆர்வத்திற்குக் காரணமாகும்.

### கருத்துக் கணிப்புகள்

மொத்தமுள்ள 543 தொகுதிகளில் 300 இறகும் மேற்பட்ட தொகுதிகளை மதவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி கைப்பற்றும் என ஆரம்பக் கருத்துக்கணிப்புகள் தெரிவித்தன. அடுத்த கட்டக் கணிப்புகள் எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாது தொங்கு நாடாளுமன்றமே அமையும் எனத் தெரிவித்தன. 60 சதவீதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் வாஜ்பாய் பிரதமராவதை விரும்புகின்றனர் எனவும் 28 சதவீத மக்களே சோனியா பிரதமராவதை விரும்புகின்றனர் எனவும் தெரிவித்தன. ஆனால், இந்திய மக்கள் இந்தக் கருத்துக் கணிப்புகளை எல்லாம் கனவாக்கிவிட்டனர். இந்தியத் தேர்தல் வரலாற்றில் கருத்துக் கணிப்புகள் பெரும்பாலும் சரியாகவே இதுவரை அமைந்தன. ஆனால், இம்முறை தேர்தல் முடிவுகள் கருத்துக் கணிப்புகள் அனைத்தையும் பொய்யாக்கிவிட்டன. தமிழகத்தைப் பொறுத்தவரை தி.மு.க. அணி அதிகமான தொகுதிகளில் வெற்றிபெறும் எனக் கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன. சுமார் 7 தொகுதிகளில் அ.தி.மு.க. வெற்றி பெறும் என்ற கருத்துக் கணிப்பானது முற்றிலும் தவறானதாக அமைந்துவிட்டது.

கடந்த 8 ஆண்டுகளில் பா.ஜ.கட்சி வலுவான கூட்டணிகளை அமைந்திருந்தது. குறிப்பாக பலம் வாய்ந்த மாநிலக் கட்சிகளுடன் கூட்டணி அமைந்திருந்தது. ஆனால், இம்முறை பா.ஜ.கட்சியுடன் முன்னர் கூட்டணி அமைந்திருந்த பல கட்சிகள் காங்கிரஸ் கூட்டணியில் இணைந்து கொண்டன. இதற்கு உள்நோக்கங்கள் எவையாக இருப்பினும் வெளிப்படையான காரணம் ஒன்று இருந்தது. அதாவது பா.ஜ.கட்சி இந்துத்துவக் கொள்கையைக் கொண்டிருந்தது. மதவாதக் கட்சி என இனங்காட்டிக்கொண்டது. அக்கட்சியுடன் இணைந்த கட்சிகளும் வெளிப்படையாக இல்லாவிடினும் அந்தரங்கத்தில் மதவாதக் கொள்கையினை ஆதரித்தன.

அதேநேரம் இம்முறை காங்கிரஸ் சிறப்பான கூட்டணியை அமைத்துக் கொண்டது. குறிப்பாக காங்கிரஸ் கட்சி வரலாற்றிலேயே முதன்முறையாக அதிக விட்டுக் கொடுப்புகளுக்குத் தயாரானது. கடந்த தேர்தலில் தான் தனித்துப் போட்டியிட்ட சுமார் 110 தொகுதிகளை கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கியது. காங்கிரஸ் அணி பெற்ற மொத்த ஆசனங்கள் 220 ஆகும். இவற்றில் சரி அரைவாசித் தொகுதிகளை அக்கட்சி கூட்டணிக்கு ஒதுக்கியது. அந்த 110 தொகுதிகளில் அதிகமானவற்றில் அக்கூட்டணியைச் சேர்ந்த வேட்பாளர்கள் வெற்றிவாகை சூடியுள்ளனர்.

இந்த இரு கூட்டணிகள் பற்றி நககீரன் வார இதழ் கீழ்கண்டவாறு தெரிவித்தது:-

"தி.மு.க.கூட்டணி வெற்றிக் கூட்டணியாகக் கருதப்படுவதற்குக் காரணம் என்ன? -

கலைஞரின் தலைமை - கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஏழு கட்சிகளின் பலம் - செல்வாக்கு - இந்த ஏழு கட்சிக் கூட்டணியின் தொண்டர்கள் ஆற்றிடும் சுறுசுறுப்பான தேர்தல் பணிகள்.

ஆகியனவற்றை வைத்தே தி.மு.க. கூட்டணிதான் பலம்மிக்க கூட்டணி. அதுவே வெற்றிக்கான கூட்டணி என எல்லோரும் மதிக்கிறார்கள்- மதிப்பிடுகிறார்கள் என்பது ஒருபக்கம் என்றால் அந்த மதிப்பீடுகளின் இன்னொரு பக்கமாக - ஜெயலலிதா ஆட்சியின் 3ஆண்டு காலக் கொடுமைகள்- சகல தரப்பு மக்கள் மீதும் அது கட்டவிழ்த்து விட்ட பழிவாங்கும் வெறி உணர்வின் பாற்பட்ட அக்கிரம நடவடிக்கைகள் -அதன் காரணமாக - சகல தரப்பு மக்கள் மத்தியிலும் ஜெயலலிதாவின் ஆட்சி மீது ஏற்பட்டுள்ள ஆத்திரம்; அதிருப்தி. ஜெயலலிதாவின் எதேச்சாதிகார - தன்னகங்காரப் போக்குகளுக்குத் தக்கபாடம் கற்பிக்க இதுவே தருணம் என்று கருதும மக்களின் உறுதி ஆகியவை அமைந்திருக்கின்றன. சமூகத்தில் சகல தரப்பினரின் வெறுப்பையும் விரோதத்தையும் அதிருப்தியையும் இந்த மூன்று ஆண்டுகால ஜெயலலிதாவின் ஆட்சி சம்பாதித்துக் கொண்டிருக்கிறது என அந்த வார இதழ் தெரிவித்தது.

பா.ஜ.கட்சி மதவாதத்தைப் பின்பற்றியதால் அதை ஏற்காத - விரும்பாதவர்கள் மதசார்பின்மையைத் தீவிரமாக ஆதரித்தனர். ராஜீவ் காந்தியைப் பகைத்து - காங்கிரஸ் கட்சியை உடைத்து - அக்கட்சியைத் தோற்கடித்து - நாட்டின் பிரதமரானவர் வி.பி.சிங். அவர் சோனியா காந்தி பிரதமராவதை எதிர்க்கவில்லை எனத தெரிவித்தார். மதசார்புக் கொள்கையை ஆதரிக்கும் பா.ஜ.கட்சியைத் தோற்கடிக்க வேண்டுமெனில் சோனியா காந்தியை ஆதரிப்பதைத் தவிர வேறுவழியில்லை என்பதை உணர்ந்தே தனது பழைய பகையுணர்வுகளை எல்லாம் மறந்து சோனியா காந்தி பிரதமராவது சரியானதே என வி.பி. சிங் தெரிவித்திருந்தார்.

இடதுசாரிகள், சரத் பவார், வி.பி. சிங் மற்றும் முலாயன் சிங் போன்றோர் தங்கள் உயிரைக் கொடுத்தும் மதச் சார்பின்மையைக் காப்பவர்கள. இவர்கள் சோனியா பிரதமர் ஆவதை எதிர்க்கவில்லை எனத் தேர்தலுக்கு முன்னரே தெரிவித்தனர். சோனியா வெளிநாட்டவர் என்ற ஜெயலலிதாவினதும் பா.ஜ.கட்சியினரதும் வாதம் மதசார்பின்மையை ஆதரித்தவர்களின் ஒற்றுமையின் - பலத்தின் - முன்னால் துச்சமானது.

காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெறும், அப்போது சோனியாதான் நாட்டின் பிரதமர் ஆவார் என அக்கூட்டணியினரே கூறத் தயங்கியபோது இந்தத் தலைவர்கள் சோனியாவை பிரதமர் பதவிக்கான வேட்பாளர் என மக்கள் முன் இனங்காட்டினர்.

'இந்தியா ஒளிர்கிறது' என பா.ஜ.கட்சி எழுப்பிய கோஷம் இந்திய மக்களிடையே எடுபடவில்லை. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி கிராம மக்களைச் சென்றடையவில்லை. விவசாயிகளும் வறிய மக்களும் பா.ஜ. கட்சியை வெறுத்தனர். எனவே, இயல்பாகவே அவர்களது ஆதரவு காங்கிரசுக்குக் கிடைத்தது. தமிழகம், பீஹார், ஆந்திரா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் அமைத்த கூட்டணி அக்கட்சியை அரியாசனத்தில் அமர்த்தியது. குறிப்பாக தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டணியானது அகில இந்திய அளவில் காங்கிரஸின் வெற்றிக்கு வழியமைத்தது. தமிழகத்தில் கூட்டணிக் கட்சிகளால் மாத்திரமின்றி இந்திய அளவிலும் கருணாநிதி பெருந்தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

தேர்தலுக்கு முன்




தேர்தலுக்கு பின்




### தமிழக நிலைவரம்

இந்தத் தேர்தலின்போது தமிழகத்தின் நிலைவரம் மிகவும் ரசமாக அமைந்தது. மதமாற்றத் தடைச்சட்டம் கோயில்களில் அன்னதானம் போன்ற இந்துத்துவ நடவடிக்கைகளில் ஜெயலலிதா ஈடுபட்டதும் அதை நம்பி பா.ஜ.கட்சி அவருடன் கூட்டமைத்ததும் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது. ஏனைய கட்சிகள் அதி.மு.கவுடனோ அல்லது பா.ஜ. கட்சியுடனோ கூட்டணி அமைக்க முன்வரவில்லை. தன்னுடன் கூட்டணி அமைத்த பா.ஜ.கட்சியை ஜெயலலிதா ஆட்டிப் படைத்தார். பா.ஜ.கட்சிக்கு மிகவும் குறைந்த அளவிலான தொகுதிகளை மாத்திரம் ஒதுக்கியதுமன்றி அக்கட்சி சார்பில் யார் யார் போட்டியிடலாம், யார் யார் போட்டியிடக் கூடாது எனக் கெடுபிடி விதித்தார். இதனால், முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசுவுக்குப் போட்டியிட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஜெயலலிதாவின் பரமவைரியான திருநாவுக்கரசுக்கும் தமிழகத்தில் ஓரளவு வாக்கு வங்கி இருந்தது. எனவே, அவரது ஆதரவாளர்கள் எதிரணியான தி.மு.க. கூட்டணிக்கே வாக்களித்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. பா.ஜ.கட்சிப் பிரமுகர் அத்வானிக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே தனிப்பட்ட ரீதியில் நட்புறவு இருந்ததாகக் கூறப்படுகிறது. அத்வானியின் வேண்டுகோளுக்கு இணங்கியே பாண்டிச்சேரியில் பா.ஜ.கட்சி சார்பில் லலிதா குமாரமங்கலம் நிறுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வைகோவை சிறைவைத்ததால் அரசு மீது மக்களுக்கு வெறுப்புணர்வு ஏற்பட்டது. போதாத காலத்துக்கு அவரைச் சிறைவைக்க அரசு பயன்படுத்திய சட்டங்கள் ஆட்டங்கண்ட நிலையில் தேர்தல் நெருங்கிய வேளையில் வைகோ, நெடுமாறன் போன்ற தலைவர்கள் சிறை மீண்ட செம்மல்களாக வெளிவந்து மக்களைச் சந்தித்தபோது உணர்ச்சிவசப்பட்டனர். வைகோ மற்றும் நெடுமாறன் ஆகியோரை தமிழக மக்களும் உலகத் தமிழர்களும் அரசியல்வாதிகள் என்ற நோக்கைவிட பெருந்தலைவர்களாகவே மதிக்கின்றனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் பா.ஜ கட்சியின் ஆட்சியில் தி.மு.க, ம.தி.மு.க. மற்றும் பா.ம.கட்சி ஆகியன பங்காளியாக இருந்தன. அது மாத்திரமன்றி அந்த அரசில் இந்தக் கட்சிகளைச். சேர்ந்தவர்கள் அமைச்சர்களாகவும் பதவி வகித்தனர். தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று தமிழக ஆட்சியைக் கைப்பற்றியதும் ஜெயலலிதா தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தார். தன் சொல்லுக்கு ஆடுபவர்களை காவல்துறையின் பொறுப்பான பதவிகளில் நியமித்தார். பொய்யான தகவல்கள் மற்றும் முறைப்பாடுகளின் அடிப்படையில் அவரது அரசியல் எதிரிகளை காவல்துறையினர் அர்த்தராத்திரியில் கைதுசெய்தனர். தி.மு.க. தலைவர் கருணாநிதியை அவர் நித்திரை. செய்துகொண்டிருந்த வேளையில் அவரது இல்லத்திற்குச் சென்று காவல்துறையினர் இழுத்துச் சென்றனர். கலைஞரின் வயது மற்றும் அவருக்கு தமிழகம் மற்றும் இந்திய அளவில் உள்ள அரசியல் அந்தஸ்து ஆகிய எவற்றையும் கவனத்தில் கொள்ளாத காவல்துறையினர் ஏவிவிட்ட பிசாசுகள் போல் அநாகரிகமாக நடந்து கொண்டனர். உண்மையில் அவர்கள் ஏவிவிடப்பட்டவர்கள்தான். கலைஞரின் கைது குறித்து விசாரிக்க வந்த மத்திய அமைச்சர்களான டி.ஆர். பாலு மற்றும் முரசொலிமாறன் மீதும் பொலீஸார் அநாகரிகமாக நடந்து கொண்டனர். ஒரு ஜனநாயக நாட்டில் இடம்பெற்ற மிகப்பெரிய கேவலமான - அநாகரிகமான - சம்பவம் என இதைக் கூறினால் மிகையாகாது. அரச ஊழியர்களான காவல்துறையினர் ஒரு மாநில முதல்வரின் ஆசையைப் பூர்த்திசெய்வதற்காக - அவரது கட்டளையை நிறைவேற்றுவதற்காக - இவ்வாறு அநாகரிகமாக நடந்து கொண்டனர். தமிழகத்தில் ஆட்சி மாறாது - ஜெயலலிதா சாகாவரம் பெற்றவர் - அவரே தொடர்ந்து தமிழக முதல்வராகப் பதவி வகிப் பார் என தமிழக காவல்துறையினர் நினைத்திருக்கக் கூடும். இவ்வளவு அவலங்கள், அநாகரிகங்கள் இடம்பெற்றபோதிலும் மத்திய அமைச்சர்கள் மாநிலக் காவல்துறையினரால் அவமானப்படுத்தப்பட்ட போதிலும் பிரதமர் வாஜ்பாயும் அவரது அமைச்சர்களும் வெறும் பார்வையாளர்களாகவே இருந்தனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக மத்திய அரசு தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிவிட்டது. ஏதோ எதிர்க்கட்சிகளிடையே இடம்பெற்ற சம்பவம் போல் கருதியது. தனது அரசின் பங்காளிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியாக- அவமானமாக - பிரதமா வாஜ்பாயோ அல்லது அவரது அமைச்சரவையோ கருதவில்லை. மத்திய அரசு அக்கறை கொண்டிருந்தால் ஜெயலலிதாவின் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்க முடிந்திருக்கும். வாஜ்பாய் முற்றும் துறந்த முனிவர்போல் செயற்பட்டார். இந்திய மக்கள் இம்முறை துறவறத்திற்கே அனுப்பிவிட்டனர்.

அடுத்து பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நடைமுறையில் இருந்த 'தடா'சட்டத்தை மாநில அரசுகள் தவறாகப்பயன்படுத்துகின்றது என எழுந்த குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து வாஜ்பாய் அரசு 'தடா'ச் சட்டத்தை நீக்கி தொடர்ந்து 'பொடா" சட்டத்தை உருவாக்கியது. ஆனால், மாநில அரசுகள் தங்கள் தேவைகளுக்காக அந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தின. தனது அரசியல் எதிரிகளையும் பழிவாங்குவதற்காக ஜெயலலிதா 'பொடா' சட்டத்தைப் பயன்படுத்தினார். மத்திய அரசின் பங்காளியான ம.தி.மு.க. தலைவர் வைகோ இதற்குப் பலியானார். ஏதோ தேசத்துரோகத்தை இழைத்தவர் போல் அவர் அமெரிக்கா பயணத்தை முடித்துக்கொண்டு வந்த கையோடு கைதுசெய்யப்பட்டு 500 இற்கும் அதிகமான நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டார். இத்தனைக்கும் வாஜ்பாய் அரசு வாளாவிருந்தது. ஓர் அரசு சட்டங்களை உருவாக்குவதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. தான் உருவாக்கிய சட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதையும் கவனிக்கும் பொறுப்பு - கட்டுப்படுத்தும் பொறுப்பு - அந்த அரசைச் சார்ந்ததாகும். வைகோ மற்றும் நெடுமாறன் விடயத்தில் மத்திய அரசு எதுவித அக்கறையும் எடுக்காமல் மௌனம் சாதித்தது. இறுதியில் பொடா 'மீளாய்வுச் குழு' என்ற பெயரில் ஓர் ஆணைககுழுவை அமைத்தது. அந்தக்குழுவின் முடிவையும் ஜெயலலிதா ஏற்க மறுத்துள்ளார். மாநில முதல்வர்கள் தாங்கள் விரும்பும் விதத்தில் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொளவதற்காகவா சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன? 'பொடா' சட்டத்திற்குப் பலியானவர்களைப் பாதுகாக்க அரசு காலம் தாழ்த்திவிட்டது.

மொத்தத்தில் வாஜ்பாய் அரசு தனது பங்காளிகள் நயவஞ்சகமாகப் பாதிப்புகளுக்கு உள்ளானபோது அவர்களைப் பாதுகாக்க முயலவில்லை.

வாஜ்பாய் அரசு மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்தாலும் ஊடகங்கள் மௌனம் சாதிக்கவில்லை. கடந்த மே 9ஆம் திகதி அதாவது தேர்தலுக்கு முதல்நாள் ஜெயலலிதாவின் 3ஆண்டு ஆட்சியின்போது சட்ட என்ற போர்வையில் மேற்கொண்ட பழிவாங்கும் நடவடிக்கைகளை தொகுத்து சன் ரீ.வி நிறுவனத்தினர் ஒளிபரப்பினர்.

கட்சி சார்பற்ற வாக்காளர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கு அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சி பெரிதும் உதவியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கலைஞர் கருணாநிதியை அந்தச்சாமத்தில் பொலீஸார் இழுத்துச் சென்ற காட்சி ஒன்று மட்டும் போதுமே கண்கலங்க வைப்பதற்கு.

*(வளரும்)*

## 31ஆம் நாள் நினைவுச்சரங்களும் அந்தியேட்டி அழைப்பும்



| மண்ணோடு | விண்ணோடு |
|---|---|
| 02 - 10 - 1957 | 05 - 06 - 2004 |

### அமரர் தங்கராசா திலகம்


திதி: 04-07-2004

மாங்களமாய் மனையமைத்து மாளிகையில் நீ அம்மா
தங்குவாய் என்றெண்ணியது வீணாகிப்போச்சே அம்மா
கன்னியர் எம்மணக்கோலம் கண்டிட அம்மா
நீர் கண்ட நனவெல்லாம் கனவாகிப் போச்சே அம்மா.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நாகநாதன் வீதி, கச்சாய் வீதி, கொடிகாமம். - குடும்பத்தினர்.

(C/35952)(42-19-14-24)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 07 - 1938 | 26 - 06 - 2002 |

### அமரர் சுப்பையா நடராசா

[(இளைப்பாறிய பரிசோதகர், மட்டக்களப்பு இ.போ.ச.]

திதி: 04.07.2004

அன்பின் பிறப்பிடமே! பாசத்தின் உறைவிடமே
அழகின் சிகரமே குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
என் இருவிழிகளால் சிந்திய கண்ணீர்
இன்னமும் காயவில்லையே!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அளவாவோடை, ஏழாலை தென்.மேற்கு.

அன்பு மனைவி: மனோன்மணி.

(33536)(34-19-14-24)

## மாணவி மீட்பு

கடந்தவாரம் பாடசாலைக்குச் சென்றவேளை காணாமற்போனார் என்று கூறப்பட்டவரான யாழ் கச்சேரியடியைச் சேர்ந்த 16 வயதான மாணவி யாழ். பிரதேச அரசியல்துறையினரால் மீட்கப்பட்டு பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டார். இந்த மாணவி உடுவில் பகுதியிலிருந்து மீட்கப்பட்டார் என்று யாழ். பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.செழியன் தெரிவித்தார். (ஓ-30)

## 'அழகெழல்' போட்டி; திகதிகளில் மாற்றம்

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியினால் நடத்தப்படவிருந்த 'அழகெழல்' போட்டிகள் நடைபெறும் திகதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் பங்கேற்கும் தமிழ் மொழித்திறன் போட்டிகள் இவ்வாரமும், அடுத்தவாரமும் நடைபெற இருப்பதாலேயே இம்மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக 'அழகெழல்' அமைப்புக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த போட்டிகள் 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. பாடசாலைகளின் விண்ணப்பத் திகதியும் இம்மாதம் 15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (4-150)


**மணப்பெண் அலங்காரம்**

மணப்பெண் அலங்காரம், பேசியல், தலை அலங்காரம், திருமணம் மற்றும் சகலவகையான கேக், புகைப்படம், வீடியோப்படம் பிடித்தல் ஆகியவை சிறந்த முறையில் செய்துதரப்படும்.

தொடர்பு: தனா
T.P.: 0777 316453

(33474)

**நினைவுமலர் அட்டைகள்**

கொழும்பில் அச்சிடப்பட்ட பலவர்ண பிள்ளையார், அம்மன், முருகன், சிவன்அம்மன், சிவன்குடும்பம் ஆகிய நினைவுமலர் அட்டைகளை பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்டேர்ஸ்
183, பலாலி வீதி, கோண்டாவில்.
T.P.No : 222 6722


## நினைவகலா நான்காண்டு!

| தாயக மண்ணில் | தாயக மண் விட்டகன்று |
|---|---|
| 16 ☆ 11 ☆ 1936 | 20 ☆ 06 ☆ 2000 |



### அமரர் கந்தையா சண்முகரட்ணம்

[ஓய்வுபெற்ற இலிகிதர், யாழ். தொழில் திணைக்களம்]

திதி: திருதியை (04-07-2004)

எம் அன்புத் தெய்வமே!
பண்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
அன்புடனே அரவணைத்து
அணையாது ஒளிவிட்ட தீபமே!
ஆனது நான்கு ஆண்டுகள்
ஆறத்தான் முடியவில்லை - உங்கள்
வேதனையோ தீரவில்லை
வெம்பி வெம்பித் தினம்
வேகுகின்றோம் அப்பா!

உங்கள் நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமகன், பேரன்.

29, விபுலானந்தர் வீதி.
கொழும்புத்துறை. (C-35959) (12-14)

## ஈரவிழிகளால் நாம் செலுத்தும் இதய அஞ்சலி

18ஆம் மாதம் முதலாம் வருடம்



| | |
|---|---|
| மண்ணக வீட்டில் 1926-11-26 | இருவருக்கும் மகளாக 1927-07-21 |
| உன்னத வீட்டில் 2002-10-17 | இறைவனுக்கு மகளாக 2003-07-04 |

| அமரர் | திருமதி |
|---|---|
| **மாணிக்கம் கந்தப்பு** | **குணமணி கந்தப்பு** |
| (இளைப்பாறிய ஆசிரியர், வடஇலங்கை சங்கீத சபை முன்னாள் நிர்வாகச் செயலாளர்) | (இளைப்பாறிய ஆசிரியை, யா/பெரியபுலம் மத்திய மகாவித்தியாலயம்) |

ஆயிரம் நினைவுகள் எம்மைத் தொடும்
அனைத்தும் அடுத்த நாள் மறைந்து போகும்
தாய் தந்தை நினைவுகள் எந்த நாளும்
எங்களின் உள்ளத்தில் நின்று வாழும்
உங்களின் நினைவையே சுமந்த வண்ணம்
எங்களின் இதயங்கள் அழுகின்றன...

உங்களை என்றும் மறவாத:
அன்பு மகள் - பபா க.குணரஞ்ஜினி. ஸ்ரீரஞ்சன் - Canada)
மகன் - ஸ்ரீகந்தகுமார் - (Dubai)
மகள் - ஸ்ரீகந்தபாலா - (Colombo)
மகன் - ஸ்ரீகந்தசீலன் - (Sharjah)

அம்மம்மா, அம்மப்பாவைப் பார்த்தால் போதும்
ஆனந்தம் இரட்டிப்பாய் வளர்ந்து நிற்கும்
இனியவை எமக்கிங்கு இல்லையென்று
ஏங்கியே எம்மனம் தவிக்குதிங்கு
எங்களை நீங்கள் ஏன் மறந்திட்டீர்கள்?
உங்களை நாங்கள் மறக்கமாட்டோம்!

உங்கள் அன்புப் பேர்த்தி:
ஸ்ரீரஞ்சன் திவ்வியா - (Canada)
உங்கள் அன்புப் பேரன்:
ஸ்ரீரஞ்சன் வக்ஷனகீதன் - (Canada).

தகவல்:
மகள்
Dr.(Mrs.) Gunaranjini Sriranyan
Canada,
3, Massey Square # 705,
Ontario, Toronto M4C 5L5 (416) - 691 - 0400
E-Mail - Keethan 85 @ hot mail.com

(சி-35734) (26-19-14-24)

BOC

## இலங்கை வங்கி அறிவித்தல்

இலங்கை வங்கியின் யாழ். மாவட்டத்திலுள்ள கீழ்க் குறிப்பிட்ட கிளைகளில் 30.06.2003 ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீளப்பெற்றுக் கொள்ளப்படாத நகைகள் அனைத்தும் வெகுவிரைவில் ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகின்றோம்.


1) யாழ். மேற்றரக் கிளை
2) யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை
3) சுன்னாகம்
4) மானிப்பாய்
5) பருத்தித்துறை
6) திருநெல்வேலி

மேற்படி கிளைகளில் 30.06.2003 இற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீளப் பெற்றுக்கொள்ளாதவர்கள் அவற்றினை மீளப்பெற்றுக்கொள்ளும்படியும் அல்லது வட்டியை மட்டும் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உதவிப் பொதுமுகாமையாளர்
(வடமாகாணம்),
இலங்கை வங்கி.

(சி-35955)(34-19-14-24)

# சைவச்சிறார்கள் சமயச்சூழலில் கற்க வசதிசெய்த "இந்துபோர்ட்"



சைவச்சிறார்கள் சமயச் சூழலில் கல்வி கற்பதற்கு வசதியாக பலப்பல சைவப் பாடசாலைகள் நிறுவப் படுவதற்கு மூலகாரணராக இருந்து மிகப் பெருந்தொண்டு செய்த "இந்து போர்ட்" இராஜரத்தினத்தின் 120 ஆவது நினைவு தினம் இன்று. அந்தப் பெருவள்ளலையும் அவர்தம் சேவைகளையும் நினைவுகூரும் வகையில் இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம்.

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற கல்விப் பணியாற்றிச் சைவமக்களுடைய, கல்விமான்களுடைய, பாராட்டுக்குரியவராக விளங்கியவர் மதிப்புக்குரிய இந்துபோர்ட் இராஜரத்தினம். அன்னார் ஆற்றிய பணிகள் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டம், தீவுப் பகுதி ஆகிய பெருநிலப்பரப்பில் பரந்திருந்தது.

இதன்மூலம், மேற்கூறிய இடங்களில் வறுமை காரணமாகப் பாடசாலை சென்று கற்கமுடியாத சிறுவர், சிறுமியர்கள் பலரும் சைவ சமய மரபுகளைப் பேணி, சமயச் சூழலிலே வளரவும், கலை, கலாசாரத்தை வளர்த்துக் கல்வி கற்கவும் ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

இன்று அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பாடசாலைகளுக்குப் பல துறைகளில் உதவி செய்கின்றன. வேற்று மதத்தவர்களுக்கு மதச் சார்புள்ள நிறுவனங்கள் ஆதரவு வழங்குகின்றன. ஆனால், தனி மனிதனாகத் தமிழ் மக்கள் வாழுமிடங்களில் பாடசாலைகளை நிறுவிய பெருமை இந்துபோர்ட் சு.இராஜரத்தினத்தையே சாரும்.

யாழ்ப்பாணத்திலுள்ள தலைசிறந்த அறிஞர்களும், கல்வியில் ஈடுபாடுடையவர்களுமாகிய சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, அ.சபாபதி, எம்.எஸ்.இராஜரத்தினம், எஸ்.கந்தையா ஆகியோர் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் கூடி 09.12.1923 இல் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை ஸ்தாபித்தனர். இதுவே Hindu Board of Education என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. சங்கத்தின் நோக்கம் நாட்டின் பல பகுதிகளிலும் சைவப் பாடசாலைகளை நிறுவிச் சைவச் சூழலிலே கல்வி வழங்குவது (விசேடமாக ஏழைப்பிள்ளைகளுக்கு) ஆகும்.

'இந்துபோர்ட்' இராஜரத்தினம் கோப்பாயைச் சேர்ந்த கதிரேசர் சுப்பிரமணியத்துக்கும் வல்வெட்டியைச் சேர்ந்த பெருவள்ளல் குமாரசுவாமி மீனாட்சிப்பிள்ளைக்கும் அருந்தவப் புதல்வராகப் பிறந்தார். இளமைப் பருவத்தில் இவரது தாய்மாமன் நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளை சு. இராஜரத்தினத்தையும் சகோதரர்களையும் வளர்க்கும் பொறுப்பை ஏற்றார். இவர் யாழ். மத்திய கல்லூரியில் கற்ற காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் மிக ஆர்வமுடையவராக விளங்கினார்.

திண்ணைப் பள்ளிக்கூட முறையில் சட்டம்பி அம்மாவிடம் சமயம், தமிழ்க் கலாசாரப் பண்புகள் என்பவற்றைக் கற்ற இராஜரத்தினம், பல்கலைக்கழகத்தில் சக மாணவர்களிடையே சகல விதத்திலும் முன்னணியில் நின்றார் என்றால் மிகையில்லை. அத்துடன், பல்கலைக்கழக முதல் நிலைப்பட்டப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்று பெற்றோரையும், மாமனாரையும் பெருமிதம் அடையச் செய்தார்.

இருமரபுப் பெருமையும், சைவாசாரசீலமும், பல்கலைக்கழகப் பட்டமும், கிரிக்கெட் விளையாட்டில் திறமையும் ஒருங்கே அமையப் பெற்ற இராஜரத்தினம் அவர்கள் 24ஆம் வயதில் சட்டத்தரணியாக - அப்புக்காத்து திறமைச் சித்திபெற்றார். ஓய்வு காலங்களில் கீரிமலை சென்று நீச்சலிலும் வல்லவராகினர். அக்காலத்தில் கீரிமலை அருணாசல உபாத்தியாரின் தொடர்பு இவருக்குக் கிட்டியது. வித்தியா பகுதியினருக்கு அருணாசல உபாத்தியாயர் மூலம் மொழி பெயர்த்து உதவியதால் கல்வி தொடர்பான சட்ட திட்டங்கள் பற்றியும் இவர் அறிந்து கொண்டார்.

நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளை நாவலர் பெருமானுடன் மிக நெருங்கிய தொடர்புடையவர். எனவே, தாய் மாமன் பராமரிப்பில் வளர்ந்த இராஜரத்தினம் அவர்களும் நாவலருடைய சமயப் பணிகளாலும் பிரசாரத்தினாலும் நன்கு கவரப்பட்டதில் வியப்பில்லை. இதனால், நாவலர்பெருமான் வழிநின்று சமயப் பணியாற்ற விரும்பிச் செயற்படத் தொடங்கினார்.

**திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**
முன்னாள் அதிபர்,
இராமநாதன் கல்லூரி.

பரம்பரை பரம்பரையாக சைவ மக்கள் வாழும் மாதகல் கிராமத்தில் முதன்முதலாகச் சைவவித்தியாவிருத்திச் சங்கம் விக்கினேஸ்வரா பாடசாலையை அமைத்தது. இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, வேலணை, சங்கானை, இளவாலை, எழுவைதீவு, காரைநகர், நாகர்கோயில், உருத்திரபுரம், வவுனியா, புத்தளம், முந்தல், வட்டக்கச்சி, பல்லவராயன்கட்டு ஆகிய இடங்களில் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு 1953ஆம் ஆண்டு 121 பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இத்துடன், குடிசைக் கைத்தொழில் நிலையங்களும், பன்னவேலை நிலையங்களும் அமைக்கப்பெற்றன. நாட்டின் பலபாகங்களிலுமுள்ள பிரபுக்கள், சைவ அபிமானிகள், கொடை வள்ளல்கள் ஆகியோரை அழைத்துச் சைவமக்களின் முக்கிய தேவை கல்வி எனவும், அதற்குப் பல பாடசாலைகளை அமைக்க வேண்டும் எனவும் எடுத்துக்கூறிப் பணம், பொருள் என்பவற்றைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு வருடந்தோறும் பாடசாலைகளின் தொகை அதிகரித்து வந்தது. பெண்கள் கல்விக்கும் ஆங்கில மொழிக் கல்விக்கும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. செங்குந்த இந்துக் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடி ஆங்கிலப் பாடசாலை என்பன ஆங்கில மொழிக்கல்வி புகட்டுவதற்கென ஆரம்பிக்கப்பட்டன. வித்தியா பகுதியினருக்கு மொழிபெயர்தது பல ஆவணங்களைத் தயாரித்துக் கொடுத்ததனால் சட்டதிட்டங்களை நன்கு நுட்பமாக அறிந்து பாடசாலைகளை நிர்வகிக்க முடிந்தது.

இந்து போர்ட் இராஜரத்தினம் அவர்கள் அடக்கமாகவும் அமைதியாகவும் திரிகரண சுத்தியுடனும் தன்னையே கல்விப் பணிக்கு அர்ப்பணித்தார். கல்வியில் ஆர்வமுள்ளவர்களை நாடித் தங்கள் தங்கள் ஊரிலேயே பாடசாலைகளை அமைக்குமாறு உற்சாகப்படுத்திப் பல பாடசாலைகள் உருவாக வழிவகுத்த பெருமை அவரைச் சாரும்.

தனது பணிகளைத் திறம்படச் செய்யத் தனது மோட்டார் வாகனத்தையும், நியாயவாதித் தொழிலையும் அர்ப்பணித்தமை அவரின் சேவை மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு முப்பத்தைந்து வருடங்களின் பின்னர் 187 பாடசாலைகள் அமைக்கப்பெற்றன. எனவே, சைவ ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவியது. திருநெல்வேலியைச் சேர்ந்த அட்வகேட் ரி. இராசேந்திரம் அவர்கள் நாற்பது பரப்பில் அமைந்துள்ள தனது பெயரில் இல்லத்தைக் கொடுத்துதவ, சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலை 1925 ஆம் ஆண்டு விஜயதசமியன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்துபோர்ட் இராஜரத்தினம் அவர்கள் ஆற்றிய பணி காரணமாக ஓர் நிறுவனத்தின் பெயர், மதிப்புக்குரிய இராஜரத்தினம் அவர்களைக் குறிக்க எல்லோரும் அவரை அன்பாக 'இந்து போர்ட் இராஜரத்தினம்' என அழைத்தனர். இறுதியாக "இந்துபோர்ட்" என்றால் பெரியார் இராஜரத்தினம் எனலாம். இரண்டாவது அரச சபைக் காலத்தில் (1936-1941) சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா கல்வி மந்திரியாக விளங்கினார். கல்வித்துறையில் மாற்றம் செய்ய நியமிக்கப்பெற்ற கல்வி ஆணைக்குழு சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கராவின் பெருமதிப்புக்குரிய இந்துபோர்ட் இராஜரத்தினம் ஒரு பிரபல்யமானவராக விளங்கிய காரணத்தினால் அவரைச் சந்தித்து அவருடைய உயர்ந்த கருத்துக்களைப் பெற்றது.

1935ஆம் ஆண்டு தொடக்கம் பிரதி சனிக்கிழமைதோறும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கான வகுப்பும், யாழ். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் பாலபண்டித வகுப்புக்களும் இலவசமாக நடைபெற்றன.

நான் சிறுமியாக இருந்த காலத்தில் மிக உயர்ந்த ஒருவர் நெற்றியில் விபூதி, சந்தனப்பொட்டு, முடிந்தானைத் தொடத்தக்கதாக 'கோட்', வேட்டியணிந்து, மீசையுடன் கம்பீரமாக மோட்டார் வாகனத்தில் எமது இல்லம்வந்து தந்தையாருடன் கதைப்பது வழக்கம். ஆனால், நான் சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் இந்துபோர்ட் பற்றி நன்கு அறிந்து பெருமைப்பட்டேன்.

கலாசாலைக்கு அருகில் அமைந்த சைவச் சிறுவர்களுக்கான அநாதை இல்லம் மீது அவர் மிக அக்கறையுடன் செயற்பட்டார். அங்குள்ள பிள்ளைகளைத் தமது சொந்தப் பிள்ளைகள் போல நடத்தினார். அவர் நிறுவிய கல்விச்சாலைகளும், சிறுவர் இல்லமும் என்றும் அவர்பெருமையைப் பேசுவனவாகவுள்ளன. எனவே, எழுத்தறிவித்தவன் என்றும் இறைவனாகப் போற்றப்படுவார் என்பது முற்றும் உண்மை. ★

# கரையோரப் பாதுகாப்புப் படையை கலைக்க அமைச்சு தீர்மானம்

கொழும்பு,ஜூலை4

இலங்கையின் கடற்கரையோரப் பாதுகாப்புப் படைப் பிரிவைக் கலைத்து விடக் கடற்றொழில் நீரியல் வள அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள பாதுகாப்புப் படையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பின் வளங்களைப் பாதுகாப்பதும் கடல் வளங்களைச் சட்டவிரோதமாக வெளிநாட்டு மீனவர்கள் எடுத்துச் செல்வதைத் தடுப்பதும் கரையோரப் பாதுகாப்புப் படையினரின் கடமையாகும்.

இதற்குக் கரையோரப் பாதுகாப்புப் படையினருக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படவில்லை என்று கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேகர விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கரையோரப் பாதுகாப்புப் படைப் பிரிவைக் கலைப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தையடுத்து இந்தப் பிரிவில் கடமையாற்றும் ஊழியர்களைக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (-8-79)

## மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை புனரமைப்புப் பணிகள் நிறைவு

செம்பியன்பற்று,ஜூலை4

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் புனரமைக்கப்பட்ட கட்டடம் சுகாதாரத் திணைக்களத் திடம் எதிர்வரும் 24ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்த இக் கிராமிய வைத்தியசாலை இயங்காமல் இருந்துவந்தது. மீளக்குடியமர்ந்த மக்களின் கோரிக்கையை அடுத்து மருதங்கேணி உதவி அரச அதிபர் எடுத்த முயற்சியின் பயனாக இவ் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டது.

இவ் வைத்தியசாலை தற்பொழுது தனியார் வீட்டில் இயங்கி வருகிறது. வசதிகளற்ற நிலையில் இயங்கிவருவதால், மீளக்குடியமர்ந்த மக்களுக்குச் சரியான வைத்திய சேவையை அளிக்க முடியவில்லையென வைத்தியசாலை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இப்புனரமைக்கப்பட்ட கிராமிய வைத்தியசாலை ஓகஸ்ட் மாதமளவில் திறக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (8-36)

## சிங்களப் பொலீஸாருக்கு தமிழ்மொழிக் கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஜூலை4

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக ஏற்பாட்டில் சிங்களப் பொலீஸாருக்கு விசேட தமிழ்மொழிக் கற்கை நெறி வழங்கப்பட்டு வருகிறது.

மானிப்பாய், ஊர்காவற்றுறை, கொடிகாமம், வட்டுக்கோட்டை, சுன்னாகம், இளவாலை ஆகிய 6 பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 240 பேர் மேற்படி தமிழ்மொழிப் பயிற்சியைப் பெற்றுவருகின்றனர்.

சிங்களப் பொலீஸார் தமிழ்மக்களிடம் சிறந்த நிர்வாக வேலைகளை மேற்கொண்டு அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாகவே மேற்படி கற்கைநெறி வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி கற்கை நெறிக்கான விரிவுரைகளை அரச கருமமொழி விரிவுரையாளர் பேராசிரியர் அ.லீலா கிருஷ்ணன் வழங்கி வருகின்றார்.

மேற்படி கற்கைநெறியில் இணைந்துள்ள பொலீஸாருக்குத் தமிழ் - சிங்கள மொழி நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் யாழ்ப்பாணம், கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்தைச சோந்த 40பேர் 6மாத பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்று வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (-8-185)

## நீதிமன்றத்தில் கைத்தொலைபேசி பாவித்தவருக்கு அபராதம்

கொழும்பு,ஜூலை4

நீதிமன்றத்தில் கையடக்கத் தொலைபேசியை உபயோகித்த நபருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிமன்ற அமர்வில் இருந்தபோது கையடக்கத் தொலைபேசியைப் பயனபடுத்திய குற்றத்தின்பேரில் பேருவளையைச் சேர்ந்த மொஹம்மது அஷரப் என்பவருக்குக் களுத்துறை நீதிபதி சுமித் அருண பெரேரா இந்த அபராதத்தை விதித்தார்.

நீதிமன்றத்தில் அமைதி கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று நீதிபதி தெரிவித்தார். (ப-8)

அமைச்சர் மங்கள சமரவீர ஆரம்பித்து வைத்தார்

# தெற்காசியாவில் அழகிய நகராக கொழும்பை மாற்றுவதற்குத் திட்டம்

கொழும்பு,ஜூலை4

கொழும்பைத் தெற்காசியாவில் அழகிய நகராக உருவாக்கும் நோக்குடன் கொழும்புப் பேரவாவி, காலி முகத்திடல், கரையோரப்பகுதி ஆகியவற்றை அபிவிருத்திசெய்யும் திட்டமொன்றை அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதியின் பிறந்ததினத்தை முன்னிட்டுக் கடந்த புதன்கிழமை இத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. துறைமுக விமானப் போக்குவரத்து அமைச்சு, நகர அபிவிருத்தி நீர்விநியோக அமைச்சு ஆகியன இணைந்து இத்திட்டத்தை மேற்கொள்கின்றன.

மேற்படி திட்டத்திற்கமையக் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் கேளிக்கை விடுதிகளும், பூங்காக்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டப் பணிகள் இவ்வாண்டு டிசெம்பர் முதலாம் திகதி முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு முதலீட்டுச் சபை, தனியார் சபை மற்றும் இலங்கை உல்லாசப் பயணச் சபைகளிடம் இந் நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் தினேஷ் குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார். (-8-ரி)

# பல்கலைக்கழக பீடாதிபதிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் 17ஆம் திகதியன்று

கொழும்பு,ஜூலை4

பல்கலைக்கழகங்களின் பீடாதிபதிகள் பங்குபற்றும் ஆலோசனைக் கூட்டமொன்றுக்குக் கல்வி அமைச்சின் செயலாளர் ஏற்பாடு செய்திருக்கிறார். எதிர்வரும் 17ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக் கேட்போர் கூடத்தில் இக்கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டுமாத காலமாக கல்வி அமைச்சு மேற்கொண்ட கல்வி சார் நடவடிக்கைகள் பற்றி விளங்குவதற்கும், எதிர்காலத்தில் பல்கலைக்கழகக்கல்வி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பற்றி அவர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்குமாகவே இந்தக் கூட்டம் நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களுக்கு உதவி புரிவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும், புதிய அலுவலர்களை வேலைக்கு அமர்த்துதல், கல்வி மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர்கள் தொடர்பான தடைகளை நீக்குவது, பல்வைத்தியம் மற்றும் மருந்துத்துறை சார்ந்தவர்களுக்குக் கொடுப்பனவுகளைச் சமம் செய்தல், விடுதிவசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி ஆதாரங்களைக் கண்டுபிடித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் பீடாதிபதிகளுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத்தலைவர் விளக்கமளிப்பார். (ப-8)

# இந்த அரசமைப்பை மாற்றுவது சிறுபான்மையினரைப் பாதிக்கும்

## எகலியகொடை கூட்டத்தில் ஹக்கீம் உரை

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பை மாற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் சிறுபான்மையினரை வெகுவாகப் பாதிக்கும். எனவே, நாங்கள் அந்த மாற்றத்தை எதிர்க்கின்றோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப்ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணசபைக்கு மரச்சின்னத்தின் கீழ்த் தனித்துப்போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்துக் கடந்த செவ்வாய்க்கிழமை எகலியகொடை நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் குறித்தும் - இந்த நாட்டுக்குப் பொதுவான பிரச்சினைகள் குறித்தும், மிகுந்த கவனம் செலுத்தி அவதானதுடன் செயற்பட்டுவருகின்றது. பல்லின மக்கள் வாழுகின்ற இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வளர்த்தெடுப்பதில் ஆர்வங்காட்டி வருகின்ற அதேநேரம், சிறுபான்மைக் கட்சியாக இருந்தாலும் எந்தவொரு நபருக்கும் இழைக்கப்படும் அநீதிகது எதிராகக் குரல்கொடுக்கவும், அது தயங்கப் போவதில்லை."

இந்த நாட்டின் அரசமைப்பை மாற்றி அதன்மூலம் அதிகாரத்தில் நிலைத்திருக்க ஜனாதிபதி இன்று பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றா. முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமனற உறுப்பினர்களைக் காவுகொள்ளும் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதனால், நாட்டுககு நல்லது நடக்கப்போவதில்லை.

இந்த மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றால் அரசமைப்புத் திருதத்திற்கு மக்கள் ஆணைதந்துவிட்டனர் என ஒரு பிரமையை உருவாக்க முனைவார்கள். ஒரு தனிப்பட்டவரின் சுயதேவைக்காக எடுக்கப்படும் இவ்வாறான நடவடிக்கையை எக்காரணமகொண்டும் அனுமதிக்கமுடியாது.

கடந்த பிரதேச சபைத் தேர்தல்களின்போது இம்மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து போட்டியிட்டோம். தற்பொழுது மாகாண சபைத் தேர்தலுக்காக மரச்சின்னத்தில் தனித்துப்போட்டியிடுகின்றோம். விகிதாசாரத் தேர்தல் முறையில் தனித்துக்கேட்பதில் இருக்கின்ற - வெலலக்கூடிய - வாய்ப்புகளைக் கணித்து இம்முடிவை மேற்கொண்டோம்.

இம்மாகாணத்தில் பிரதேச சபைப் பிரதிநிதித்துவம் எமக்கு இருக்கின்றது. அதனை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தவேண்டும். அந்த நகர்வுக்கான சிறந்ததொரு வாய்ப்பு இப்பொழுது உருவாகியிருக்கின்றது. இதனை இங்கிருக்கின்ற முஸ்லிம் சமூகம் சரியானமுறையில் பயன்படுத்தி சப்ரகமுக மாகாணசபையில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உருவாக்க வேண்டும். அந்தப் பிரதிநிதித்துவம் தனிப்பட்ட செல்வாக்கின் அடிப்படையிலான பிரதிநிதித்துவமா? முஸ்லிம் மக்களின் ஒட்டுமொத்த அபிலாஷைகளை உள்ளடக்கிய நிறுவன ரீதியான பிரதிநிதித்துவமா? - என்பதை நீங்கள் தூரதரிசனத்துடன் சிந்திக்க வேண்டும்.

பெரும்பான்மையினக் கட்சிகளில் உங்களால் கடந்த காலங்களில தெரிவுசெய்து அனுப்பப்பட்டோர் சாதிததவை என்ன? ஐக்கிய தேசியக் கட்சி முஸலிம, பொதுசன ஐக்கிய முன்னணி முஸலிம என வித்தியாசம் கிடையாது எல்லா முஸலிமகளுக்காகவும் பேரம்பேச இந்தக கட்சி இருக்கவேண்டும். உங்களுக்காகப் பேசுவதற்கான அந்தஸ்தையும் கண்ணியத்தையும் நீங்கள் பெற றுத்தரவேண்டும். நாடளாவிய ரீதியில் பரந்து, விரிந்து தேசிய அரசியல பலம்வாய்ந்த ஒருசக்தியாக இருக்கின்ற இயக்கத்தின் பங்காளியாக நீங்களும் இணைந்துகொள்ள வேண்டுமென நான் அவாவுறுகின்றேன்.

- இவ்வாறு அவர் அங்கு கருத்துக்கள் தெரிவித்தார். (க)


## கவிதாலயா இசைக்குழு

புதிய பாடகர், பாடகிகளுடன் தரமான இசை நிகழ்வுகளைக் கண்டுகளிக்க நாடுங்கள்:

**கவிதாலயா இசைக்குழுவினர்**

தொடர்புகளுக்கு:
870, பருத்தித்துறை றோட்,
முத்திரைச் சந்தையடி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி-35979) (24-14-26)

தலைமையகம்:
எ.அருள்நாதன்
பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம்.

## பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறவிருக்கும் தொழில்களை இனங்காணும் நிகழ்ச்சித் திட்டத்தில் பணிபுரிய விரும்பும் பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மாவட்ட அலகுப் பொறுப்பாளர்**
DISTRICT UNIT LEADER
*(மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 5 பணிநிலைகள்)*


**ஆராய்ச்சி உத்தியோகத்தர் [களநிலை]**
RESEARCH OFFICER (FIELD)
*(மாவட்டத்திற்கு 3 பேர் வீதம் 15 பணிநிலைகள்)*

பணிநிலைக்கான காலம் : 3 மாதங்கள்
வேதனம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

பட்டதாரிகளும், திட்டச் செயற்பாடுகளில் அனுபவம் உள்ளவர்களும் ஜுலை 8 ஆம் திகதி (08.07.2004) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப 4.00 மணி வரை கீழ்க்கண்ட முகவரியில் சமுகமளிக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றீர்கள்.

தொடர்பு :
**தகவல் முகாமையாளர்,**
**வர்த்தக தொழில்துறை மன்றம்,**
**யாழ்ப்பாணம்.**
17, விவசாய சேவை நிலைய வீதி,
முத்திரைச்சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி35967)(40-14-26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 - 07 - 1925
மறைவு 15 - 07 - 2003

**அமரா அப்பாத்துரை சுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், குடிவரவு – குடியகல்வுத் திணைக்களம்)

ஆண்டு ஒன்று மறைந்தாலும் ~ உங்கள்
திருமுகம் நம்மைவிட்டு மறையவில்லை
ஆண்டுகள் பல கடந்தாலும் ~ எங்கள்
நினைவெல்லாம் உங்களடி மறவாது
நின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*சொர்ணவாசா,*
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*

குடும்பத்தினர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(33739)(24-14-26)

## STUDY IN INDIA

### Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY ( Channai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

Partial SCHOLARSHIPS for students with average of 75 marks in A/L exam

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு
Mr. K.Jegaeswaran (B.Sc, Dip. in Edu.)
(Chemistry Teacher - J/Vembady Girls High School)
ANDRA, உடுப்பிட்டிச்சந்தி. K.K.S Road, கோண்டாவில்
Telephone :- 021-4590268 or 9

## சிங்கப்பூரில் திருமண சேவை



சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும், வீடு முறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் "குட்டி இந்தியா" என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால் வேண்டிய பொருள்களை நடந்து சென்றும் வாங்கலாம். மேலும் விவரமறிய எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியாகக் கைத்தொலைபேசி எண் 0065 97514941, தொலைநகல் 0065 64816144

சிங்கப்பூரில் சுற்றுலா அனுமதி கிடைப்பது சில சமயங்களில் கஷ்டம். அதனால் ? கிழமைக்கு முதலில் எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**LINGAM WEDDING SERVICES**
10,Anson Road# 15 - 14 International Plaza,
Singapore 079903
(26954)(16-18)

உ
சாயிராம்

## பணியாளர்கள் தேவை

I உள்நாட்டு வெளிநாட்டு சமையல் தெரிந்தவர்
II பூந்தோட்டம் பராமரிப்பவர்
III பாதுகாவலர்
IV உணவு பரிமாறுபவர்
V சிட்டை எழுதுநர்
VI சமையல் உதவியாளர்
VII உல்லாச விடுதி பணியாளர்

மேலே குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை. அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 06-07-2004 காலை 9.30இற்கு நேரில் சமுகந்தரவும். (33751) (26-14)

76/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2810.

நிர்வாகி,
மில்லேனியம் றெஷ்ரோறன்ற்
அன்ட் மில்லேனியம் கெஸ்ற்ஹவுஸ்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி




மண்ணில் 19 - 02 - 1929
விண்ணில் 04 - 07 - 1994

**திருமதி அனா ஞானமணி நரசிங்கம்**

பத்து மாதம் எமைச் சுமந்த குலவிளக்கே! - இன்று
பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன பாரினில் நீங்கள் அணைந்து
நாமுள்ளவரை எம் இதயத்தில் இருந்து என்றும்
நீங்கள் அணையாத ஒளி விளக்கு.

தகவல்: மு.நரசிங்கம் (கணவர்)
*உடுப்பிட்டி வீதி,*
*மாலிசந்தி, வதிரி, கரவெட்டி.*

கணவர், மகள்கள், மகன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(33688) (24-14-26-19)




யாழ் நகரில் புதிய உதயம்

## K.K.போன் சேவிஸ்


இல.01, நவீன சந்தை மேல்மாடி,
மக்கள் வங்கிக் கிளைக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

அனைத்துப் போன்வகைகளும் SIM காட்
Kit காட் மற்றும் உதிரிப்பாகங்களை
மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்
கொள்வதோடு போன்பழுது லொக்
உடைத்தல் போன்றவற்றை துரித கதியில்
பெற்றுக்கொள்ளவும்

உத்தரவாதத்துடன் பற்றறிகளை பெறவும் நாடுங்கள்.

K.K.போன் சேவிஸ்

(33118)


தேர்வுக்கு வந்தோருக்கு உபசரிப்பு



# தமிழீழத் துணைப்படையில் பணத்துக்காகச் சேரவில்லை; உணர்வின் உந்துதலால் இணைந்தோம்!

இலங்கை இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பதற்கான திகதிகள் அடிக்கடி பத்திரிகைகளில் வெளியிடப்படுவது வழக்கம். அதேவேளை, அந்த ஆள்சேர்ப்பு எதிர்பார்த்த வெற்றியளிக்கவில்லை என்று செய்திகள் வெளிவருவதும் அதைவிட வழக்கமான விடயமாகிவிட்டது.

ஆனால், தமிழீழக் காவல்துறையினர் தேசியத் துணைப் படைக்கு ஆள்சேர்க்கும் தினத்தின் முதன நாளிலேயே கிளிநொச்சியில் உள்ள காவல் துறைத் தலைமைப் பணிமனையில் இளைஞர், யுவதிகளின் கூட்டம் அலை மோதியது.

தமிழீழக் காவல்துறையின் துணைப் படைக்கு ஆள்சேர்க்கும் நடவடிக்கை பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டது. கடந்த 23 ஆம் திகதிமுதல் 30 ஆம் திகதிவரை நடந்த இந்த ஆள்சேர்ப்பின் போது ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தாமாக விரும்பி வந்து துணைப்படையில் இணைந்துள்ளனர்.

கடந்த காலங்களில் துணைப் படைக்கு ஆள்களைச் சேர்க்கும் போது வன்னிப் பெருநிலப்பரப்புக்குள் மட்டும் விளம்பரப்படுத்தி நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு ஆள் சேர்ப்பு இடம்பெற்றது.

### பெரும் எடுப்பில் ஆள்சேர்ப்பு

இந்தத் தடவை வன்னிக்கு வெளியே தமிழீழத் தாயகப் பிரதேசம் எங்கும் பெரும் எடுப்பில் ஆள் சேர்ப்புக்கான பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடடுப் பிரதேசங்களுக்கும் இந்த நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டன. அந்தப் பிரதேசங்களில் வெளிவரும் பத்திரிகைகள் ஊடாக விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. அபபிரதேசங்களில் உள்ள அரசியல் துறை அலுவலகங்கள் மூலமும் விளம்பரப்படுத்தப்பட்டன.

'புலிகளின் குரல்' வானொலி மூலமும், ஒலிபெருக்கி மூலமும் ஆள் சேர்ப்பு விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகளுக்கு உரிய பயன்கிட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைப் பலாத்காரமாக இயக்கத்தில் விடுதலைப் புலிகள் இணைத்துக் கொள்கின்றனர் என்று 'யுனிசெவ்' உடபடப பல அமைப்புகளும் அமெரிக்கா போன்ற நாடுகளும் பிலாக்கணம் பாடுவது வழமையான ஒன்றுதான்.

இந்தநிலையில், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே துணைப் படையில் இணைத்துக்கொள்ளப்படுவர் என்று தமிழீழ காவல்துறை அறிவித்தது. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பதை உறுதிசெய்யும் வகையில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பிறப்புச் சான்றிதழ் பத்திரம் துருவித் துருவி ஆராயப்பட்டது. 18 வயதுக்குக் குறைந்தவர்கள் திருப்பிஅனுப்பப்பட்டனர்.

### நேர்முகத் தேர்வு

கடந்த 23 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பமாகின. முதல் நாளிலிருந்து முடிவுத் திகதியான 30ஆம் திகதி நெருங்க நெருங்க தினமும் பெரும் எண்ணிக்கையானவர்கள் சமுகமளித்தனர்.

காவல்துறையின் துணைப் பொறுப்பாளர் சி.மாதவன் தலைமையில் ஆளணிப்பிரிவுப் பொறுப்பாளர் க.கலையரசன், பிரதம பரிசோதகர் ரஞ்சித்குமார், வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன், பரிசோதகர் பொ.பவானி ஆகியோர் அடங்கிய குழு நேர்முகப் பரீட்சைகளை நடத்தியது.

காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நேர்முகப் பரீட்சையைக் கணகாணித்ததுடன் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் அக்குழுவுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்.

### வரவேற்பு

விசேடமாக அமைக்கப்பட்ட கரும பீடத்தில் தேர்வுக்கு வருபவர்கள் இன்முகத்துடன் வணக்கங்கூறி வரவேற்கப்பட்டனர். அதன் பின் அவர்களின் விருப்பம், விவரங்கள் விசேட படிவத்தில் பதியப்பட்டன.

அவர்களின் உடல், தேக ஆரோக்கிய நிலைகள், குடும்ப விவரங்கள் உட்படப் பல விடயங்கள் குறிக்கப்பட்டன.

உடன் இணைய விரும்புபவர்கள் பயிற்சிக்கல்லூரிக்கு அனுப்பப்பட்டனர். ஏனையோருக்கு சமுகமளிக்க வேண்டிய தினம் அறிவிக்கப்பட்டது.

நேர்முகப் பரீட்சைக்கு வருபவர்கள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டு அதன் பின்பே அவர்கள் தொடர்பான முடிவை இந்தக் குழு எடுப்பதை அவதானிக்க முடிந்தது. மாற்றுக் குழுக்களைச சேர்ந்தவர்கள் ஊடுருவுவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எனக் கருதப்படுகின்றது.


நேர்முகத் தேர்வு

### கலையரசன்

நேர்முகப் பரீட்சைக்குப் பொறுப்பாக இருந்த ஆளணிப் பிரிவுப் பொறுபபாளர் த.கலையரசன் கருத்துத் தெரிவித்தபோது:-

7 நாள்களாக நேர்முகப்பரீட்சைகள் இடம்பெற்றன. இதில் தமிழீழ தாயகப் பிரதேசத்திலிருந்து ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டவர்கள் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளித்தனர். அவர்களில் தகுதியானவர்களை மட்டுமே தெரிவுசெய்தோம். வயது, தேக ஆரோக்கிய நிலை முககியமாகக் கவனத்தில் எடுக்கப்பட்டன. நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளித்தவர்களில், எமது நிபந்தனைகளுக்கு அமைவானவர்களை மட்டுமே சேர்த்துள்ளோம். தகுதியற்றவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

நேர்முகப்பரீட்சைக்கு வந்தவர்களில் கூடுதலானவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அடுத்ததாக வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இருந்து வந்தனர்.

இணையவந்தவர்கள், தங்கள் பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் பலர் வரவிருக்கின்றனர் என்றும் -

கால அவகாசம் போதாது என்றும் -

எமக்குத் தகவல் தந்துள்ளனர். இந்த அடிப்படையில், அவர்களுக்கும் வாய்ப்பு அளிப்பதற்காக மேலும் ஒருதடவை நேர்முகப்பரீட்சையை நடத்துவது குறித்து ஆராய்ந்து வருகின்றோம்" என்றார் அவர்.

நேர்முகப்பரீட்சைக்காகத் தூர இடங்களில் இருந்து வந்தவர்களுக்கான வசதிகளைக் கலையரசனே பொறுப்பாக நின்று செய்ததை அவதானிக்க முடிந்தது.

நேர்முகப் பரீட்சைக்காக இறுதி நாளன்று வந்த சிலரைச் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

### இணைய வந்தோர் எண்ணங்கள்

"நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் நிலவுகின்றது. இந்த நிலையில் துணைப்படை வீரருக்கு மாதாந்தம் 8ஆயிரத்து 500 சம்பளம் வழங்கப்படும் என்று காவல்துறையினர் அறிவித்தனர். அதற்காகவா நேர்முகப்பரீட்சைக்கு வந்தீர்கள்?" எனக் கேட்டதற்கு அவர்கள் 'இல்லை' என்று ஒரே குரலில் பதில் அளித்தனர்.

"எமக்குச் சம்பளம் தேவையில்லை. மண்ணை மீட்கும் போராட்டத்துக்கு உரமூட்ட விரும்புகின்றோம்" என்று ஒன்றுபட்டு உணர்வு பொங்கக் கூறினர் அவர்கள்.

### பாண்டியன்

வடமராட்சி கிழக்கு குடாரப்பைச் சேர்ந்த சே.பாண்டியன் (வயது 22) என்பவர் தமது ஆதங்கத்தை வெளியிடுகையில்:-

"சம்பளத்தை நோக்கமாகக் கொண்டு வரவில்லை. மண்மீட்கும் போரில் என்னை இணைத்துக் கொள்ளவே வந்தேன். பத்திரிகையில் வந்த விளம்பரத்தைப் பார்த்து, பெற்றோரிடம் எனது விருப்பத்தைக் கூறினேன். பூரண சம்மதத்தைப் பெற்றோர் தந்தார்கள். இதை அடுத்து மணமீட்புப் போரில் என்னை இணைதது்க் கொண்டுள்ளேன்" என்றார்.

### சந்தியா

நெல்லியடியைச் சேர்ந்த சி.சந்தியா (வயது 18) என்ற யுவதி தனது கருத்தை வெளியிடுகையில்:-

"ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீட்டில் இருந்தேன். துணைப்படைக்கு ஆள்களைச் சேர்ப்பதாக அறிந்தேன். மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற இலட்சியக் கனவு கண்ட நான், துணைப்படையில் இணைந்து கனவை நனவாக்க முடிவுசெய்தேன். பெற்றோரின் சம்மதத்துடன் இன்று துணைப்படையில் இணைந்து விட்டேன். நாட்டு விடுதலையில் மக்களின் உயர்வில் என்பணியை ஆரம்பித்துவிட்டேன்" என்றார் பெருமைபொங்க.

### கணேஷ்

திருகோணமலை நகரப்பகுதியைச் சேர்ந்த ஆர்.கணேஷ் (வயது 20) என்ற இளைஞர் கருத்து வெளியிடுகையில்:-

'10ஆம் ஆண்டு வரை கல்வி கற்றேன். விடுதலைப் புலிகளுடன் இணைந்து நாட்டு விடுதலைக்காகப் போராட வேண்டும் என்று நீண்ட காலமாக எனக்கு ஆசை இருந்தது. ஆனால், குடும்பச் சூழ்நிலையால் அது முடியவில்லை. ஆள் சேர்க்கும் தகவல் எனக்குக் கிடைத்தது. அதையடுத்து உடன் அதில் இணைய முடிவு செய்தேன். என்னோடு பலர் இணைய விருப்பம் கொண்டிருந்தனர்.

"சமாதானச் சூழலிலும் அரச படைகள் எம்மீது புரியும் அடாவடித்தனங்கள் மற்றும் கைதுகள் எனது மனத்தை நெருடிக்கொண்டிருந்தன. எமது மண்ணில் சுதந்திரமாக வாழும நிலை எப்போது வருகின்றதோ அது வரை என்போன்ற இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்து கொண்டு தான் இருப்பார்கள்" - என்றார்.

### கஜேந்தினி

மட்டக்களப்பு, புன்னச்சேனையைச் சேர்ந்த ச.கஜேந்தினி தனது ஆதங்கத்தை வெளியிடுகையில்:-

"1990 ஆண்டு எமது ஊரில் படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்திருந்த நேரத்தில் எமது வீட்டுக்கு முன்பாக வைத்து எனது அப்பா படையினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். சிறுபிள்ளையாக அப போது இருந்த நான் தாயின் உதவியுடன் படிந்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகுத் தோற்றிச் சித்தியடைந்தேன்.

"தந்தை கொலை செய்யப்பட்டமை எனது மனதை வாட்டிக் கொண்டிருந்தது. அந்த உணர்வின் வெளிப்பாடே இன்று நான் துணைப்படையில் இணையக் காரணமாக அமைந்தது.

"எனது தாயின் சம்மதத்துடன் - விருப்பத்துடன் - துணைப்படையில் இணைந்து புதிய அத்தியாயம் ஒன்றை உருவாக்க விரும்புகிறேன்" - என்றார்.

### ஹப்ரினா

வவுனியாவில் நீண்டகாலமாக வாழ்ந்து தமிழீழத்தின் பிரஜை எனத் தன்னைக் கூறிக் கொள்வதில் பெருமைப்படும் பறங்கி இனத்தைச் சேர்நத ஹப்ரினா நிலுஸ்டன் (வயது19) எனற யுவதியும் துணைப்படையில் இணைநதுள்ளார்.

"நான் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். நான் பிறப்பில் இருந்தே வவுனியாவில் வசிக்கின்றேன். தமிழீழப் பிரஜையாக என்னை ஏற்கத் துணைப்படையினர் சம்மதம் தெரிவிதததையிட்டு மகிழ்கின்றேன்.

"நண்டகாலமாகப் போராட்டத்தில் இணையவேண்டும் என்ற விருப்பம் என் மனதில் இருந்தது. அந்த விருப்பம் இன்று நிறைவேறுகின்றது. எனது விருப்பத்தை எனது பெற்றோரிடம் கூறினேன். அவர் கள் சம்மதித்து விட்டனர். இன்று துணைப்படையில் இணைகின்றேன்" என்றார் அவர்.

"வவுனியாவில் நான் இருக்கும் இடத்துக்கு 'தேக்கவத்தை' என்று பெயரிட்டுள்ளனர். தேக்கமரம் நிறைநத அந்த இடத்துக்கு 'தேக்கங்காடு' எனத் தமிழில் பெயரிடலாமே. தமிழ் மக்கள் வாழும் அந்தப் பகுதிக்குச் சிங்களச் சொல்லைப் பாவிப்பதே எமது தமிழீழத்துக்கு எதிரான செயற்பாடு எனக் கருதுகிறேன் என்று உணர்ச்சி பொங்கக்கூறிய அவர், தமிழீழம் தான் இந்தச் செயல்களுக்கு ஒரே வழி" என அடித்துக் கூறினார்.

**...தேக்கங்காட்டுக்கு 'தேக்கவத்த' என்ற சிங்களப் பெயரா? இதனைத் தடுக்கத் தமிழீழமே ஒரே வழி. அதனாலேயே துணைப் படையில் இணைகின்றேன்...**

*– பறங்கி இன யுவதி ஹப்ரினா –*

### பிரியா

மன்னார் பாப்பாமோட்டையைச் சேர்ந்த செ.பிரியா (வயது 20) என்ற யுவதி குடும்பத்தில் ஒரே பெண் பிள்ளை. அவருக்கு மூன்று சகோதரர்கள் அவர்களில் ஒருவர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார். விடுதலைப் போராட்டத்தில் இணைய வேண்டும் என்று அன்று தனது மனதில் உருவான உத்வேகம் இன்று தான் நிறைவேறுகின்றது - என்றார் அவர்.

### இறுதித் தேர்வாளர்

கொடிகாமம் வரணியைச் சேர்நத செ. இராசேந்திரம் (வயது20) என்பவர் இறுதி நாளன்று நேர்முகப் பரீட்சைகள் முடிவடையும் நேரத்தில் வநதார். வானொலியில் கேட்டுவிட்டு ஓடி வந்தேன் என்றார் அவர்.

விடுதலையில் வேட்கை கொண்ட பல இளம் உள்ளங்களை இணைக்கும் துணைப்படையின் நேர்முகப் பரீட்சைகள் கடந்த 30ஆம் திகதி மாலையுடன் பூர்த்தியானது.

நேர்முகப் பரீட்சையை மேலும் நீடிக்கும்போது மேலும் ஆயிரத்துககு மேற்பட்டவர்கள் இணைவார்கள் என்று காவல்துறை ஆளணிப் பொறுப்பாளர் நம்பிக்கை வெளியிட்டார். ★

~ குகா ~

## சமுர்த்தி அலுவலர் கௌரவிப்பு

கைதடி,ஜூலை4

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டுச் சமுர்த்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட கொடி விற்பனையில் ரூபா ஐயாயிரத்திற்கும் மேல் சேகரித்த கைதடி வலய சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூவர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கைதடி கிழக்கு கிராம சேவகர் பிரிவில் கி.சத்தியசீலன், கைதடி தெற்கு கிராமசேவகர் பிரிவில் யோ.உதயணன், கைதடி மேற்கு கிராம சேவகர் பிரிவில் செ.ஜெயபாலன் ஆகியோரே சமுர்த்தி அதிகார சபையினால் கைதடி சமுர்த்தி வலய மட்டத்தில் கௌரவிக்கப்பட இருக்கும் சமுர்த்தி அபிவிருத்தி உததியோகத்தர்கள் ஆவார்கள்.

(ஒ-75)

## ஜேர்மன் வெளிநாட்டமைச்சர் இலங்கை வருகிறார்

கொழும்பு,ஜூலை4

இலங்கைக்கான இருநாள் விஜயத்தை மேற்கொண்டு ஜேர்மன் வெளிநாட்டமைச்சர் ஜோஸ்காபிஷெர் எதிர்வரும் 17 ஆம் திகதி வருகை தரவுள்ளார்.

இவர் ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தியா, சீனா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தின் ஓர் அங்கமாகவே அவர் இங்கு வருகை தரவுள்ளார். (-10-ரி)

## தம்பசிட்டி மெதடிஸ்தமிஷன் பாடசாலைக்கு மாடிக்கட்டடம்

வடமராட்சி,ஜூலை4

தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் 5 லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

அத்துடன், 60 மாணவர்களும், 10 ஆசிரியர்களும் இருந்து கற்க, கற்பிக்க வசதியாக இரண்டு லட்சம் ரூபா செலவில் 70 கதிரை, மேசைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இப்பாடசாலையில் வகுப்பறை, தளபாடப் பற்றாக்குறை நீங்கியுள்ளதாக அதிபர் வி.வடிவேலு தெரிவித்துள்ளார்.

(8-173)

## வலி.தென்மேற்கில் 41 இடங்களில் வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம்,ஜூலை4

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட 41இடங்களில் வீதி விளககுகள் பொருத்தப்படவுள்ளன.

இதற்கான இட அமைவுகளைத் தெரிவுசெய்வதற்கான முக்கிய கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்குப் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதேசசபைச் செயலாளர் பி.விக்டர் தலைமையில் இடம்பெறும் இக் கூட்டத்திற்கு 14 பொது அமைப்புக்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (8-185)

## விளையாட்டு விழாவும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,ஜூலை4

இணுவில் கலாஜோதி சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழாவும் கற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் மா.ஜெயசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் செ.செல்வராசாவும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறார்களின் விளையாட்டுப் போட்டியின் முடிவில் கடந்த வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சை, ஜீ.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை மற்றும் மாவட்ட மட்ட பேச்சுப்போட்டி என்பவற்றில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட இருக்கின்றன.

தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (-4)

---

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

நிறுவுநர் நினைவுநாளும்
வருடாந்த பரிசளிப்பு விழாவும் - 2004
**கணனிக் கற்கை நிலையத் திறப்பு விழாவும்**

காலம்: இன்று (04.07.2004) ஞாயிறு
காலை 10.00 மணி
இடம்: வாகீசர் மண்டபம்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி.
தலைவர்: திரு.க.ஜெகநாதன் (அதிபர்)
பிரதம விருந்தினர்:
**தே.ம.சுவாமிநாதன்** அவர்கள்
(சட்டத்தரணி, முன்னாள் மேல்மாகாண ஆளுநரும்,
தேசிய சேமிப்பு வங்கித் தலைவரும்)
சிறப்பு விருந்தினர்: **சார்ளி மகேந்திரன்** அவர்கள்
(இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் முன்னாள்
நிரந்தரப் பிரதிநிதி)
பரிசில் வழங்கல்: **திருமதி சந்திரா மகேந்திரன்**
நிறுவுநர் நினைவுப் பேருரை:
**திரு.ந.விவேகானந்தராஜா**
(முன்னாள் தலைவர், பழைய மாணவர் சங்கம்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

- பாடசாலைச் சமூகம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய். (சி-35989)(34-14-19)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
**பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி நாகரத்தினம் பொன்னுத்துரை**

அவர்கள் காலமானதையிட்டுக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குவதோடு பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உடற்கல்வியலகு, - உத்தியோகத்தர்கள்.
யாழ். பல்கலைக்கழகம். (சி-35990) (26-34-14-19)

---



உ

பொன்னாலை
**அருள்மிகு நரசிங்க வைரவர் தேவஸ்தானம்**
ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன
**மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

மெய்யடியார்களே!

நிகழும் தாரண வருடம் ஆனி மாதம் 24ஆம் நாள் (08.07.2004) வியாழக்கிழமை சஷ்டி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய பகல் 10.47 மணிமுதல் 12 மணிவரையுள்ள கன்னி இலக்கின சுபமுகூர்த்தத்தில் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

கிரியைகள் ஆரம்பம்:
04.07.2004 ஆனி மாதம் (20 ஆம் நாள்)
ஞாயிற்றுக்கிழமை காலை

அடியார்கள் அனைவரும் வருகைதந்து எம்பெருமானின் தரிசனத்தைக் கண்டு இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். தொடர்ந்து 15 தினங்கள் அபிஷேகம் நடைபெறும்.

பொன்னாலை, சுழிபுரம். (33653)(34-14-19) ஆலய பரிபாலகர்.

---

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சோமசுந்தரம் (பாலு)



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சோமசுந்தரம் 29.06.2004 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பியையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ருக்குமணியின் அருமைக் கணவரும் அருளையா, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் செல்லம்மா, அன்னலட்சுமி, அருளம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் சிவராசா, அன்னலிங்கம், பராசக்தி ஆகியோரின் மைத்துனரும் தில்லைநாயகி, அமலகுமார், ஜெயக்குமார், ஜெயக்குமாரி, நந்தகுமார், விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஶ்ரீகாந்தசிங்கம், கோணேஸ்வரலிங்கம், ரஞ்சிதமலர், விஜயா, யாழினி, கீதாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் வசீகரன், சர்மிலா, கஜானா, பிரகாஷ், பிருந்தா, தீபிகா, திசாந், திவ்யா, தினேஷ், திசாந், கிஷாந்தினி, ரஜீவன், கீர்த்தனா, கம்சிகா, நிலாங் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 05-07-2004 திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.07, பண்டாரக்குளம் வீதி,* அ.கோணேஸ்வரலிங்கம்
*நல்லூர் வடக்கு, நல்லூர்.* (33767)(42-34-14-19) (மருமகன்)

---

## 45 ஆம் நாள் நெஞ்சைவிட்டகலா நினைவஞ்சலி

திருமதி

**தர்மகுலசிங்கம் கமலாம்பிகை**



அன்னை மடியில் 11-07-1958 — இறைவன் அடியில் 19-05-2004

**அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து**
**அமரராகி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வமே!**
**பொறுமையினால் வாழ்வை ஏணிப்படிகளாக உயர்த்தி**
**சவால்களுக்கு எதிராகத் தோள் கொடுத்து**
**வாழ்வை ஒளிமிளிரச் செய்த எங்கள் குலவிளக்கே!**
**அறிவில் சிகரமாக விளங்கி**
**எல்லோர்க்கும் நல்வழிகாட்டிய எம் குலமகளே!**
**உடலால் மட்டுமே நீங்கள் எமைவிட்டுப் பிரிந்தீர்கள்**
**இவ்வுலகில் உமதுயிர் எம் உயிரை விட்டு ஒரு போதும் பிரியாது**
**உம் நினைவுகள் எம்மனதில் எப்பொழுதும் நிழலாடிக்கொண்டிருக்கும்.**

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஏழாலை தெற்கு, தாய், சகோதரர்கள்,
சுன்னாகம். (33655) (26-14-19-34) கணவர், பிள்ளைகள்.

| | | | |
|---|---|---|---|
| | ரா. | வெ. | சூ. சனி |
| | இராசிச் சக்கரம் | | செவ். புதன் |
| சந். | | | வியா. |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 04-07-2004 - 10-07-2004

**மாற்றம்:**

04.07.2004 உத்தராடம் 4இல் சந்திரன் மகர இராசியில் நிற்கும்.

உலக நாடுகளின் அழுத்தம் உச்சக் கட்டத்தில் இருக்கும். அரசிற்குப் புதிய நெருக்கடிகள் தலைதூக்கும். பொருளாதார நெருக்கடியால் அழுத்தம் ஏற்படும். மக்களைக் காப்பாற்றச் சமாதான முயற்சியை முன்னெடுக்க வேண்டும் என மக்கள் குரல் எழுப்புவர். இந்தியா உதவிகள் செய்யும். இந்தியாவில் வன்முறைகள் அதிகரிக்கும். ஈராக்கில் கலகம் வரும். மத்திய கிழக்கில் விட்டுவிட்டு வன்முறைகள் அதிகரிக்கும். இந்துசமுத்திரம், அரபிக் கடலில் காற்றழுத்தம், கொந்தளிப்பு ஏற்பட்டு சீதோஷ்ண நிலை மாறும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

ஓய்வற்ற நிலை உடல் நிலையைப் பாதிக்கும். அடிக்கடி களைப்பு, தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பு இடமாற்றங்கள், இனசன உதவிகள் கிடைக்கும. புதிய திட்டங்களில் மந்த நிலை, தாய்வழியினரால் மனக்கவலை என்பன கொடுக்கும். சங்கீத ஞானம், தெய்வதரிசனம், பலத்த யோசனை, புத்திரர் பற்றி சிந்தனை, அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைத்தல், போக்குவரத்துச் சிறப்பு, குருத்தொழில் போன்றவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், வியாழன்.*

### இடபம்

சில தவறுகள் நீங்கள் விடுவீர்கள். சங்கீதத்துறை, ரி.வி. டெக், சினிமாத்துறை நன்மை அடைவர். எதிர்பாலாரால் தொலலைகள் ஏற்படல். மாணவர்களுக்குச் சித்திகள், சட்டத்துறையினர்கள், சங்கீதத்துறையினர் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் :- வியாழன்.*

### மிதுனம்

எதிர்மாறான கருத்துக்கள் ஏற்படல். பிரயாணம், இனசன உதவிகள், கடும் வசனப் பேச்சு, சகோதர உதவிகள், புதிய திட்டங்கள், படபடப்பு, முயற்சியால் மாற்றங்கள், வீடு மனைச் சிறப்பு என்பன கொடுக்கும். நண்பர்களின் ஆலோசனை உங்களைத் தாமதப்படுத்தலாம். கை, கால் உளைவு, தோல் வருத்தம் கொடுக்கும். நிர்வாக பீடம், குருத்துறையினர் நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள் :- வியாழன்.*

### கடகம்

ஆசையே துன்பத்திற்குக் காரணம். உங்களின் ஆசையால் பல இழப்புகளை நீங்கள் சந்திப்பீர்கள். மற்றவர்களின் அலுவல்களில் ஈடுபட்டு வீண் மனஸ்தாபப்படுவீர்கள். வரவுக்கு மீறிய செலவுகள் வரும். சகோதரர்களால் வீண் மனஸ்தாபம் வரும். மேலதிகாரிகள் நன்மைகள் செய்துதருவர். பொருளில் நிதானமாக இருக்கவும். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெரியவர்களின் உதவி கிடைக்கும். சளித்தொல்லை வரலாம். அரசியல்வாதிகள், ஆசிரியர்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள் :- வியாழன்.*

### சிங்கம்

சிலர் தமது கடமையில் தவறு செய்வது போல நீங்களும் பிழைகள் விடச் சந்தர்ப்பங்கள் ஏற்பட இடமுண்டு. இடமாற்றம், இனஜன உதவிகள், பொருள் வரவு, உடல் நிலை பாதிப்பு, வீட்டுப்பொருள் செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை, சளி, வாய்வுத்தொல்லை தரும். விவசாயிகள், வியாபாரிகள் அதிக நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் :- வியாழன்.*

### கன்னி

அதிகாரிகள், மக்களின் நேரங்களுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். நீங்களும் பிறரைக் காக்க வைக்காது அவர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். பணவரவு, புதிய திட்டம் வெற்றி தரும். மாணவர்கள் சிறப்பு அடைவர். அலைச்சல் அடிக்கடி வரும். பொருள்களில் இழப்புச் சிலருக்கு வரலாம். பிரயாணங்களில் நிதானமாக இருக்கவும். குருத்துறையினர், சங்கீதத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், வியாழன்.*

### துலாம்

பிறரின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். வீண் பிடிவாதத்தால் நல்லவர்களை மனம் நோகச் செய்வீர்கள். குடும்பத்தவர்களின் நன்மைக்காக அடிக்கடி அலைச்சல் கொடுக்கும். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தாயாருடன் கருத்து வேற்றுமை வரும். இடமாற்றம் நன்மை தரும். பித்தக்கொதிப்பு, வயிற்று நோ வருத்தம் வரும். வியாபாரிகள், அரசியல்துறையினர், குருத்துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், வியாழன்.*

### விருச்சிகம்

ஒவ்வொருவரின் சிந்தனைகள் அடிக்கடி மாறுவதனால் கருத்துகளும் மாறுபட்டுக்கொண்டேயிருக்கும். உங்கள் நிலையும் மாற்றமடையும். இடமாற்றம் வரலாம். அடிக்கடி பதட்டம் கொடுக்கும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பொருளில் நிதானமாக இருக்கவும். புதிய துறையில் நாட்டம் வரலாம். அயலவர்களுடன் கவனமாக இருக்கவும். குருத்துறையினர்கள், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் :- திங்கள்.*

### தனுசு

விதிகாரன் சக்திகாரனான சூரியனுடன் சேர்ந்திருப்பதனால் போராட்டநிலை தோன்றும். பணவரவு கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் மறைமுகச் சதியைச் சிலர் செய்வார்கள். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்குப் போராட்டம் கொடுக்கும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். பொருள்களில் நிதானமாக இருக்கவும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். விவசாயிகள், வியாபாரிகள், குருத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் : ஞாயிறு, திங்கள்*

### மகரம்

பொருள் வரவு கொடுக்கும. இடமாற்றங்கள் நல்லதல்ல - அடிக்கடி மனமாற்றம், பணவரவு உண்டு. கொடுத்த பொருளால் வேதனை. அடிக்கடி அலைச்சல், மறதியால் இழப்பு, வைத்தியச் செலவுகள் அதிகரித்தல், கால் வருத்தம், சளித்தொல்லை கொடுக்கும். வியாபாரிகள், விற்பனையாளர்கள், ஆசிரியர்களுக்கு திடீர் மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### கும்பம்

அதிக பொறுப்புகளால் செயவதறியாநிலை தோன்றும். அன்னியரால் உதவிகள் கிடைக்கும. அலைச்சல் வரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். பெரியவர்களுடன் மனஸ்தாபப்படுவீர்கள். திடீர்பணவரவு கொடுக்கும். பொருள் பிரச்சினை தலைதூக்கும். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். வீண் பகை ஏற்படலாம். கால் வருத்தம், மன உளைச்சல், வாய்வுத் தொல்லை கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள் : ஞாயிறு, திங்கள், வியாழன்.*

### மீனம்

உங்கள் தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். பணவரவு கொடுக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். பொருள் இழப்புக்கள் கொடுக்கலாம். வீடுமனையில் மாற்றம், சிறப்புக் கொடுக்கும். நண்பர்கள், அயலவர்கள் உதவிகள் செய்வார்கள். வாய்வுத் தொல்லை, சளித்தொல்லை வரும். வாகனச் செலவு அதிகரிக்கும். மருந்து வியாபாரம், குருத்தொழில் சிறப்பு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, திங்கள், வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

---

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத்தில்

# வெளிவாரி அலகு அலுவலகம் ஆரம்பிக்க பாதுகாப்புக் குறைபாட்டால் முட்டுக்கட்டை

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகிற்கெனப் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. ஆயினும், பாதுகாப்பு ஊழியர்கள் இல்லாத காரணத்தால் இந்தப் புதிய கட்டடத்தில் மேற்படி அலகின் நிர்வாக அலுவலகத்தை இயக்கமுடியாதுள்ளது.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் அலகின் அலுவலகம் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் தற்போது இயங்கிவருகின்றது. இதனால் இதற்கெனப் புதிய கட்டடம் ஒன்று யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்திற்குச் சமீபமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய கட்டடத்தில் நிர்வாக அலுவலகத்தை ஆரம்பிக்க வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் முடிவடைந்துவிட்டன. இதனையடுத்து அலுவலகக் கட்டடத்துக்கான பாதுகாப்பைப் பெறுவதற்காக நாம் பல்கலைக்கழக நிர்வாகத்தை நாடினோம். இதற்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் குறைவாக இருந்தமையினால் தனியார் பாதுகாப்பு ஊழியர்களை நியமிக்குமாறு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

அவ்வாறே தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதில் பல்கலைக்கழகத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால், எமது புதிய பட்டப்படிப்புக்கள் அலகினை ஆரம்பிக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மாணவர்களின் பரீட்சை தொடர்பான ஆவணங்கள் இந்த அலுவலகத்தில் பேணப்படுகிறது. இதற்குத் தகுந்த பாதுகாப்பின்றி அங்கு அலுவலகத்தை இயக்குவது சாதகமற்றது - என்றார் அவர்.(ஒ-6)

# வலி. தென்மேற்குப் பிரதேச சபையை நகரசபையாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை4

வலி.தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபையை விரைவில் நகரசபையாகத் தரம் உயர்த்துவதற்குப் பிரதேச சபை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாகப் பிரதேச சபையை நகரசபையாக தரம் உயர்த்துவதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசாவின் சிபார்சுக் கடிதத்தைப் பிரதேச சபை கோரியுள்ளது.

மானிப்பாய் பிரதேச சபை நகரசபையாவதற்குரிய வருமானம், சந்தை, சிறுவர்பூங்கா, விளையாட்டு மைதானம், சுகாதாரம், குடிதண்ணீர் சேவை, வழிபாட்டு ஸ்தலங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், கல்விச்சாலைகள், வர்த்தக ஸ்தாபனங்கள் அனைத்தையும் கொண்ட வளமாக உள்ளது.

அதனை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின்மூலம் நகரசபையாக்குவதற்குச் சிபார்சுக் கடிதம் ஒன்றை வழங்கியுதவுமாறு பிரதேச சபை செயலாளர் பி.விக்டர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவிடம் கோரியுள்ளார்.

இதேவேளை -

நல்லூர், சுன்னாகம் ஆகிய பிரதேச சபைகளும் நகரசபையாக்க அவ்வப்பகுதித் திட்டமிடல் பிரிவுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

(8-185)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய நபருக்கு அபராதம்

தென்மராட்சி,ஜூலை4

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகனத்தின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 13 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைச் சேர்ந்த குகதாஸ் விஜயகுமார் என்பவருக்கு எதிராகச் சாவகச்சேரிப் பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கினை விசாரித்த நீதிவான் மேற்படி அபராதம் விதித்தார்.

(ஒ-117)

## மாணவி காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை4

'லான்ட்மாஸ்டர்' வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட கதியால் தடிகள் சைக்கிளில் சென்ற பாடசாலை மாணவியின் கண்ணில்பட்டுக் காயப்படுத்திய சம்பவம் சமீபத்தில் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

மந்துவிலைச் சேர்ந்த மாணவி ஒருவரே கண்ணில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-117)

# மானிப்பாய் மருந்தகத்தை டச்சு வீதிக்கு மாற்றி உதவுக

## சுகாதார சபைத் தலைவர் ஆளுநருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை4

மானிப்பாயில் தனியார் வீடு ஒன்றில் இயங்கிவரும் மத்திய மருந்தகத்தையும் மகப்பேற்று மனையையும் மானிப்பாய் டச்சு வீதியில் (கட்டுடை) அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகார சபைத் தலைவர் சட்டத்தரணி ஆர்.வசந்தசேனன் மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:-

தற்போது எவ்வித வசதிகளும் அற்ற நிலையில் தனியார் வீடொன்றில் மேற்படி மருந்தகம் இயங்கி வருகின்றது.

தற்போது மானிப்பாய் டச்சு வீதியில் 28 பரப்புக் காணி மத்திய மருந்தகம் அமைப்பதற்காக இலவசமாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பிரதேச வளர்ச்சி அபிவிருத்தியைக் கொண்டும், வறிய மக்கள் நீண்டதூரம் பிரயாணம் சென்று பிணி தீர்ப்பதற்கும் இலவசமாக வழங்கப்பட்ட கட்டுடை காணியில் மத்திய மருந்தகத்தையும் மகப்பேற்று மனையையும் உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

வலி. தெற்மேற்குப் பிரதேச சபை நிர்வாகம் கட்டுடை டச்சு வீதியில் மேற்படி மருந்தகத்தை அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கின்றது.

(-4-185)



யாழ். போதனா வைத்தியசாலை சிறுவர் பூங்காவிற்கு, ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளை முகாமையாளர் எஸ்.ஜெயராஜசிங்கம் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்தபோது, சிறுவர் விடுதிக்கும் பொறுப்பான தாதி திருமதி பாமா கணேந்திரகுமாரன் அதனைப் பொறுப்பேற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (10-15)

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்

FedEx Express

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
கடுகதி தபாற்பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

opposite Diolag pone shop
259.கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836

பலநோக்கு கூ. ச. முன்பாக
46. ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

E.mail:thirumurugan@eudoramail.com


# 33ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 - 12 - 1926 | 02 - 06 - 2004 |

## அமரர் நடராஜா கந்தையா

திதி: 04-07-2004 (ஞாயிறு)

ஆருயிரே! அறிவூற்றே! அன்பின் ஐயா!
ஆற்றல் பல எமக்கீந்த அறிவுத்தந்தையே
பேரமுதே! பெரும் பாசப் பேறே! எங்கள்
பெருமைக்கு வித்திட்ட ஐயாவே!
பாருயரும் கைதடி விவசாயிகள் போற்றும்
எம் குலவிளக்கே! பதியவர் பால் பறந்திட்டீரோ
நீருயரும் கண்களுடன் நெஞ்சம் நொந்து
நெக்குருகி அஞ்சலித்தோம்! அமைதி கொள்க
ஆருயிர் தந்தையின் ஆத்ம சாந்திக்கு
எம் அக நெகிழ்ந்த அஞ்சலிகள்.

(33778)(21-16)

'சிங்க வாசா'
கைதடி கிழக்கு, கைதடி.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





| | திருமதி குருநாதபிள்ளை பாக்கியம் | திருமதி சுப்ரமணியம் அன்னசோதிப்பிள்ளை |
|---|---|---|
| அன்னை மடியில்: | 18.03.1918 | 07.09.1933 |
| ஆண்டவன் அடியில்: | 16.06.2003 | 05.04.2003 |

திதி:04.07.2004

அன்புடனும் பண்புடனும் எம்மை
வளர்த்த அன்புத் தெய்வங்களே!
உங்களை ஓராண்டல்ல
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நாம் மறவோம்.

• உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.09, முருகேசர் வீதி,
நல்லூர். (33762)(34-21-16) - குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | அம்பாள் அடியில் |
|---|---|
| 10 . 11 . 1939 | 15 . 07 . 2003 |

கொக்குவில் காங்கேசன்துறை வீதி சுந்தரபவனத்தைச் சேர்ந்த

## அமரர் டாக்டர் சுப்பையா இரத்தினசிங்கம்

திதி : துதியை 04.07.2004

ஆண்டொன்று சென்றதுவே
ஆசையாய் நாம் அழைத்த
ராசாவே உனை இழந்து
பாசத்தை நாம் கண்டநேசனே
ஈசன் கவர்ந்திடினும்
நீங்காதையா எம் பாசம்!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
இன்று ஞாயிற்றுக்கிழமை,
148/2, காலி வீதி,
தெகிவளையில் நடைபெறும். (c/35987)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
மனைவி, சகோதர சகோதரிகள்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# இசுசூ ஜேணி பஸ் விற்பனைக்கு

GR-xxxx (கஸ்ரம் ஜேணி), 60 ஸ்ரீ xxxx (ஜேணி) தொடர் இலக்கங்களைக் கொண்ட ஜேணி பஸ்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
தி.ஸ்ரீதரன், யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
தொ.பே.இல.: 0777-110832

(C/35955(40)

உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்
பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய
உயர்ரக சுவர் / தரை ஓடுகள்




.... இன்னும் பல அளவுகளில்!

யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

**NEW KAMAAL CERAMICS,**
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085

**JAFFNA CERAMICS,**
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

**VENKE IMPEX,**
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

LWL லங்கா வோல்டைல் லிமிரெட்,
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்

ASARIM

UNIVERSITY OF LONDON DEGREES
STUDY IN COLOMBO
GO TO LONDON AFTER YEAR 1 FOR BSc CIS
GUARANTEED JOBS FOR GRADUATES
FREE PERSONAL DEVELOPMENT PROGRAM
INDIVIDUAL GUIDANCE AND CARE FOR ALL STUDENTS
TOP CLASS FACULTY
INSTITUTE HEADED BY HARVARD SCHOLAR

ASARIM, Aquinas South Asian Regional Institute of Management, a specialized institute within 50 year old Aquinas College of Higher Studies in Colombo offers lectures for University of London degree courses. If you have sat for A/L exams and are awaiting results or have passed A/L or higher exams or have other Certificates or Diplomas, and have Rs. 140,000 to start a 3-year degree program, You are cordially invited for an

INFORMATION EVENING AT CENTRAL COLLEGE, JAFFNA
AT 4.00 PM TODAY

Degrees offered: BSc Banking & Finance, BSc Accounting & Finance, BSc Business, BSc Information Systems & Management, BSc Computing & Information Systems, BSc Economics & LLB

Aquinas South Asian Regional Institute of Management
990, Maradana Road, Colombo 8
Phone: 4611150-1 E-mail: admin@asarim.org

ASARIM
Aquinas South Asian Regional Institute of Management
990, Maradana Road, Colombo 08.
Tel. 4611150, 4611151 Email: admin@asarim.org
Web: www.asarim.org

# சேவை நலன் பாராட்டு



எமது கல்லூரியில் கல்வி சாரா ஊழியராகச் சேவையாற்றி 30.06.2004 இல் ஓய்வுபெற்ற

## திரு.சின்னத்தம்பி மயில்வாகனம்

அவர்களின் சேவையை நாம் பாராட்டுவதுடன், அவர் தொடர்ந்தும் ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல நடேச்ப் பெருமானை வேண்டுகிறோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

(33784)(29-11-18)

# A/L 2006

CHEMISTRY
"THERMO"
Mr.ஜெயந்தன்
Mon.,Thurs.- 3.30 p.m.
PHY.-Mr.லெனின்
C/Ma.-Mr.தவசேகர்
**SHAMROCK**
J/EACHCHAMODDAI

(33764)(35)

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பொங்கல் விழா

நிகழும் தாரண வருடம் ஆனி மாதம் 21 ஆம் நாளான நாளை (05.07.2004) திங்கட்கிழமை இரவு பொங்கல் விழா இடம்பெறும்.

அடியார்கள் இந்த நிகழ்வில் கலந்து முருகன் அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

(சி-36000) (29-11-18) -சிவஸ்ரீ கே.உலககுருநாத ஐயர்.

# சமஸ்கிருத சோதிட சைவசித்தாந்த வகுப்பு

இன்று (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் 11 மணி வரையுள்ள சுபநேரத்தில் சமஸ்கிருத சோதிட, சைவசித்தாந்த வகுப்புகள், யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் ஆரம்பமாகின்றன.

இவற்றை கற்க விரும்புவோர் தவறாது சமுகம் தருமாறு வேண்டுகின்றோம்.

**சிறப்பு விருந்தினர்களாக**

திரு.செ.கஜேந்திரன் (யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)
டாக்டர் திரு.S.கதிரவேற்பிள்ளை அவர்களும் கலந்துகொள்வார்கள்.

அனைத்துலக சைவக்குருமார், அர்ச்சகர் பேரவை.
சை.நமசிவாயக்குருக்கள் (சிவாச்சார்ய பீடாதிபதி).

(33775)(29-11-18)

# தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு:
**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
17A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி-35997)

# கண்ணீர் அஞ்சலி

கிராம உத்தியோகத்தர் சிவஞானம் (வேலணை J/15)
அவர்களின் தாயார்

## திருமதி கார்த்திகேசு சௌந்தரம்மா

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வங்களாவடி,
வேலணை.

(33787)(29-11-18)

'ஈசன்'
மகாமாரி கூல்பார்.

# ராஜா யாழ்ப்பாணம்

சூர்யா (இருவேடம்), ஜோதிகா, விவேக் நடித்த

**பேரழகன்**



10.30.,2.30, 6.30, 9.30 (பு.நே.)
(ரீஸ்ஸ்)

(C/35994)(29)

# நாகம்ஸ் சுன்னாகம்

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க ரஜனி. சௌந்தர்யா. ரம்மியாகிருஷ்ணன் நடித்த



**படையப்பா**

தினசரி 11.00. 3.00. 7.00 பு.நே.,

(C/35739) (12)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னம்மா செல்லையா

யாழ்ப்பாணம், அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா செல்லையா 03.07.2004 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர் செல்லையாவின் அன்பு மனைவியும் பொன்னுத்துரை, காலஞ்சென்ற செல்வராணி, தேவமதுரம் ஆகியோரின் அன்புத் தாயாரும்- சந்திராதேவி, தேவமதுரம் ஆகியோரின் பாசமிகு மாமியும் - சந்திரகுமார், ராஜ்குமார், ரஞ்சினி, சுகிர்நாகேந்திரா, சுதன், சுகேந்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2004) திங்கட்கிழமை கொழும்பு, பொரளை Jeyaratna மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.30 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

தகவல்: தா.தேவமதுரம் (மருமகன்),
செ.பொன்னுத்துரை (மகன்).

(33788)(40-29-11-18)

# நிறைஞ்சனாஸ்

விஜய், திரிஷா பிரகாஷ்ராஜ் நடித்த



**கில்லி**

தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
**EXTREMITIES** [இரவு 8.45]

(C-35653)(29)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07 - 08 - 1954
இறப்பு 04 - 07 - 2003

## அமரர் மனவல் அருளப்பு (ராசா)

வஞ்சகர்கள் வாழும் மண்ணில்
வாழ்வெனக்கு வேண்டாம் என்று
வாழ்வுதந்த இறைவன் பதம்
வந்திடுவேன் என்று சொல்லி
விண்ணுலகு சென்று விட்ட
ஓராண்டு இன்று ஐயா!
எமைக்காக்க உமைப்போல அன்பான ஆதரவு
எமக்கில்லை இவ்வுலகில் என்செய்வோம்
அந்நியர் போல்எமைப் பார்க்கும்
அன்பில்லா உறவுகளால் உம்நினைவு
தணலாகி எம்நெஞ்சில் எரிகின்றது!
உமை மறக்க நாம் இன்று அரும்பாடுபட்டாலும்
நினைவுவந்த வேளையெல்லாம் நெஞ்சுருகியழுகின்றோம்.

இவரது ஆத்ம இளைப்பாற்றிக்காக 05-07-2004 காலை 6.15 மணிக்கு (புதியநேரம்) குருநகர் யாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதன் பின்னர் பூசை முடிந்ததும் வீட்டுக்கு வரவும்.

இல.4, தண்ணீர்த்தாங்கி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி: யசிந்தா,
பிள்ளைகள், மருமகன்,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

(33773) (26-29-11-18)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை பேரம்பலம் (ராசு)

புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட க.பேரம்பலம் அவர்கள் (03.07.2004) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் கமலாம்பாள்(ஆசிரியை, புற்றளை மகா வித்தியாலயம்), கணேசலிங்கம்(ஆசிரியர், கொழும்பு), மங்கையர்க்கரசி(ஆசிரியை, புற்றளை மகா வித்தியாலயம்), குமாரலிங்கம் (ஆசிரியர்,மட்டக்களப்பு), காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, பத்மாவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பஞ்சலிங்கம் (கிராமசேவையாளர், குடத்தனை வடக்கு), வேல்முருகு (பதில் பொதுமுகாமையாளர், புலோலி ப.நோ.கூ.சங்கம்), புவியரசன், யோகேஸ்வரி (ஆசிரியை, கொழும்பு), லலிதகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மயூரன், சிவப்பிரியா, நிவேதிகா, அச்சயா, சிவகங்கை, விதுஷன், நிஷாந்தினி, அபிநயா, அமுதவாணி ஆகியோரின் பாசமிகு பேரனும் பார்வதிப்பிள்ளை மற்றும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலாதேவி, நடராசா ஆகியோரின் மைத்துனரும் இலங்கேஸ்வரன், குமுதினி, ரஜினி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உபய கதிர்காமம்,*
*தென்புலோலி.*

(சி36204)(29-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.

# கணபதிதுணை

# சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு

(குருப்பட்டம் தரித்தல்)

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆனி மாதம் 21 ஆம் நாள் (05.07.2004) திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில்

## பிரம்மஸ்ரீ யோ.பிரபாகர சர்மா அவர்களுக்கு

(அத்தியடிப் பிள்ளையார் ஆலய அர்ச்சகர்)

சிவாச்சார்ய அபிஷேகம் நடைபெற அத்தியடி விநாயகர் திருவருளும் குருவருளும் கைகூடியிருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்களது குடும்பசகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தீக்ஷா குரு: வேதாகமோத்தம ஆச்சார்ய சாரதா, சிவாச்சார்ய குருமணி சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள்

இடம்: யா/அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயம்

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

அத்தியடி, யாழ்ப்பாணம்.
~பிரம்மஸ்ரீ யோ.பிரபாகர சர்மா நாகேஸ்வரி தம்பதிகள்.

(33779)(29-11-18)

# செல்லப்பா ஞானசுந்தரம்

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)



மண்டைதீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா ஞானசுந்தரம் அவர்கள் 29.06.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற சிவசம்பு- சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகனும் அமிர்தாம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் சகோதரனும் குமாரலிங்கத்தின் (கனடா) மைத்துனரும் சந்திரகுமார் (ஜேர்மன்), காலஞ்சென்ற ஜெகத்குமார் மற்றும் வசந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜமோகன் (கனடா), வசந்தினி (ஜேர்மன்), சறோஜினி ஆகியோரின் அன்பு மாமனும் கீர்த்தனா, சந்தோஸ், றுக்சி, கிஷோன், திபனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

***100/5,** சம்பியன் லேன்,*
*உதயசூரியன் ஒழுங்கை,*
*கொக்குவில்.*

(33781)(29-11-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# கலாலயா

பயிற்சியகம்
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.

## மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

**கேக் ஐஸிங்** - சகல விதமான ஐஸிங் மற்றும் மாச்சீனி மலர்கள் (SUGAR CRAFTING)
**உணவுகள் தயாரித்தல்** - மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள் VEGETABLE CRAFTING செய்தல்
**கூந்தல் அலங்காரம்** - 20 விதமான கொண்டைகள் போடுதல்.
**FABRIC PAINTING** - SAREE PAINTING, POT PAINTING, EMBOSS PAINTING கைக்குட்டை, கதிரை விரிப்புகளில் வர்ணந்தீட்டுதல்
☆ மேற்குறித்த பயிற்சிகள் 3 மாத காலம் நடைபெறும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
**உடை தயாரித்தல்** - குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்.
**கைவேலை** - பேப்பர் அலங்காரம், SOFT TOYS, கழிவுத்துணி வேலை, றிபன் வேலை, முத்துமாலை கோத்தல், CRYSTAL வேலை.
**மலர்கள் செய்தல்** - கடதாசியிலும் துணிகளிலும் மலர்கள் செய்தல், மலர்ச்செண்டு (BOUQUET) செய்தல்.
மேற்குறித்த பயிற்சிகள் 6 மாதகாலம் நடைபெறும்.
இத்துடன், அடிப்படை FACIAL அழகுக்கூடலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் முறையும் 2 நாள் வகுப்புகளாக நடைபெறும்.

*கிழமைநாள் மற்றும் சனி – ஞாயிறு புதிய வகுப்புக்களுக்கு மாணவிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.*

மேலும் விவரங்களை வியாழன். வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப. 1.30 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

(சி-35993) (24-29-11-18) - பதிவாளர்.

# கரும்புலிகள் நாளை ... 3 இடங்களில் விசேட நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை4

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் திருப்பு முனைகளை ஏற்படுத்தி வரலாறு படைத்த கரும்புலிகளின் நினைவாக குடாநாட்டில் மூன்று இடங்களில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

நெல்லியடி மில்லர் சதுக்கத்தில் பிரதான நிகழ்வுகள் இடம்பெறும். புங்குடுதீவு, பெரும்காட்டுச் சந்தி, காரைநகர் கதிர்காமசுவாமி கோயிலடி ஆகிய இடங்களில் பொதுநிகழ்வுகளும இடம்பெறும். -என்று கரும்புலிகள் நினைவு நாள் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

நெல்லியடியில் மில்லர் நிலைாலயம் அமைந்துள்ள பகுதியில் 60 அடி உயரக் கரும்புலிகள் நினைவு மாடிப்பந்தல் அமைக்கப்பட்டு முதல் கரும்புலி மா... கப்டன் மில்லர், கப்டன் அங்கயற்கண்ணி உட்பட ஈழப்போராட்ட வரலாற்றில் தம்முயிர்களை ஆகுதியாக்கிய 261 கரும்புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை

கரும்புலிகள் தினத்தை உணர்வுபூர்வமாகக் கொண்டாட பொது அமைப்புக்கள் விசேட ஏற்பாடுகளை செய்துள்ளன.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு குடாநாடு எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. வீதிகள் எங்கும் கரும்புலிகள் ஞாபகார்த்தப் பதாகைகள், சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. சிரமாதானங்கள் உட்பட பல இடங்களில் பொதுச்சேவைகளில் பல பொது அமைப்புக்களும் நேற்று ஈடுபட்டன.

நெல்லியடி, தீவகம் ஆகிய இடங்களில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக சகல வர்த்தக நிலையங்களையும் நாளை பிற்பகல் 4 மணிக்கு மூடும்படி யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களிகளின் சம்மேளனம் சகல வர்த்தகர்களையும் கேட்டுள்ளது. (ஐ-3-5-15-70)

## ஐஸ்கிறீம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளன் என்று விடுதலைப் புலிகளிடம் ... 

மதிய... யினர் ... தாக்... னர் ... தொடு... தாக்கினர் ... அந்த முறைப்பாடு ... தெரிவி...ள்ளது. (ஐ-3)


IBMS
மாணவர்களுக்காக

வட இலங்கையில் தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்கி வரும் முன்னணி நிறுவனமாகிய நாம் எமது மாணவர்களிடையே கணனி அறிவின் முக்கியத்துவத்தினை உணர்த்தி அவர்களின் கணனிக் கல்விக்கு வழிகாட்டி வருகின்றோம். அந்த வகையில் கணனிக் கல்வி கற்க ஆர்வம் இருந்தும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்காக எமது முகாமையின் தீர்மானத்திற்கமைய கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம். ஆர்வமுள்ள மாணவர்கள் இத்திட்டத்தில் பங்குபற்றிப் பயனடையுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

மேலதிக விவரங்கள்:
07.07.2004 உதயனில்

இயக்குநர்
IBMS
# 410, K.K.S. Road,
Jaffna. (C-36202)(40)


## கல்வியங்காடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மரணம் தொடர்பாக யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று மரண விசாரணையை நடத்தினார்.

மரண விசாரணையை அடுத்து பிரஸ்தாப மோட்டார் சைக்கிள் ஓட்டியைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து, கோப்பாய் பொலீஸார் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஓட்டியான ரத்தினசிங்கம் பிரதீபன் (வயது 22) என்ற மாணவனைக் கைது செய்து நீதிவான் முன் ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 1 : 14.07.2004
பிரிவு 2 : 18.07.2004

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரண்டு பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதென்பதை மாணவர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

இயக்குநர்:
IIS
# 100, Clock Tower Rd.,
Jaffna. (C-33203)(40)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை4

கல்வியங்காடு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும 7ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (10)

★ ★ ★

வடமராட்சி,ஜூலை4

புலோலி முருகையா கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த அலங்கார உற்சவம் நிறைவுறும். (10-17...)

★ ★

யாழ்ப்பாணம், ஜூலை4

அச்சுவேலி, த... ஞானவைரவர் கோயில் அலங்காரத் திருவிழா கடந்த 28ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. உற்சவத்தை முன்னிட்டு சைவப்புலவர் ... தரனின் தெய்வீகச் ... தினமும் மாலை 7 மணிக்கு நடைபெற்று வருகிறது (10)

★ ★ ★

குருநகர்,ஜூலை4

புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வண.பிதா ஜே.பிரான்ஸிஸ் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

இந்த ஆலயத்தின் திருவிழா 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வருடம் மீண்டும் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. குருநகர் பகுதியில் இருந்து பெருமளவு பக்தர்கள் கலந்துகொள்வர். (10-51)

★ ★ ★

நாரந்தனை கிழக்கு ஞானவைரவர் ஆலய வருடாந்த ஆனிப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் விசேட அபிஷேகத்துடன் பொங்கல் ஆரம்பமாகும். (எ)

## நிலாவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த சமயம் அங்கு வந்த படையினர், தேசியக்கொடி ஏற்றுவது யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் எனத் தெரிவித்து கொடியை இறக்கும்படி வற்புறுத்தினர். ஆனால் அங்கு கூடிய பொதுமக்கள் அதற்கு மறுக்கவே, படையினர் அவர்களோடு வாக்குவாதத்தில் இறங்கினர் என்று கூறப்படுகிறது. இதன்காரணமாக இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர் அமைப்பு பிரதிநிதி புரட்சிப்படை, அதிகாரிகளுடன் இதுகுறித்து பேச்சு நடத்தினார்.

முன்னர் இந்த விவகாரம் குறித்து கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகளுடன் நடந்த பேச்சுக்களில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தேசியக் கொடி ஏற்ற இணக்கம் காணப்பட்டது என்று படையினரிடம் அவர் தெரிவித்தார்.

இதை ஏற்க மறுத்த படையினர் கொடியை இறக்கும்படி தொடர்ந்து வற்புறுத்தினர் எனினும் பொதுமக்கள் காட்டிய எதிர்ப்பை அடுத்துப் படையினர் இறுதியில் அங்கிருந்து அகன்றனர். பதற்ற நிலை தணிந்தது.(ஐ-3)

(வறுமைக்கோட்டுக்கு கீழ்வாழும்)

# விவசாயக் குடும்பங்களின் விவரம் திரட்டப்படுகிறது

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விவசாயக் குடும்பங்களின் விவரங்களை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் திரட்டி வருகின்றது.

இதன் அடிப்படையில் மாவட்ட விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்படும் விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மாவட்டத்தில் 17 கமநல சேவைகள் பிரிவுகளிலும் உள்ள 17 கிராமங்கள் தெரிவுசெய்யப்படும் அந்தந்தக் கிராமங்களில் விவசாயத்தை முழுநேரத் தொழிலாகக் கொண்ட குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் தென்மராட்சி பிரதேசத்தில் கைதடிப் பிரிவில் மட்டுவில் சந்திரபுரம் கிராமமும் சாவகச்சேரி பிரிவில் தாவளை இயற்றாலை கிராமமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9-117)

# உள்ளூராட்சிச் சபைகளின் ஊடாக வீதி விளக்குகள் பொருத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ். மாவட்டத்தில் 16 உள்ளூராட்சி சபைகளினூடாக ஓகஸ்ட் மாதத்தில் வீதி மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா மேற்கொண்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள், வீதிவிளக்குகள் அமைவதற்கான அமைவிடப்படம் மற்றும் மதிப்பீட்டு விவரம் என்பவற்றை அபிவிருத்திச் சபையின் சிபார்சுடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வதிவிளக்கு அமைப்பதற்கான நிதியை 'நிக்கொட்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. (10-185)

## ஆயுள்காப்புறுதி தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றம் ஆயுள்காப்புறுதி தொடர்பான கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும 10ஆம் திகதி காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தவிருக்கின்றது.

யாழ்.கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இக்கருத்தரங்கில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## விளையாட்டு விழா

சங்கானை நாகலிங்கசுவாமி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30மணிக்கு சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் ச.தர்மராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.(எ-29)

## ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் கிளிநொச்சியைச் சேர்ந்த சு.ஜீவா(வயது 31) என்பவரும் -

படுகாயங்களுக்குள்ளாகினர் என்று 'உதயன்' கிளிநொச்சி செய்தியாளர் அறிவித்துள்ளார்.

காயமடைந்த அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-13-301)


CATWAS. COM
Computer Academy

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான III ஆம் பிரிவு 07-07-2004 அன்று ஆரம்பம்.

Diploma Course
1. Ms Office -1750/=
2. D.T P. -2000/=
3. Hardware - 1500/=
4. Web page -3000/=
5. Video Mixing -2500/=

★ Ms Office பாடநெறியில் இணைவோருக்கு மட்டும் அனுமதிக் கட்டணம் இலவசம்.
★ Ms Office பாடநெறியில் இணைவோருக்கு மட்டும் Internet and E-mail இலவசமாகக் கற்பிக்கப்படும்.

Certificate Course
Word XP, Excel XP, Access XP, Power point XP, Pagemaker , Corel Draw , Photo shop 7, Cool 3D, Visual Basic, Premier, Studio 8

எமது நிறுவனத்தின் கணனிக் கற்கை நெறியை முடித்துக்கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் 24.07.2004 அன்று சான்றிதழ் வழங்க உள்ளதால் அந்த மாணவர்கள் 06.07.2004 செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.00 மணிக்கு நடைபெறும் விசேட கலந்துரையாடலில் கலந்து தங்கள் சான்றிதழை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

விண்ணப்பங்கள் யாவும் உரிய நாள்களுக்கு முன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ ஏற்றுக் கொள்ளப்படும்.

26, Somasundram Avenue,
Chundikuli, Jaffna.
T.P.:021-222 3805.
(சி-35713)(40-11-18)

BANGALORE UNIVERSITY
Sri Lankan Students admission with Scholarship
Academic Year 2004/2005

இலங்கை மாணவர்களை பெங்களூர் பல்கலைக்கழகத்தில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. உயர்தரப் பரீட்சையில் பெற்ற சராசரிப் புள்ளிகளின் அடிப்படையில் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி:-10-07-2004

(BCA, BBM,BSc விரிவுரைகள் பெங்களூரில் 25-07-2004ம் திகதி ஆரம்பமாகவுள்ளது) பெங்களூர் பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ் வந்திருக்கும் பா.சுரேஷ்குமார் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விரிவான ஆலோசனை வழங்குகின்றார்.

Register Office in Srilanka
UNIVAC College (Near Milk white)
K.K.S Road, Jaffna, T.P: 077-6176476

NEW SCIENCE HALL
2005
ஈர்ப்புப்புலம்
பிரிவு I
திங்., புதன் - 7 - 8 a.m.
பிரிவு II
திங்., புதன்
10.30 -11.30 a.m.

NEW SCIENCE COLLEGE
2005/2006
சடப்பொருளியல்பு
செவ்வாய் - 4 - 6 p.m.

NEW SCIENCE ACADEMY
(கந்தன் கருணை)
2005/2006
சடப்பொருளியல்பு
செவ்., வியாழன் - 6 - 7 p.m.

R.குகன்
(33746)(40-11-18)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

04-07-2004

# சமாதான முயற்சிகளில் சலிப்புறும் நிலை நோக்கி...



**நோர்**வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கடந்த மேமாதம் இறுதிவாரத்தில் கொழும்பு வந்திருந்தபோது நடந்த கதைச் சுருக்கத்தை ஞாபகமறதியுள்ள வாசகர்களின் நலன் கருதி மீள்வும் தருகிறோம்.

30-05-2004 அன்று உதயன் ஞாயிறு சிறப்பம்சத்தில் "அனாதைக் குழந்தையாகும் சமாதானமுயற்சி" என்ற தலையங்கத்தின் கீழ் எழுதப்பட்டிருந்த கண்ணோட்டத்தின் தொடக்கப்பகுதியே அக்கதைச் சுருக்கமாகும். அத் தொடக்கப் பகுதியே மீளவும் இங்கே தரப்படுகிறது.

"நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சொல்ஹெய்ம் கடந்த வாரம் கொழும்பு வந்தபொழுது ஜனாதிபதி கண்டியில் இருந்தார். கண்டிக்குப் போய் ஜனாதிபதியைச் சந்திக்க சொல்ஹெய்ம் ஆயத்தமானார். ஹெலிகொப்டரும் தயாரானது. ஆனால், ஜனாதிபதி கொழும்பு திரும்புவதனால் கண்டிக்கு அவர் வரவேண்டிய அவசியமில்லை என்று கூறப்பட்டதாம். கொழும்பு வந்ததும் ஜனாதிபதியைச் சந்திக்கலாம் என்று காத்திருந்தாராம் சொல்ஹெய்ம். ஜனாதிபதியை அவர் கொழும்பிலும் சந்திக்க முடியவில்லை. கடந்த வாரத்தில் திங்கள், செவ்வாய் ஆகிய இரண்டு நாள்களையும் மிகுந்த ஏமாற்றத்துடன் கழித்திருப்பார் சமாதானப் பிரதிநிதி. செவ்வாய்க்கிழமை இரவு கழிந்து புதன் பொழுது விடிந்ததும் களைப்போடும் சலிப்போடும் வன்னி வந்து சேர்ந்தார் எரிக்சொல்ஹெய்ம்! இது கதை....."

இப்பழைய கதைநடந்து முடிந்து இப்பொழுது ஒரு மாதத்துக்கு மேல் கழிந்து விட்டது. இப்பழைய கதையைப் பெருமளவு ஒத்த பாணியிலேயே எரிக்சொல்ஹெய்ம் கடந்த வாரம் இலங்கைக்கு மேற்கொண்ட பயண அனுபவமும் அமைந்திருக்கிறது. கடந்தவாரம் - அதாவது ஜூன் மாதம் 28ஆம்

- டன்ஸ்ரன் லூயிஸ் -

திகதி திங்கட்கிழமை மாலை கொழும்பு வந்து சேர்ந்தார் சொல்ஹெய்ம். வழமையாக மிக எளிமையாக ரி-சேர்ட் போன்ற மேலங்கியை விரும்பி அணியும் அவர். திங்கட்கிழமை மாலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தபோது எளிமையான ஒரு ரி-சேர்ட்தான் அணிந்திருந்தார். அதன்மேல் ஒரு கோட் போட்டிருந்தார்.



### ஒரு தொழில்சார் இராஜதந்திரியா?

ஒரு வெற்றிபெறப்போகின்ற சுறுசுறுப்பான சமாதான முயற்சி ஒன்றில் கடும் அவசரம் காட்டும் ஒரு தொழில்சார் இராஜதந்திரிக்குரிய (A professional diplomat) தோற்றத்தை அவர் பேணிக்கொள்ள விரும்புவதில்லை என்பதை கடந்தவாரம் அவர் வந்திறங்கிய கோலமும் நடையுடை பாவனையும் (Body language) நன்கு தெளிவுபடுத்தியது. விமான நிலையத்துக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலரும், இலங்கை வெளிவிவகார அமைச்சின் கனிஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் சிலரும் எரிக்சொல்ஹெய்மை ஒரு வாகனத்தில் அழைத்துச் செல்ல வந்திருந்தனர். தான் கொண்டு வந்த பயணப் பொதியை வாகனத்தின் டிக்கிக்குள் வைத்துவிட்டு, கறுப்புக்கண்ணாடி வாகனத்தில் சொல்ஹெய்ம் ஏறி உட்கார்ந்ததும் வாகனம் புறப்பட்டது. அநேகமாக அந்தப் பயணப்பொதி அவரது மாற்று உடைகள் உள்ளிட்ட தனிப்பட்ட பாவனைப் பொருள்கள் கொண்டதாக இருந்திருக்கலாம் என ஊகிப்பதைத் தவிர வேறு சிறப்பான சமாதானத்தூதுக்கான ஆவணங்களோ கோவைகளோ அதற்குள் இருந்திருக்கும் எனச் சொல்ல முடியாது. வாகனம் நோர்வேத் தூதரகத்துக்கு சென்றிருக்கும்.



### நப்பாசை கொண்டிருந்த அவதானிகள்!



மறுநாள் செவ்வாய்க்கிழமை - அதாவது ஜூன் மாதம் 29ஆம் திகதி மாலை ஜனாதிபதியைச் சந்தித்து அவரிடமிருந்து விசேட செய்தி ஆவணமொன்றைப் பெற்றுக்கொண்டு, கிளிநொச்சிக்கு 30ஆம் திகதி புதன்கிழமை சென்று, அந்த விசேட செய்தி தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் அவர் ஆழ அகலமாக பேசுவதன் மூலம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தல் தொடர்பான முக்கியமான தீர்மானங்கள் ஏதும் மேற்கொள்ளப்படலாம். என்று அரசியல் அவதானிகள் நப்பாசையுடன் காத்துக் கிடந்தனர்.

### எங்கள் தலைவி கண்டியில்....!

இக்கட்டுரையின் தொடக்கத்தில் ஞாபகப்படுத்தப்பட்ட பழைய கதைச் சுருக்கத்தில் இடம்பெற்றது போலவே இம்முறையும் எங்கள் நாட்டின் தலைவி கண்டியிலேயே இருந்துள்ளார். கண்டியில் ஜனாதிபதி ஏற்கனவே திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த பல்வேறு வைபவங்களில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருந்தபடியினால் செவ்வாய் - அதாவது ஜூன் மாதம் 29ஆம் திகதி மாலை எரிக்சொல்ஹெய்மை சந்திக்க முடியாமற் போய்விட்டதாம்.



### ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலும் சொல்ஹெய்மின் நிகழ்ச்சி நிரலும்

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தீவு வாழ் மக்களினுடைய அருமையான உயிர்களை விழுங்கி, கோடான கோடி ரூபாய் பெறுமதி மிக்க சொத்துக்களையும் வளங்களையும் அழித்து. இந்த அழகிய தீவின் நீடித்த அபிவிருத்தியையும் பாழாக்கிவிட்டு நிற்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணுகின்ற மிகவும் கடினமான அந்த பாலைவனப் பயணத்தில், பாலைவனச் சோலையின் (oasis) ஒரு பச்சைப் புல்லையாவது (even a sole green grass) காணத்துடிப்பவர் போல- ஒரு இடைக்காலத் தீர்வின் ஒரு நம்பிக்கைக் கீற்றையாவது காணமுடியுமோ என்று அயராது முயற்சிக்கும் சொல்ஹெய்மின் வருகை தொடர்பான நிகழ்ச்சி நிரலுடன், ஜனாதிபதி மேற்கொண்டிருந்த கண்டிக்கான விஜயத்தின் நிகழ்ச்சிநிரல் மோதலுக்கு (Clash) உட்பட்டது இது இரண்டாவது தடவையாகும். அத்துடன் துர் அதிஸ்டமுமாகும். மேலும் அபசகுனமும், அவநம்பிக்கையும் சமாதான முயற்சிகள் மீது விழுவதற்கு வழிவகுப்பதுமாகும். இனிவரும் காலங்களில் எமது நாட்டின் மாபெரும் நலன் பேணுகை என்ற அடிப்படையிற்றானும் இவ்வாறான அசமந்தப் போக்கு தவிர்க்கப்படுமென நம்பலாமோ தெரியவில்லை! திட்டமிட்டபடி ஜனாதிபதியைச் சந்திக்க முடியாமற் போனாலும், புதன் கிழமை அதாவது ஜீன் மாதம் 30ஆம் திகதி காலை நோர்வெயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர், மற்றுமொரு நோர்வே வெளிவிவகார அமைச்சுப் பிரதிநிதி சகிதம் ஹெலியில் பறந்து கிளிநொச்சி வந்தடைந்தார்கள்.



### பூதங்களைக் கிளப்பும் விவகாரம்!

ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லீம் எம்.பி அலிஸாகிர் மௌலானவிலிருந்து - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, ஆனால் கொழும்பு மாவட்டத்தில் 13ஆவது பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்.பி.மகேஸ்வரன் வரை பூதங்களையும் வாணங்களையும் கிளப்பும் கருணா விவகாரம் வன்னியில் இம்முறை கடுமையான தொனியில் பேசப்படும் வேளையில், சொல்ஹெய்ம் அவர்கள் கிளிநொச்சி வந்தடைந்திருந்தார்.



எதிர்பாராத வகையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் நோர்வேப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்மிடம் ஒரு சமரசப் பாணியிலான கடிதமொன்றைக் கொடுத்திருந்தார் என்று நோர்வே பிரதிநிதிகளுடனான சந்திப்பு நிறைவு பெற்றதும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் செய்தியாளர்களுக்கு தெரிவித்திருந்தார். தனக்கோ ஐக்கிய தேசியக் கட்சிக்கோ கருணா விவகாரத்துடன் தொடர்பு இல்லை என்பதும் அலிஸாகிர் மௌலான கருணா விவகாரத்தில் தனிப்பட்ட ரீதியிலேயே பங்காற்றினார் எனவும் விடுதலைப்புலிகளின் தலைமைக்கு விளக்குவதாக அக்கடிதம் அமைந்துள்ளதாம்!

### 'சத்தியமாய் நான் சந்திக்கப் போகேல்ல' - மகேஸ்வரன்!

கருணா விவகாரத்தில், மகேஸ்வரனும் கருணாவை சந்தித்துப் பேசினார் என்று சில ஊடகங்கள் கதை அவிழ்த்து விட்டிருப்பது பற்றி ஒரு செய்தியாளர் தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கேட்டபோது கருணாவிடமிருந்து வந்து மீளச் சேர்ந்திருக்கும் உறுப்பினர்கள் தெரிவிக்கும் விடயங்களிலிருந்தே கருணாவை யார் யார் சந்தித்தார்கள் என்பதை தாங்கள் உறுதி செய்துள்ளதாகவும் அந்த விடயங்களிலிருந்து மகேஸ்வரன் சந்தித்ததாக அவ்வுறுப்பினர்கள் தெரிவிக்கவில்லை என்ற அர்த்தம் தொனிக்க தமிழ்ச்செல்வன் விடையளித்தார். முன்னாள் இந்து சமய விவகார அமைச்சர் மீதான அவதூறான ஊடகச் செய்திகளிலிருந்து அவர், தமிழ்ச்செல்வன் வழங்கிய பதிலின் மூலம் விடுவிக்கப்பட்டுள்ளார். 'சத்தியமாய் எனது இரண்டு கண்களாலும் கருணாவை நான் நேரடியாகக் கண்டது கிடையாது. ரீ.வி யில் தான் பார்த்தேன்.' என்று மகேஸ்வரன் கூறியிருந்தார்.

### விடைஅறவிடமுடியா வினாக்கள்!

நோர்வேத் தூதுக் குழுவினருடன் விடுதலைப் புலிகள் நடத்திய பேச்சில், கருணா விவகாரம் முக்கியத்துவம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிந்தது. இலங்கை ஜனாதிபதி சமாதான முயற்சியில் ஆர்வமாக இருந்தால், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கருணாவின் பெயரால் சமாதான சூழலைக், கெடுப்பதைத் தவிர்க்கும் வகையில் ஜனாதிபதி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்று விடுதலைப் புலிகள், நோர்வே விசேடதூதுவரூடாக ஜனாதிபதிக்குக் கருத்துத் தெரிவிப்பை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. விடுதலைப் புலிகள் - அரசு ஆகிய இருதரப்பினர்களுக்குமிடையிலான பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கும் விடயத்தில் இப்பொழுது இரு முக்கிய விடயங்கள் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை ஜனாதிபதியிடமிருந்து தெட்டத் தெளிவான விடைகள் வந்து சேராத, 'விடைஅறவிட முடியா ஐயவினாவாக தொக்கு நிற்பதாக' அவதானிகள் பேசிக்கொள்கின்றனர். முதலாவது வினா விடுதலைப் புலிகளின் தலைமை எதிர்பார்க்கும் வகையில், கருணா விவகாரத்தைக் கையாள ஜனாதிபதி உரிய தீர்மானங்களை எடுப்பாரா? அவ்வாறு ஜனாதிபதி தீர்மானங்களை எடுக்கும் பட்சத்தில், நிரந்தர அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை கொடுத்து இடைக்கால அதிகார சபையைப் பற்றிப் பேசுவது என்றோ அல்லது நிரந்தரத் தீர்வையும் இடைக்காலத் தீர்வையும் ஏக காலத்தில் சமாந்தரமாகப் பேசுவது என்றோ மீண்டும் வலியுறுத்தாமல், முதலில் தனியாக விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை (ISGA) யோசனைகளின் அடிப்படையில் மட்டும் பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி முன்வருவாரா? இது இரண்டாவது வினா!

### கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தையல்ல!

இவ்விரு வினாக்களும் பல பல நூறு மில்லியன் டொலர்கள் பெறுமதிமிக்க வினாக்கள் என்றே தோன்றுகின்றன. தாங்கள் சமாதானப்பாதையில் மிகக் கடினமான அனுபவங்களுடன், மிகக் கஷ்டப்பட்டு உழைத்தக்கொண்டிருப்பதாகச்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# வீதியும் விதியும்

2

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் அதி நவீன தொழில்நுட்பத்தின் உச்சப் பயனை அனுபவிக்க தரமான வீதிகளோ தகுதியான வீதிப் பாவனையாளர்களோ எமது நாட்டில் இல்லை என்பதனை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

போக்குவரத்துத் தொடர்பான பாதுகாப்புத்துறை பேராசிரியர் Murray Mackay (PhD, professor emeritus of transport safety at the University of Birmingham, Edgbaston, England) அவர்கள் பின்தங்கிய மற்றும் வளர்முக நாடுகளில் பொலீஸாரின் சம்பளப் பற்றாக்குறை, லஞ்சம், தவறான சட்ட அமுலாக்கல் போன்ற பல நடைமுறைச் சிக்கல்கள் பற்றியும் தனது அறிக்கைகளில் குறிப்பிட்டு வருகிறார். மலேசியாவில் சகலருக்கும் ஒருமுகமாக அமுலில் இருக்கும் கடுமையான போக்குவரத்து நடைமுறைகள் வெற்றியளித்திருப்பது பற்றியும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அங்கு வீதி ஒழுங்கு என்பது மக்களின் கலாசாரமாக மாறிவிட்டது குறிப்பிடத்தக்கது. அதைவிடுத்து, விபத்தொன்று நடைபெறுமிடத்தில் காட்டுமிராண்டித்தனம் காட்டும் கலாசாரத்தை வளரவிடுவது முறையாகாது.

Staffordshire நகரச் சாரதிகள் மாத்திரம் 2002/03 காலப் பகுதியில் இரண்டு மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகளை (இலங்கை ரூபாவில் இது 35 கோடியைத் தாண்டுகிறது) வேகமாக வாகன மோட்டிய கட்டணமாகச் செலுத்தியிருக்கிறார்கள். இது அரசுக்குப் பெரும் வருமானம் ஈட்டும் ஒரு வழியே அல்லாது விபத்துத் தடுப்புக்கான ஒரு முயற்சியாக அமைவதில்லை என அவர்கள் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள். விபத்துக்கள் நடைபெறும் இடங்களில் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படாமல் அதிகம் லாபமீட்டும் இலக்குகளில் கமெராக்கள் தென்படுவதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள். புள்ளி விவரங்களுடன் சட்டத்தரணிகளை அணுகியிருக்கிறார்கள். திறந்த வெளியொன்றில் வெகு தொலைவில்கூட வாகனங்கள் ஏதுமற்ற நிலையிலும் வெறித்துக் கிடக்கும் வீதியைப் பார்த்தபடி வாகனத்தைக் குறைந்த வேகத்தில் செலுத்துவது எந்த விபத்தைத் தவிர்க்கப் போகிறது? எனவே, வேகக் கணிப்புக் கமெராக்கள் சமயம் அறிந்து செயற்பட வேண்டும் என்பது சாரதிகளின் வாதம். வேகக் கட்டுப்பாட்டின் நோக்கம் பணம் வெறும் பிடுங்கலாக அமையாது விபத்துத் தவிர்ப்பாக இருப்பது அத்தியாவசியம். வீதிக்கு வரும் அனைத்துத் தரப்பினரும் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதும் அவசியம்.

வீதி வடிவமைப்புக்களும் பெருமளவில் விபத்துக்களுக்கே வழிகோலுகின்றன. வீதிகளில் நாட்டப்படும் மின் கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்கள், முறைப்படி அமையாத சமிக்ஞைகள், சிதைவடையும் வீதிகள் மற்றும் நிலத்தடிச் சுரங்க வழிகளின் திறந்த வாயில்கள், வீதியோரக் கான்கள், வேகக் கட்டுப்பாட்டுத் திட்டிகள் என்பன ஏழை நாடுகளின் போக்குவரத்திற்குப் பெரும் சவாலாக அமைகின்றன.



சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல எந்த விபத்துமே இடம்பெறாத சாலைகளிலெல்லாம் வேகத்தடைத் திட்டிகளைப் போட்டுவிடுகிறார்கள். அவற்றிற்கு வித்தியாசமாகத் தெரியும்படி வர்ணம் பூசுதல் அவசியம். அதனையும் எவரும் செய்ய முன்வருவதில்லை. மரநிழலில் அல்லது இருளில் வேகமாக வரும் வாகன சாரதிகளின் கண்களில் இத்தகைய வேகத் தடைகள் புலப்படுவதில்லை. அதுவே விபத்திற்கு ஏதுவாகி விடுகிறது. பல மோட்டார் சைக்கிளோட்டிகள் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள். வேகத்தடைகளில் எகிறி விழும் வாகனங்களில் உடைவுகள் ஏற்படுகின்றன. இதனால் மோசமடையும் வாகன ஆரோக்கியம்கூட நாளடைவில் விபத்துக்களுக்கே வழிகோலும். தவிர, சுமுகமாகச் செல்லும் வாகனங்கள் வீதித் தடைகளில் பிரேக் போட்டுச் செல்லும்போது அத்தகைய இடங்களில் புகையை ஊதிவிட்டுச் செல்லுகின்றன. அதுகூடக் கண்ணுக்குப் புலப்பட்டாலென்ன புலப்படாவிட்டாலென்ன மக்கள் கூடும் இடங்களில் சுகாதாரக்கேட்டையே உருவாக்கும்.

வேகத் தடைகளை உண்டாக்குவதற்காக வீதிகளில் மண் திட்டிகளை அமைப்பது அல்லது வாய்க்கால்களை வெட்டுவதும் மிகவும் ஆபத்தானது. வீதிப் பராமரிப்பு ஏற்கெனவே குறைவாக உள்ள நிலையில் வெட்டப்படும் இடங்களில் வீதிகள் மேலும் சிதைவடையத் தொடங்குகின்றன. தமது சொத்துக்களைப் பாதுகாக்கச் சிலர் வீதியோரம் கற்களை அடுக்கி எல்லை போடுகிறார்கள். படையினரும் பாதுகாப்பு என்ற போர்வையில் பெருமளவில் சாலைகளை விழுங்கிவிடுகிறார்கள்.

கோவில்களில் திருவிழாக்கள் என்றால் காலையிலேயே ஒலிபெருக்கிகள் அதி உச்சஸ்தாயியில் ஒலிக்க ஆரம்பித்துவிடும். மக்கள் கூடுகின்ற – அமைதி பேணப்படவேண்டிய – இத்தகைய இடங்கள் சாலையோரம் அமைந்துவிட்டால் ஆபத்துக்கள் அதிகம். மக்கள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருப்பார்கள். வாகனங்கள் மிக நெருங்கி வந்துவிட்டாலும் ஒலி எழுப்பினாலும் எவர்காதிலும் பட ஒலிபெருக்கிகள் இடம் கொடுப்பதில்லை. ஊர்ந்துவரும் வாகனங்களுக்கு விலகி வழிவிடாதபோது பெருமெண்ணிக்கையில் வாகனம் குவிந்து நெரிசல் ஏற்படவும் ஏதுவாகிறது.

## நிர்மாணிகளே!

பிரதான வீதிகள், பெருநகரங்களை இருகூறிட்டுச் செல்வது மிகவும் சிக்கலான காரியம். கடைத்தெருவில் மக்கள் பெருந்தெருக்களை மறந்து நடுவீதிக்கு வந்துவிடுகிறார்கள். நீண்ட தூரம் கடைகளைக் கொண்டிருக்கும் பெருநகரங்களை விலக்கியே பிரதான சாலைகள் அமைதல் வேண்டும். அதைவிடுத்து, மக்களையும் சாரதிகளையும் சட்டங்களால் சமாளிக்க முனைவது சிக்கலானது. மக்கள் நெரிசல், வேகக் கட்டுப்பாடு, ஹோண் அடிக்கத் தடை எனப் பல சிக்கலானதும் முரணானதுமான அம்சங்கள் நகரப் பகுதியில் சந்திக்கும்போது பொலீஸார்பாடு கொண்டாட்டம்தான்.


முக்கியமான கட்டடங்கள், அலுவலகங்கள், வைத்தியசாலைகள், வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் பிரதான வீதியால் இருகூறிடப்படாமலும் வீதியோரமாக அமையாமலும் வீதிக்கு ஒரே பக்கமாகவும் அருகில் உள்ள உப வீதிகளிலும் அமைதலே பொருத்தமானது. நகர நிருவாக மற்றும் நிர்மாண அதிகாரிகள் இது விடயத்தில் சிரத்தை எடுப்பார்களா? புதிய பிரதான கட்டடங்களுக்கான அனுமதிகளை வழங்கும்போது அவற்றைப் பிரதான வீதிகளுக்குச் சற்று அப்பால் வழங்கினால் காலப்போக்கில் படிப்படியாக முழு நகரமும் வீதிகளை விட்டுத் தானாகவே சற்று விலகி அமைந்துவிடும். இதற்காகக் கடும் பிரயத்தனங்கள் தேவைப்படாது.

வீதிகளிலிருந்து குறிப்பிட்ட அகலத்திற்கு அப்பால் கட்டடங்களை அமைக்கும் தற்போதைய நடைமுறை மூலம் வீதியோரங்களில் ஆங்காங்கே உருவாகும் மைதானங்கள் மட்டும் விபத்துக்களைத் தவிர்க்கப் போதுமானவை அல்ல. வீதிகள் இதனால் குறுகியும் அகன்றும் காணப்படும் சீரற்ற தன்மையும் சிக்கலானதே. மேலும், பாரம்பரிய வீதிகள் பல வளைவுகளைக் கொண்டவை. இயன்றவரை இத்தகைய வளைவுகளை காலப்போக்கில் தவிர்த்தலே எதிர்காலத்தை எதிர்கொள்ளச் சிறந்ததாகும்.

அதிவேக சாலைகளைத் தனிமைப்படுத்துதல், வாகன வகைகளுக்கும் வேகங்களுக்கும் ஏற்ப தனித்தனியான மார்க்கங்கள், பாதசாரிகள், சைக்கிளோட்டிகள், மோட்டார் சைக்கிள்கள் குறுக்கிடவென விசேட அடையாளமிடப்பட்ட இடங்கள் எனப் பல வழிமுறைகளை உலக சுகாதார நிறுவனம் முன்மொழிந்து வருகிறது. இவற்றையெல்லாம் கருத்திலெடுக்கும் நாடுகள் விபத்துக்களைக் கணிசமான அளவு குறைக்கத் தொடங்கிவிட்டன. இந்தவகையில், A-9 வீதியில் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தின் முன்பாக வீதி பக்கவழியாக அமைக்கப்பட்டுள்ளமை ஒரு முன்மாதிரியான நடவடிக்கை என்று கொள்ளலாம்.

## அதிகாரிகளே!

வீதியில் அனர்த்தங்களைத் தவிர்க்க ஆலோசனைகளைத் திரட்டும் தகவல் மையங்கள் மற்றும் இணையத் தளங்கள் செயற்படுகின்றன. ஆலோசனைகள் சர்வதேச ரீதியிலோ உலக தரத்திலோ இருக்கவேண்டும் என்றில்லை. தத்தமது பிராந்தியங்களில் வீதி அனுபவங்களைச் சந்திக்கும் எவரும் கருத்துக்களைக் கிராமிய மட்டத்தில் அல்லது பிராந்திய ஒன்றுகூடல்களில் தெரிவித்துக் கலந்துரையாடித் தத்தமது பாதுகாப்புகளை உறுதி செய்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது. படித்தவரும் பாமரரும் எனச் சகலரும் தமது அனுபவப் பங்களிப்புகளைச் செய்தாக வேண்டும். குறைந்தபட்சம் நாயைக்கட்டி வளர்க்கவாவது ஒத்துழைக்க வேண்டும். வீதி ஒழுங்கு ஒரு சமுதாயக் கடமை என்கின்ற உணர்வு அனைவருக்கும் அவசியமாகிறது. இது அடுத்தவர் சமாச்சாரம் என்று எவருமே ஒதுக்கிவிடக் கூடாது. இன்றேல் இழப்புக்கள் தவிர்க்க இயலாதவை ஆகிவிடும். வசதி படைத்த நாடுகள் தெரிவிக்கும் ஆலோசனைகள் எல்லாம் எமக்கு ஒத்துவரும் என்றில்லை. எமக்கென ஒரு வீதிப் பாவனைக் கலாசாரம் பிறக்க வேண்டியது அவசியம். அது வெறும் சட்டங்களால் மட்டும் பேணப்படுவதாக அமையாமல் மனிதப் பண்புகளால் போற்றப்படுவதாக அமைதல் அவசியம்.



கூட்டங்களில் இரண்டு நிமிட மௌனத்திற்குப் பதிலாக இனிவரும் இழப்புக்களைத் தவிர்க்க வீதிப் பாதுகாப்புப் பற்றி இரண்டு நிமிடங்களாதல் சிந்திப்பதும் கலந்துரையாடுவதும் பொருத்தமானது. சகல துறைகளைச் சார்ந்த ஏற்பாட்டாளர்களுக்கும் இது பயனளிக்கும். விபத்துக்களும் வீதி ஒழுங்குகளும் பற்றிய தகவல்களைச் சகல சாரதிகளும் ஆர்வமுடன் படித்திடல் வேண்டும். இதற்கெல்லாம் அவர்களுக்கு அவகாசம் கிடைப்பதில்லை. வாகனங்களைக் குறித்த காலம் தப்பாமல் கிரமமாகச் சீர்பார்த்திட (service) வேலைகொள்வோர் சாரதிகளுக்கு நேரம் ஒதுக்குவதில்லை. ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கும் வாகனங்கள் பற்றி அக்கறைப்பட அவை அவர்களின் சொந்த வாகனங்களாக இருப்பதுமில்லை. வியாபார இலாபம் அதிகமாக இருக்கும்போது ஓடாய் உழைக்கும் வாகனத் தேய்மானங்கள் பற்றிய கவலை பலருக்கு அவசியமற்றதாகி விடுகிறது.

**மு.சிவநேசன்**

பொதுவாக அமுலில் உள்ள போக்குவரத்து விதிகள் நீண்டகாலமாக அமுலில் உள்ளவை. மிகப் பழையவை. நவீன யுகத்தில் ஈடு கொடுக்க இவை மட்டும் போதவில்லை. என்றாலும், அவற்றைக்கூட அடிப்படையில் கடைப்பிடிக்கப் பலரால் இயலவில்லை. சட்டங்களை அரசுதான் இயற்றியாகவேண்டும் என்று காத்திருக்கத் தேவையில்லை. அனுபவங்களைப் பகிரும் கூட்டங்களில் உள்ளூர் நடைமுறைகள் பற்றிப் பிரஸ்தாபிக்கப்படலாம். அவற்றை அந்தந்தப் பகுதிகளில் கடைப்பிடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

## பாதசாரிகளே!

உங்களை மற்றவர்கள் வந்து காப்பாற்றுவார்கள் என்று நம்பி மோசம் போய்விடாதீர்கள். இலங்கையில் வீதிவிபத்துக்களில் பாதிக்கப்படுபவர்களில் முன்னணியில் இருப்பவர்கள் 38 வீதமானவர்கள் பாதசாரிகளாகிய நீங்களே. முன்னேறிவிட்ட நாடுகளிலோ வாகனச்சாலைகளில் பாதசாரிகளைக் காணமுடிவதில்லை. எனவே, அவர்களுக்கெல்லாம் ஆபத்தில்லை. வீதியில் காயமடைவோரில் 26 வீதமானவர்களே வாகனப் பயணிகள். 14 வீதமானவர்கள் சைக்கிளோட்டிகளும், 12வீதமானவர்கள் மோட்டார் சைக்கிளோட்டிகளும் ஆவர். தமது வீடு வளவுகளுக்குள் இருப்பவர்களையும் வாகனங்கள் புகுந்து தாக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

விதிகளைக் கடைப்பிடிக்காத பாதசாரிகளிடம் தண்டம் அறவிடும் நடைமுறையொன்று நகரங்களில் அமுலுக்கு வந்திருக்கிறது. அசைய இடமின்றி மெதுவாக நகரும் வாகன அணிகளுக்குக் குறுக்காகப் பலரும் வீதியைக் குறுக்கே கடந்து நடந்து கொண்டிருப்பார்கள். பாதசாரிகள் தமக்கென ஒதுக்கப்பட்ட நடைபாதையைப் பயன்படுத்துவது முக்கியமானது. மேலும் மலிவாகப் பொருள் கிடைத்தாலும் அவர்களது இடத்தை ஆக்கிரமிக்கும் நடைபாதை வியாபாரிகளை நிராகரிப்பதும் முக்கியமானது. வேலியிட்டுப் பாதுகாக்கப்படாத நடைபாதையில் வீதியோரப் பக்கமாக நடக்கக் கூடாது. எனவே, மறுபக்கத்தை வியாபாரிகள் ஆக்கிரமிப்பதை ஊக்குவிக்கக்கூடாது. அவர்களை அகற்ற நிர்வாகங்களை மட்டும் நம்பியிருப்பது பயன்தராது.

நடைபாதை இல்லாத வீதிகளில் பாதசாரிகள் தாம் வலது கைப்பக்கமாக நடந்தால் எதிரேவரும் வாகனங்களுக்கு முகங்கொடுப்பது வாய்ப்பாக இருக்கும். இடதுபுறமாக நடந்து பின்னால்வரும் வாகனங்களையிட்டு அவதானமாக இருப்பது சிரமமானது.

(வளரும்)


கவிஞர் மேத்தா

# காலத்தை எதிரொலிக்காத கவிஞனை காலம் ஒரு போதும் எதிரொலிக்காது...

**மா**னுடத்தின் மேன்மைக்கான போராட்டக் கருவியாகக் கவிதைகள் இருக்க வேண்டுமென்று எழுதுகோலை எடுத்து நெம்புகோல் கவிதைகளை எழுதி வருபவர், இந்த நூற்றாண்டின் இளம் இதயங்களில் அடிக்கடி உச்சரிக்கப்படும் பெயர்...

யார் அவர்?

ஆம்!

அவர்தான் கவிஞர். மு.மேத்தா. காதல், உணர்ச்சி, புரட்சி, சமூகம் போன்ற கருத்துக்களைத் தருகின்ற உணர்வுபூர்வக் கவிஞராக வலம் வருகின்றார். புதுக்கவிதையை ஒரு புரட்சிகரமாய்த் தொடங்கி, எழுதி வருகிறார்.

*"காத்திருக்கும் வரை*
*நம் பெயர்*
*காற்றென்றே இருக்கட்டும்*
*புறப்பட்டு விட்டால்*
*புயலென்று புரியவைப்போம்"*

## மேத்தாவின் கவிதைகளில் புதுமை தவழும்

பேரறிஞர் அண்ணா "கொள்கை என்பது நாம் இடையில் உடுத்தும் ஆடை பதவி என்பதோ மேலே போட்டுக்கொள்ளும் துண்டு" என்பார் துண்டினை எந்த நேரத்திலும் உதறி எறியலாம். ஆனால் உடுக்கையை இழக்க முடியுமா? அண்ணாவின் ஆழமான இக் கருத்துப் போக்கில இன்னும் புதுமையான முறையில் மேத்தாவிடமிருந்து ஒரு கவிதை வெளிப்படுகின்றது. சோவியத் ஒன்றியம் உடைந்த போது உள்ளம் உடைந்த கவிஞர் மேத்தா,

*சட்டையில் அழுக்கிருந்தால்*
*வெளுத்துப் பார்க்கலாம்!*
*கொளுத்திப் பார்க்கலாமா* எனக் கேட்பது மிக ஆழமான சிந்தனை வெளிப்பாடாகும்.

அரசுத் தொட்டிலில் குழந்தைகளைப் போடுவதும், அவற்றை எடுத்து அரசு வளர்ப்பதும் நாட்டின் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல என்று மேத்தா கடுமையாக விமர்ச்சிப்பதோடு, "கொலைகாரர்களைப் பிடித்து கூண்டில் ஏற்றுவதை விட்டு, பொறுப்பைத் தட்டிக்கழிப்பதைத் தட்டிக் கொடுப்பதா? எனக் குமுறுகிறார்.

*"அரசாங்கத் தொட்டிலில்*
*குழந்தை கிடப்பது*
*திட்டத்திற்குக் கிடைத்த*
*வெற்றியாய் இருக்கலாம்..*
*தேசத்திற்குக் கிடைத்த*
*வெற்றியாகுமா?"*

என்று கேட்கிறார்.

அங்கத உத்தி கவிஞரிடம் அநாயாசமாக வந்து விழுகிறது.

"மனதில் உறுதி வேண்டும்" என்பார் பாரதியார். தமிழினத்தின் மன உறுதியைப் போல் உலகில் வேறெந்த இனத்திலும் காண முடியாது என்கிறார் மேத்தா! ஆம்!

*தமிழினமே.... தமிழினமே*
*உனக்கு மட்டும் தான்*
*உள்ளத்தில் உறுதி உண்டு*
*ஊர் ஊராக*
*உதைபடுவதற்கு!*

இந்த அங்கதச் சாட்டையடி யாவது தமிழினத்தின் மானத்தைக் காக்க அவர் கள் மனத்தை உறுதியாக்காதா?

*மனமே கோவில்!*
*மனிதனே தேவன்!* என்ற கவிதையில்
*மதங்கள் ஒன்றுசேரவேண்டும்*
மனிதன் தலைநிமிர்ந்து நிற்கவேணும். என்று புரட்சிகரமாய்ப் பாடுகிறார்.

*பக்தியைக் காட்டினால்*
*பரமன் மகிழ்வான்*
*நீங்களோ உங்கள் சக்தியை*
*காட்டுகிறீர்கள்.....*
*ஆண்டவன்*
*சங்கடப்படுகிறான்....*
*உடலில் இரத்தம்*
*ஓடவேண்டும் என்பதுதான்*
*இறைவன் நமக்கு*
*இட்ட கட்டளை!*
*தெருவில் அதனை*
*ஓடவிடுவது*
*தெய்வ நிந்தனை!*

என்று சொன்னவர் இறுதியாக –

*"மதாபிமானம்*
*இருக்கட்டும்.....*
*கூடவே கொஞ்சம்*
*மனிதாபிமானமும்*
*இருக்கட்டும் நண்பரே!"*

–என்று மத ஒற்றுமையைக் கட்டாயமாக்குகின்றார். பாராட்டப்படவேண்டிய ஒன்றே.

காதலைத் தனிமனித உணர்வாகக் கருதாமல் தேசம் தழுவியதான ஒரு சமூகப் பார்வையோடு பார்க்கின்றார்.

*"தேசத்தைப் போலவே*
*நம் வாழ்க்கையும்*
*தெருவில் நிற்கிறது"*

என்று நீண்ட தலைப்பில் காதலை தேசத்தோடு ஒப்பிடுகிறார்.

*காதலியைப் பிரிந்து தவிக்கும் காதலன்*
*உள்ளக்குமுறல்களோடு எழுதும்*
*வரிகள் அத்தனையும் நெஞ்சை*
*நெகிழ வைக்கும் வைர வரிகள்.*

"பக்கத்து மாநிலங்களுக்குப் பால் கொடுக்காமல் பார்த்துக்கொள்வதற்காக
நதி நங்கையரின்
மார்புகளிலேயே முடிச்சுப்போடும்
மாநில வெறியர்களைப் போல ....."
என்ற வரிகள் மட்டுமல்லாமல்

*"எழுது*
*எழுது*
*எழுது*
*என்னை*
*நேசிக்கிறாய்*
*என்றல்ல*
*நீ*
*வேறு எவரையும்*
*நேசிக்கவில்லை*
*என்றாவது*
*எழுது!*

என்ற கவிதை வரிகளின் நிஜம் வாசிப்போர் விழிகளில் நீருக்குப்பதில் நெருப்பைத்தான் வரவழைக்கும்.

*அது மட்டுமன்றி –*
*தேசப்படத்தில்*
*உள்ளகோடுகள்*
*கோடுகள் அல்ல!*
*விடுதலைக்கு வித்திட்ட*
*வீரத்தியாகிகளின்*
*விலா எலும்புக் கூடுகள்!!*

என்று ஒவ்வொரு தியாகியினதும் தியாகத்தை உலகமயமாக்கி

உலகமறியச் செய்யும் திறன்
இவருக்கு நிகர் இவரே.

எந்தக் கவிஞனும் தான் வாழ்கின்ற காலத்தின் கருத்துக்களை எதிரொலிக்காமல் விட்டால் காலம் கவிஞனை எதிரொலிக்காமல் விட்டுவிடும். சமுதாயக் கொடுமைகளுக்காக "கண்ணீர்ப்பூக்கள்" கோத்த நெம்பு கோல் கவிதை தந்தவரே மு.மேத்தாவாவார்.

*"இந்த தேசத்தில்*
*நீதிமன்றக் கட்டடங்கள்*
*குவிந்து நிற்கின்றன*
*நிதி சேர்க்கும் கட்டடங்களோ*
*நிமிர்ந்து நிற்கின்றன"* என்ற வரிகளிலும் சரி–

*"நாட்டில் - நீதிமான்கள்*
*கொள்ளைக் காரர்களாகி விட்டார்கள்*
*கொள்ளைக் காரர்களோ*
*நீதிமான்களாகி விட்டார்கள்*
*என்ற வரிகளிலும் சரி - முரட்டு வார்த்தைகளின்றியே*
*மனதைப் புரட்டும் படி செய்யலாம் என்று காலத்தின் குரலாகக் காட்டியிருக்கின்றார்.*

சமூக சிந்தனைக் கருத்து நிறைந்த இப்புதுக் கவிதை கட்டாயம் தேவையான ஒன்றே.

*சூரியனைத்துப்பாக்கி துளைப்ப*
*தில்லை*
*என்ற கவிதையிலே.....*
*அன்றொரு நாள்*
*பிரபாகரன் என்பது பெயராக இருந்தது*
*இப்போது*
*பிரபாகரன் என்பது பிரமிப்பாய் ஆனது!*
*இனிமேல்*
*பிரபாகரன் என்பது பிரளயமாய்*
*ஆகாதோ?*
*எங்கள் இலட்சியக் கனவுகளின்*
*சுமைதாங்கியே!*
*பொன்னாடை தோள் மீது போர்த்து*
*வதாய்ச் சொல்லி*
*உன் மீது சிலுவையை அறைந்தது யார்?*
*நீ ஏசுவல்ல -*
*ஆனால்*
*இறப்பிலும் நீ உயிர்த்தெழுவாய்!*
*ஒரு பிரபாகரனாய் அல்ல....*
*ஒரு இலட்சம் பிரபாகரனாய்!*
*உன்னுடைய*
*மூச்சுக்காற்று முகாமிட்ட*
*இடமெல்லாம்*
*பட்டாளம் தலை சாய்க்கும் பாசறை*
*- கள் உண்டாகும்.*
*உன்னுடைய*
*பாதங்கள் நடந்த பாதைகளில்*
*எல்லாம்*
*புல்லும் கூடப்புலியாக மாறும்!*
*உன்னுடைய சுட்டும் விழிச்சுடர்*
*தொட்ட*
*இடமெல்லாம்*
*ஜோதி கருவாகும்!*
*புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்*
*அங்கே உருவாகும்!*

என்று எமது தேசியத்தலைவரையும், தேசியத்தையும் அவர் எவ்வளவு தூரம் நேசிக்கிறார், எவ்வளவு தூரம் மதிக்கிறார் என்பதையும் உணர இந்த அற்புதமான கவிதை வரிகளே போதுமானதாகும்.

சமரபாகு **சீ.உதயகுமாரன்**

---

# அங்கும் இங்கும் வித்தியாசமானது....


**யாழ்**. போதனா வைத்தியசாலை மருத்துவ சிகிச்சைப் பிரிவில் (கிளினிக்) எந்நாளுமே நெருக்கடிதான். ஹர்த்தால்கள், வேலைநிறுத்தங்கள் என்று வந்தால் இப்பிரிவுகளுக்கு மேலும் ஒரு பின்னடைவு. அதனையடுத்து வருகின்ற கிளினிக்குகளில் நோயாளர்களின் எண்ணிக்கையில் மேலும் ஓர் அதிகரிப்பு... (தொலைக்காட்சியில் படம் பார்க்கவென்று வந்து அங்கு மேலும் ஒரு நெருக்கடியை ஏற்படுத்துகின்ற அந்த எண்ணிக்கையைக் கழிக்குக.)

இந்தச் சிகிச்சைப் பிரிவில் அதிகரித்துவரும் எண்ணிக்கையை ஓரளவு குறைப்பதற்கு மாண்பிமாய் லயன் செ.கேசவராஜன் சில காலத்துக்கு முன்னர் ஒருகருத்தினை வெளியிட்டதாக நினைவு... 'ரிப்பீற் கிளினிக்' என்பதை இல்லாமற்செய்து நோயாளர்களைப் பார்க்கும் கிளினிக்கிலேயே ஒரு மாதத்துக்குரிய மருந்துகளையும் கொடுத்துக் (கலைத்து) விடலாமே என்பதுதான் அவரது கருத்தாகும். நல்லயோசனை.... ஒரு காலத்திலே இங்கு அப்படித் தானே நடந்தது....

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கொழும்பிலே வாழ்ந்த காலத்திலே அங்குள்ள இருதய மருத்துவ சிகிச்சைப் பிரிவுக்குச் **(Cardiology Clinic)** சென்று வந்த அனுபவத்திலிருந்து சில குறிப்புக்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

கிளினிக் கொப்பிகளுக்குப் பதில் அங்கு இரண்டாக மடிக்கப்பட்ட கோவைகள் தான் **(Files)** பேணப்படுவதுண்டு. அதற்குள் வைத்திய சிகிச்சை விவரங்கள் எழுதுவதற்கான ஓர் அட்டையும். மருந்து விவரங்கள் எழுதுவதற்கான இன்னோர் அட்டையும் சொருகப்பட்டிருக்கும். ஆய்வுகூட அறிக்கைகளையும் அதற்குள் வைக்கலாம்.

இந்தக் கோவைகள் அந்த வைத்தியசாலையில் அதற்கென வுள்ள அலுவல் அறையில் பேணப்படும். அந்த சிகிச்சைப் பிரிவில் சம்பந்தப்பட்டவரும் சிகிச்சை பெறுபவர் என்பதற்கான ஓர் அடையாள அட்டை மட்டுமே நோயாளியிடம் இருக்கும். அதனை அங்கு காட்டினாற் போதும் அப்பொழுதும் அவரது கையில் கோவை கொடுக்கப்பட மாட்டாது. குறிப்பிட்ட பகுதிக்குப் போகும்படி சொல்வார்கள். கோவைகளும் ஒன்று சேர்க்கப்பட்டு அங்கு அனுப்பப்படும். அங்கே நோயாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வாங்குகளில் அமர்ந்திருப்பார்கள். பெயர் கூப்பிடப்பட்டு இவர் வைத்தியரை நெருங்கும் சமயத்திலேதான் இவரது கைக்குக் கோவை கிடைக்கும். அவருக்கு ஏதாவது 'விளங்கும்' என்றால் அந்தக் குறுகிய காலத்தில் அதைத் தட்டிப் பார்த்தால் சரி. வைத்தியர் நோயாளியைப் பார்த்ததும், மருந்து எழுதிய அந்த அட்டையை மட்டும் இவரிடம் கொடுப்பார். ஏதா




வது விளங்கும் என்றால் கியூவில் நின்று மருந்து எடுக்கும் வரை மட்டும் அதையும் பார்த்து மகிழலாம். எனக்கும் கொஞ்சம் விளங்கும் என்பதால் தானே (டிக்க.. டிக்கத் தண்ணுவ) இக் கட்டுரையை எழுதத் துணிந்தேன்.

அங்கும் ஒரு மாதத்துக்குரிய மருந்துகள் வழங்கப்படும். 'ரிப்பீற் கிளினிக்' என்றெல்லாம் கிடையாது. வைத்தியசிகிச்சைப் பிரிவுகளிலே எங்குமே ஒரு நோயாளிக்கு அடிப்படையாகச் சில மருந்துகளே தொடர்ந்து எழுதப்படும். மருந்து அட்டையிலே மேலே குறிப்பிட்ட அந்த மருந்துகளையே அன்றைய திகதியிட்டு 'திரும்பவும் எல்லாம்' **(Repeat All)** என்று அவர்கள் குறிப்பிடுவார்கள். நோயாளிக்குப் புதிதாக ஏதாவது 'கோளாறு' இருக்குமானால் மட்டும். அதற்குக் கீழே அதற்குரிய மருந்தினை எழுதுவார்கள்.....

கொழும்பு மார்புநோய் சிகிச்சைப் பிரிவில் அடுத்த கிளினிக் எப்போது என்றெல்லாம் திகதி குறிப்பிடப்படுவதில்லை. ஒரு மாதத்துக்குப் பின்னர் எப்போது வேண்டுமானாலும் போகலாம். ஏதாவது 'விக்கினம்' என்றால் இடையில் கூடப் போகலாம் போலிருக்கிறது! மாதக்கணக்கில் நின்று விட்டுப்போனாலும் கூட கோவையைத் தேடி எடுத்து இத்தனையாம் அறைக்குப் போகும்படி சொல்வார்கள். பார்க்கின்ற வைத்தியர்களும் அதுபற்றி எதுவும் விசாரிக்க மாட்டார்கள்.

அங்கு பின்பற்றப்படும் இத்தகைய நடைமுறைகளில் ஒருவருக்கு அங்கு தொடர்ச்சியான கிளினிக் சிநேகிதர்கள் என்றெல்லாம் வாய்ப்பதில்லை. ஒருமுறை கண்ட ஒருவரை பின்னர் காணமுடியாமற் போனால் 'அவர் இல்லைப் போலிருக்கிறது' என்று நினைத்துக்கொள்ள வேண்டியதுதான்! (இரண்டு கருத்தில் சொல்லுகிறேன்!)

இந்த நடைமுறைகள் எல்லாம் கொழும்பு இருதய சிகிச்சைப் பிரிவுக்கு மட்டுமே பொருந்தும். அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியதும் இருக்கிறது. நம்மிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதும்(?) இருக்கிறது என்பதற்காகவே இவ்வளவும் சொன்னேன்.

எப்படி இருக்கிறது எனது 'சமாளிப்பிக்கேசன்'?!

எவ்வாறெனினும் இந்த வித்தியாசத்துக்கான காரணத்தை அறிந்துகொள்ள எமது பகுதி 'கிளினிக்' நோயாளர்கள் மிகவும் ஆசையாக மட்டுமன்றி அவசரமும் காட்டுவார்கள் என்பது எனது நம்பிக்கை.

இந்த இடத்திலே ஒருவர் என்னை இப்படி கேட்டார். அடிக்கடி தலைதூக்குகின்ற சுகாதார ஊழியர்களின் 'சுகயீன லீவுப் போராட்டம் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? என்று.

இதிலே நான் சொல்ல என்ன இருக்கிறது? ஒரு சினிமாப் படத்திலே இப்படி ஒரு வசனம் பேசப்பட்டதாக எனக்கு ஞாபகம்.

'பைத்தியத்துக்கு வைத்தியம் பார்க்கின்ற வைத்தியருக்குப் பைத்தியம் பிடித்தால்...'

டாக்டர்களே! மன்னிக்கவும் இவை எல்லாம் எல்லோரையும் சிரிக்க வைக்கத்தான் என்பது உங்களுக்குத் தெரியும் தானே..!

- சண் அங்கிள் -



# காலம் எழுதிகளின் கதை

நாளை மழை கழுவிச்செல்லும்
மண்ணிருக்கும் காற்தடத்தையும்.
அவர்களை கந்தகநெடியாக வாங்கிய காற்று
தன் சுயத்துக்குத் திரும்ப
சுவடுமற்றுத் தொலைந்து போவர்.
இறுதியாக தாய் மண்ணை முத்தமிட்டு
எல்லை பிரிந்தேகிய போது
தொட்டுத் தடவிப்போயினர் பூக்களை.
அற்றைநாளே அவை வாடிவிழுந்திருக்கும்.
பயணக் களைப்பை மறக்க
பாடிய பாடல் பரவிய வனம்
மீண்டும் மௌனத்துறையும்.
அவர்களுக்கு கையசைத்துப்போன
பள்ளிச் சிறுவர்
வழமையான வழிப்போக்கரென எண்ணியிருப்பர்.
வழியில் கொஞ்சம் காலாற அமர்ந்திருந்த
மரநிழலுக்குத் தெரியுமா
தான் குடைவிரித்தது அக்கினி நாவுகளுக்கென்று?
இந்த வரம்பிற்தானே நடந்தனர்
இந்தக் கரையிற்தானே படகேறினர்
இதோ இந்தத் தோட்டவெளி கிணற்றில்தான்
எரிமலைகள் நீரருந்தின.
இடியுண்டு பூசையற்றுப் போக
எவரும் எட்டிப்பார்க்காதிருந்த கோயில் வெளியிற்தான்
கூட்டாக எல்லோரும் போட்டோ எடுத்தனர்.
உள்ளே கலங்கி
வெளியே விளங்கியபடி நின்றவருக்கு
சென்றவர்கள் பயணம் சொல்லிப் போயினர்.
நடந்தும்
படகேறியும்
புகைவண்டிக்குள் கரந்துறைந்தும்
பணிமுடித்தலுக்கிடையில் எத்தனை வதை
சாவுக்குக்கூட சாகஜம் வேண்டியுள்ளது.
கரும்புலிகள்.
கவிதை தோற்றுப்போவது அவர்களிடம்தான்.
அகமும் புறமும் அளவெடுக்க முடியாமலும்
உள்ளுறையும் அழுக்கத்தை அறியமுடியாமலும்
கவிஞன் தோற்பதும் அவர்களிடம்தான்.
வரலாறு திருப்பிகளாய்
வெடித்து அதிர்ந்திரும் வரை
வழியெங்கும் சிரிப்பெறிந்து திரிவர்
வீசிப்போகும் புன்னகை
இளமையாய் கிடக்கும் நெடுங்காலம்.
நானென்பது நானல்ல
அது நீயென்பதாய் அவர் தோழமை.
எட்டிப்பிடித்து கைவிரல் நீவி
மௌனமாய் அவர் தூறும் மொழிக்கு
அகராதி இல்லை
எத்தனை அர்த்தங்கள் விரிக்கலாம் அதில்.
குளிர்நாளில் கணப்பருகிலிருத்தலான பிணைப்பில்
பிரியும் நாள் நெருங்குவது புரியம்.
வாயால் ஒரு வார்த்தையுரைத்து
போய்வருகிறோமெனில் குறைந்தா போவர்.
பொல்லாத அசமடக்கிக் கள்ளரவர்
பேசவே மாட்டார்கள்
ஓங்கி முகத்திலறைந்துவிட்டு
அழ நினைக்கும் மனம்.
எப்படி முடியும்?
அது சாவுக்கு வழியனுப்பல் என்றாகிவிடுமே.
அறிந்தவர் இடிந்துதிர
அவர்கள் நடப்பர் திரும்பியும் பாராமல்.
இப்படி இருந்துபோக
எப்படி முடிகிறது அவர்களால்?
விளக்கில் தொட்டாலே துடிக்கும் மெல்லியருக்குள்
வெடியாய் சிதறுவோர் விளைவது எப்படி?
ஈசலின் இறப்புக்கே
இழவு கொண்டாடும் இனமொன்றில்
அவர்களின் தோற்றுவாய் சூத்திரம் என்ன?
ஓரிரண்டு பேருக்குள்ளே உறங்கிறது
அவர் உயிர்மையம்.
ஞானவிழிகளுக்கு மட்டுமே
நெருப்பாற்றின் உற்பவமும், கழிமுகமும் தெரியும்.
அஞ்ஞானக் கண்கள் அறியக்கூடியதல்ல
விஸ்வருபத்தின் அடியும் முடியும்.
போத்தலில் அடைக்க முடியுமா
பேராற்றின் பிரவாகத்தை?
புசு புசு மயிர் விளைந்த பூனைக்குட்டிகளாய்
மடி விளையாடிவிட்டு
விடைகொள்ளும் ஒவ்வொரு தடவையும்
சாவது அவர்களல்ல நாங்களும்தான்.
"கரும்புலிகள்
பலவீனமான இனமொன்றின் பலம்"
தலைவன் சொன்னதே சரி.
அவர்களை வரையத்தொடங்கியது பிழை.
ஆயினும் தூரிகை தோற்கும் போதெல்லாம்
ஓவியன் வெற்றியடைகிறான்.
கரும்புலிகளுக்கு மட்டுமே இந்தச் சமன்பாடு.
இனியும் தொடரும் அவர்கள் பயணம்
தேசம் ஒளிகொண்டு இலங்கும் வரை.
பிரிவதும் கவல்வதுமாய் போகுமெம் காலம்.
வாழ்வின் விதிமீறும் குழந்தைகளை
வரைவது எங்ஙனம்?
தோற்றுபோவதே ஓவியப் பெருமை.

- புதுவை இரத்தினதுரை.

(கரும்புலிகள் நினைவாக)



# கரும்புலிக ளாலீழம் உயர்ந்ததுவே!

உள்ளத்து உணர்வுகளை யிறுக்கமாக்கி
உறவுக ளிசைவுக ளின்று நீங்கி
எள்ளிநகை யாடுநிலை யெம்மவர்க்கு
எதிர்காலத் தொருபொழுதும் தோன்றாவண்ணம்
துள்ளியெழுந் தசையாத இலட்சியத்தோ
டுறுதியுடன் தம்முயிரி னாயுதத்தால்
நள்ளிரவில் களம் நுழைந்து பகை முடிக்கும்
கரும்புலிக ளாலீழம் உயர்ந்ததுவே

அதிகார மமதையினா லழிவைநாடும்
ஆட்சியினைச் சுவைத்து நிற்கும் சந்திரிகா
விதியழுத்தத் தடுமாறிப் பழிக்கஞ்சாது
வேதனையை விலை கொடுத்து வாங்குவதால்
சதி விளையு முள்ளத்துச் சூதினாலே
சினமூட்டி புலிகளொடு முட்டி மோதின்
பதிகாக்கும் கரும்புலிகள் கணம் திரண்டு
பதை பதைக்கச் சிங்களத்தைத் தகர்த்தெறிவார்

வேங்கைகளின் வல்லமையால் நிமிர்ந்தெழும்பும்
வெல்லுதற்கு மரியதான தமிழீழத்தின்
வீங்குகின்ற தோள்முறுக்கும் புலிகள் படை
வீணர்களி னினவாத சதிகளெல்லாம்
ஓங்கியொலி முழங்குகின்ற அதிரடியால்
ஒழித்தழிக்கும் போரினிலே யுள்நுழைந்து
ஏங்கிமுழு வுலகுமொன்றா யதிரும் வண்ணம்
எத்தர்களின் கொழுப்படக்கும் கரும்புலிகள்.

- "மாரீசன்"

# தர்மாவேசம்

நரிகளுக்கு மட்டும் நலவாழ்வு கிட்டிற்று
குள்ளத்தனமும், கொடுமனமும்,
கொலைவெறியும்,
வஞ்சங்கள் செய்தபடி தப்பிக்கும் இலாகவ்மும்,
குளிபறிக்கும் நெஞ்சும் கொண்டு
திரிகின்ற
நரிகளுக்கு மட்டும் நலவாழ்வு கிட்டிற்று.
ஆற்றல், அறிவு அசராத விறல், வேகம்
பூண்ட விலங்கினங்கள்;
பொய்களவு ஏமாற்றல்
ஏதும் அறியாது எதார்த்தத்தில் மிகத்தாழ்ந்து
தம்பாட்டி லொதிங்கித்
தளர்ந்து திரிவனவாய்;
சுயத்தை மறந்து சோம்பிக்கிடப்பனவாய்;
குள்ள நரிகளுக்கு குழையடித்து வாழ்வனவாய்;
மாறி...... பிழைக்கின்ற
வரலாறு தோன்றிற்று
இந்த உவமானம் விலங்குக்கு மட்டுமல்ல.
இந்த உலகம் எவ்வாறு
என்றிருந்து
தந்திரத்தால் வெல்லும் தலைமுறையைத் தோற்றிற்று?
குள்ளத்தனமும்,
குறுக்குவழியில் முயல்வும்,
அதர்மத்தின் ஆசிபெற்று ஆழுந்தலைக்கனமும்,
துரோகமிட்டு, அன்பைத்தூக்கிலிட்டு இலாபமுறச்
சுயநலத்தைக் காத்து சுகந்துய்க்கும் நடப்பியலும்,
'வாழ்க்கை முறை' ஆனால்...
நாகரிகம் இது என்றால்...
இந்த உலகம் இறுதி அழிவை நோக்கிச்
செல்கிறது என்பதுவே
செய்தியாக மிஞ்சிற்று.

- த.ஜெயசீலன்

# ரீவி மான்மியம்

தொப்புள்தன்னை நங்கை காட்டி
தொடையை அசைத்து ஆடிட
செப்பமாக அடி உதைகள் கண்டு
சிரித்து இளைஞன் இரசிக்கிறான்
அப்பு ஆச்சி இதனைக் கண்டு
அருவெருத்து கண்ணைப் பொத்திட
தப்பாது வாலிபர்கள் கண்டு
தம்மை மறந்து இரசிக்கிறார்
இப்படியாய் இந்த மண்ணில்
இந்த ரீவி ஓடினால்
எப்படி இந்த நாட்டிலினில்
எங்கள் பண்பாடு வளர்ந்திடும்?

* * *

இடித்திடித்து வாலிபனை
இளைய நங்கை வீழ்த்திட
துடித்தெழுந்த வாலிபனும்
தூக்கியவளைக் கொண்டு போய்
மடியில் கிடத்தி மாதுதன்னை
மகிழ வைக்கும் வேளையில்
அடுக்களையில் பாலும் பொங்கி
அடிச்சட்டியதும் புண்பட
தடுக்கில் பிள்ளை பாலுக்கழ
தண்ணீர் பருக்கி தாயவள்
அடுத்த படம் பாற்க வென்று
அருகில் வந்து அமர்ந்தனள்.

- விகடகவி



# சோரம் போதல்

உனது
நுகத்தடிக்குக் கீழ் தினமும்
நடந்து முடிகிறது
தகாப் புணர்ச்சி;
வன்முறையின் கடிவாளத்தோடு.....
சுகமென்பது புழுக்கங்களை தீர்த்தலென
நினைக்கிறாய் நீ அப்போதிருக்கும் நெருக்கம்
பிறிதோர் பொழுதில் வேற்று
கிரகவாசியாய் எதிர்ப்புணர்வில்
நெட்டித் தள்ளி விட ஏமாற்றமடைந்து
நுரைத்துத்ததும்பும் என்னை வேதனையோடு
உள் இழுத்துக் கொள்கின்றேன்.....
ஆசைகள் நீக்கப்பட்ட – என்னுடைய
வார்த்தைகளில் எப்போதும் உனக்கோர்
விருப்பம் இருப்பதால்
பகிர்ந்து கொள்ளல்
சாத்தியமற்று ஆரம்பம் முதலே எம்மிடம் இருந்து
விலகிப் போகிறது.....
இது
துக்கம் என்பதைப் புரிந்துகொள்.....
உனக்கென்ற வாசல்கள்
திறந்திருக்கும் போதே
காண நினைக்கிறேன் – என்
விரல் பற்றிக் கொண்ட உன் நகர்வினை.....
பூமிக்கு வெளியே இரண்டு
குயில்களின் உரசலில் தென்படும்
மென் முத்தங்களைப் போன்ற
ஸ்பரிசங்களை.....
சிறு வருத்தத்துடன்
மெலிதான மயிற்பீலியளவு
வெளி இன்று
என்முகம் முன் அச்சுறுத்திக் கொண்டே
மெல்ல விரிகிறது.....
கடக்க முடிவதில்லை என்பதால்
விழுந்து கிடக்கும் வாழ்வை
பெரிது..... எனக் கூறி நிற்கிறேன்.....
சாத்தியமெனில்; பின்பொருநாள்
சோரம் போதல் புனிதமென்றுணரும்
அச்ச உணர்விற்கு
நான் பயணப்பட்டிருப்பேன்......!
அவலம் என்று புலம்ப – அப்போது
ஏதும் இராது.....!

- எ.மருதம்கேதீஸ்.

## சமாதான முயற்சிகளில்...

(I பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் ,எரிக்சொல்ஹெய்ம் தெரியப்படுத்தினார். நாள்கள் நகர. நகர புதிது புதிதாக எழும் சிக்கல்களைப் பார்த்தால் சமாதானப் பாதை தொடர்ந்தும் கற்களும். முட்களும். புதர்களும். குழிகளும் நிறைந்ததாகவே தோன்றுகின்றது. கற்களும் . முட்களும். புதர்களும். குழிகளும் யாருடைய கால்களுக்கும் மெத்தையாக நிச்சயமாக இருக்காது!.

புதன்கிழமை ஜூன் 30ஆம் திகதி கிளிநொச்சியில் பேச்சுக்கள் முடிவடைந்ததும் மதிய போசனத்தை அருந்திய நோர்வே பிரதிநிதிகள் இனிப் போயாவது ஜனாதிபதியைச் சந்திப்போம் என்ற நம்பிக்கையுடன் கொழும்புக்கு ஹெலிகொப்டரில் பறந்தனர். வன்னியில் பிரதிபலித்த அதிருப்தி நிறைந்த உணர்வலைகளை ஜனாதிபதியிடம் எப்படிச் சந்தைப்படுத்துவது என்ற மெல்லிய ஏக்கம் எரிக்சொல்ஹெய்மிடம் காணப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.



# விநியோகஸ்த்தர்கள் தேவை

இலங்கையின் குளிர் பானங்களுக்கான
சந்தையில் நான்காவது போட்டியாளராக
International Beverages (Pvt)Ltd.
நிறுவனம் தடம்பதித்துள்ளது.
இந் நிறுவனம் REFRESH எனும் புத்தம் புதிய
குளிர்பான வகையினை கொழும்பு மற்றும்
அதனைச் சூழவுள்ள பகுதிகளில்
வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
இந் நிறுவனத்தின் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் முகமாக
கீழ்க் காணப்படும் பிரதேசங்களில் அன்றாட
பாவனைப் பொருட்களை (FMCG) விநியோகம் செய்வதில்
அனுபவமுள்ள விநியோகஸ்த்தர்கள் தேவைப்படுகின்றனர்.




யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு,
மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு

**தகைமைகள்:**

★ நல்ல நிதி நிலையினைக் கொண்டவராகவும், வங்கி உத்தரவாதம்/பண வைப்புகளை வழங்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
★ தற்போது, 150 - 200 கேஸ்களை கொண்டு சென்று விநியோகிக்கக் கூடிய வாகன வசதியினை கொண்டிருத்தல் வேண்டும்.
★ விநியோகப் பிரதேசத்தில் குறைந்தது 1500 சதுர அடியினைக் கொண்ட களஞ்சிய சாலை வசதியினை கொண்டிருத்தல் வேண்டும்.
★ சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகத்தில் நன்கு தேர்ச்சிபெற்ற விற்பனைப் பிரதிநிதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.

*10 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.*

INTERNATIONAL BEVERAGES (PVT) LTD®

The Managing Director,
1B, Ocean View Tower Building, Station Road, Colombo 04. Tel: 2580202





பெயாரோஸ் சுபமாங்கல்யம்

## விரைவில் நீங்கள் திருமணம் செய்து கொள்வதாயின் திருமணத்திற்கான செலவுகளை நாம் ஏற்போம்



நிலங்கா, துஷார்
(2003/2004 பெயாரோஸ் சுபமாங்கல்யம் வெற்றியாளர்)

2005ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பு திருமணம் செய்து கொள்ளவிருக்கும் ஒரு இளம் பெண் தனக்குப் பிடித்த இடத்தில் திருமணத்தைச் செய்து கொள்ள நாம் உதவி செய்வோம். இதற்கான பெயாரோஸ் சுபமாங்கல்யம் 2004ம் ஆண்டு ஆரம்பித்துவிட்டது.

மணப்பெண்ணின் புடவை, தங்கச் சங்கிலி, பாதணிகள், தோழியர் இருவரின் புடவைகள், ஆபரணங்கள், பாதணிகள், முக அலங்காரம், தலையலங்கார ஆலோசனைகள், மலர் அலங்காரம், மணமேடை அலங்காரம், மேசை அலங்காரம், திருமண கேக், திருமண ஸ்ரக்சர் கேக், திருமண அழைப்பிதழ் கேக் பெட்டிகள், DJ இசை, புகைப்படங்கள் வீடியோ படங்கள், 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள் இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை கதையாக எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறை அல்லது சசே உறையை இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

முடிவுத் திகதி 2004 ஜூலை 31.

பெயாரோஸ் சுபமாங்கல்யம்,
ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிட்டட்.
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.

Sterling Flowers (Pvt) Ltd.
Salon Nayana
SAREE MANDIR

Fair Rose
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste




மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு

# சிறுவர்களுக்காக *LIC* வழங்கும் – 'ஆசீர்வாதம்'

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபன (இலங்கை) லிமிட்டெட் LIC அண்மையில் அறிமுகப்படுத்திய 'ஆசீர்வாதம்' என்ற குழந்தைகள் நல்வாழ்வுத் திட்டம் உங்கள் பிள்ளையின் எதிர்காலம் பற்றிய ஆசைக்கனவுகளை நிறைவேற்ற உங்களுக்குக் கைகொடுத்து உதவும் என்று LIC தெரிவிக்கிறது.

'ஆசீர்வாதம்' - வருடாந்த போனஸ்கள் மற்றும் நன்மைகள் மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வளமூட்டுவதோடு, அவர்களின் கல்வி, திருமணம் முதலியவற்றிற்குத் தேவையான நிதியையும் வழங்கும்.

LIC இலங்கை லிமிட்டெட் பொது முகாமையாளர் மதியாபரன் இதுபற்றித் தெரிவிக்கையில்-

பிள்ளைகளுக்கு முழுமையான நன்மைகளை வழங்குவதும், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது அவர்களின் பெற்றோருக்கு ஏற்படக் கூடிய நிதிப் பளுவைத் தணிப்பதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.- என்று கூறினார். முழுக் காப்பீட்டுத் தொகையும் குறிப்பிட்ட திகதியில் (முதிர்ச்சித் திகதி) வழங்கப்படும் என்பதால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடர்களுக்கும் இது காப்பீடாகிறது. 18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட எந்தவொரு பெற்றோரும் தனது பிள்ளைக்காக ஆகக் குறைந்தது இரண்டு லட்சம் ரூபா தொகைக்கு இக்காப்பீட்டைப் பெற்றுப் பிள்ளையின் எதிர்காலத்திற்கு மகுடம் சூட்டலாம்.

பிள்ளைகளின் உடல்நலத்தைப் பாதுகாத்தல், அவர்களின் கல்விக்கான வசதிகளைச் செய்து கொடுத்தல், அவர்களின் வளமான வருங்காலத்திற்கான நிதிப் பாதுகாப்பை வழங்குதல் என்பன ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும். தமது பிள்ளையை ஒரு வைத்தியராக, பொறியியலாளராக, சட்டத்தரணியாக அல்லது ஒரு தலைசிறந்த விளையாட்டு வீரராக ஆக்கி மகிழ்வதற்கும், பிள்ளையின் திருமணத்தைக் கோலாகலமாக நடத்துவதற்கும் பெற்றோர் விரும்புகின்றனர். ஆனால், பணப் பிரச்சினை அல்லது வாழ்க்கையின் எதிர்பாராத நிகழ்வுகள் காரணமாக இந்த ஆசைகளை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்படலாம்.

இந்த விடயங்களில்தான் 'ஆசீர்வாதம்' உங்களுக்கு உற்ற துணையாகும் என்கிறார் மதியாபரன்.

பெற்றோர் தமது ஆசைக் கனவுகளை நிறைவேற்றுவதற்காகத் தமது பிள்ளையின் பெயரில் இப்போதே பணத்தை முதலீடு செய்ய அது வாய்ப்பளிக்கிறது. பிள்ளைக்கு உரிய வயதாகும்போது பெருந் தொகைப் பணத்தை வழங்குவதன் மூலம் பெற்றோரின் கனவுகளை 'ஆசீர்வாதம்' நனவாக்கும். "நீங்கள் கனவு காணுங்கள். அவற்றை நனவாக்க 'ஆசீர்வாதம்' துணைசெய்யும்" - என்று கூறுகிறார் மதியாபரன்.

1961ஆம் ஆண்டு இலங்கையின் காப்புறுதித் தொழில் தேசியமயமாக்கப்படும் வரை LIC நிறுவனம் அதில் ஒரு முக்கிய பங்காளியாகச் செயற்பட்டு வந்தது. 2002ஆம் ஆண்டில் மீண்டும் இலங்கைக்கு வந்துள்ள நாம், பார்ட்லீஸ் என்ற பிரபல நிதி நிறுவனத்துடன் இணைந்து ஆயுட்காப்பீட்டுச்சேவையை வழங்குகிறோம். LIC நிறுவனம் உலகரீதியாக ஐந்து கோடி அமெரிக்க டொலர் சொத்துக்களையும், பத்துலட்சம் முகவர்களையும் கொண்டுள்ளது.

LIC இலங்கை நிறுவனம் முதலாவது ஆண்டிலேயே மிகச் சிறப்பாகச் செயற்பட்டு, அதன் இலக்குகளை 100 சதவீதத்தினால் விஞ்சியுள்ளது. மாறிவரும் சமூக - பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்ப, வெவ்வேறு தரப்பு வாடிக்கையாளர்களுக்கு உகந்த - புதுமையான - காப்பீட்டுத் திட்டங்களை அறிமுகம் செய்வதற்குத் தொடர்ச்சியாக முயல்வது LIC நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இக்கொள்கைக்கு அமையவே, 'தீவ்யாங்கனா' என்ற பெயரில் பெண்களுக்கான விசேட ஆயுட் காப்புறுதித் திட்டத்தையும், 'ஆசீர்வாதம்' என்ற பெயரில் குழந்தைகளுக்கான நல்வாழ்வுத்திட்டத்தையும் நாம் இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளோம். இதுபோன்ற மேலும் பல காப்பீட்டுத் திட்டங்களையும் நாம் ஆரம்பிக்கவிருக்கிறோம் - என்று LIC தெரிவித்துள்ளது.

## டயலொக் ஜி.எஸ்.எம். பெற்றுள்ள 10 லட்சம் வாடிக்கையாளர்கள்

டயலொக் ஜி.எஸ்.எம். நிறுவனம் ஒரு மில்லியன் வாடிக்கையாளர்கள் எனும் எல்லையை எட்டியுள்ளது. இதற்காகக் கடந்த வாரம் முதல் டயலொக் தொலைபேசியிலிருந்து மற்றொரு டயலொக் தொலைபேசிக்கு உள்வரும் அழைப்புகள் இலவசம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 25 மில்லியன் ரூபா செலவில் செவிப்புலன், கட்புலன் இழந்தோர் கல்வியகத்தை நிறுவவும் அது திட்டமிட்டுள்ளது.

இந்த ஒரு மில்லியன் மைல் கல் எல்லையை எட்டியதை அறிவிக்கும் முகமாக அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் டயலொக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹான்ஸ் விஜேசூரிய, டயலொக் நிறுவனத்தின் விற்பனை சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நெளஷாட் பெரேரா, நிதி பொது முகாமையாளர் டபிள்யூ. சைடான் வான் மஹாயுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் டயலொக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹான்ஸ் விஜயசூரிய உரையாற்றுகையில் –

இலங்கையிலுள்ள எமது வாடிக்கையாளர்களால் நாம் கௌரவிக்கப்பட்டுள்ளோம். ஒரு மில்லியன் வாடிக்கையாளர்கள் தமது பற்றுறுதியையும் நம்பிக்கையையும் எம்மீது வைத்துள்ளனர். செல்லிடத் தொலைபேசி தொடர்பு வழங்குவது தொடர்பில் உலகளாவிய ரீதியில் இலங்கையை முன்னிலையில் திகழச்செய்ய வேண்டும் எனும் நோக்கில் செயற்பட்டு வரும் எமக்கு எமது வாடிக்கையாளர்கள் காட்டிவரும் நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். இந்த மில்லியன் மைல் கல் புத்தமைவு, சேவைப் பெருக்கம், சேவைச் சிறப்பு ஆகியவற்றுடன் கூடிய ஒரு ஆரம்பமே - எனக் கூறினார்.

இம்மாநாட்டில் டயலொக் ஜி.எஸ்.எம்.மின் விற்பனை, சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நெளஷாட் பெரேரா உரையாற்றுகையில், 1995ஆம் ஆண்டு முதல் நாம் எமது சேவையை ஆரம்பித்தோம். தொடர்ச்சியாக ஒன்பது ஆண்டுகள் எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் சிறந்த சேவைகளை வழங்கிவருவதே இன்று ஒரு மில்லியன் எனும் இலக்கை நாம் எட்டுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

தொடர்ந்து எமது வாடிக்கையாளர்களுக்குப் பல புதிய சேவைகளை வழங்கவுள்ளோம். இலங்கையில் காணப்படும் 400 இணைப்பு நிலையங்களின் மூலம் சேவை இணைப்புகளை வழங்கிவரும் நாம் இவ்வருட இறுதிக்குள் மேலும் எமது சேவைகளை விஸ்தரிக்கவுள்ளோம் - எனக் கூறினார்.

